நன்றி - நூலகத்திட்டம்

சரிநிகர்
SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி.

இதழ்32 16-31 ஒக்ரோபர் 1993 விலை 7/=

போனமச்சான் திரும்பி வந்தார்

கோவணத்தோடே

போனார்காண் என்மச்சான் போரென்று கிளாலிக்குப்
போனார்காண்; போன சிலநொடிக்குள் - ஆனார்காண்
ஆடையற்ற கோவணத்து ஆண்டியராய் ஆனார்காண்
பீடையுற்ற ஆட்சியர்பேச் சால்.

ஈழமோகம்

# "எங்களுடைய மண்ணிலிருந்து எங்களை வெளியேற்ற முடியாது"

## - வவுனியா ஸ்ரீராமபுர மக்கள்

வவுனியா மாவட்டத்தில் காத்தார் சின்னக்குளம் கிராமசேவகர் பிரிவில் குடியிருக்கும் 39 குடும்பங்களையும் உடனடியாக வெளியேற்றும்படியும், அவர்கள் வெளியேறாவிடின் பொலிஸாரின் உதவியை நாடும்படியும் அதிகாரிகள் கிராமசேவகருக்கு உத்தரவிட்டுள்ளனர்.

வெளியேற்றுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 39 குடும்பங்களில் 23 குடும்பங்களிடம் காணிக்கான அனுமதிப்பத்திரம் உள்ள போதும் இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் புதிதாக அமைக்கப்பட்ட ஆயிரம் வீட்டுத் திட்டப்பகுதிகளில் ஒன்றான ஸ்ரீராமபுரம் கிராம வீடமைப்புத்திட்டம் விரைவில் ஜனாதிபதியால் திறந்து வைக்கப்படவுள்ளதாகவும், அதனையொட்டியே இங்கு குடியிருந்த மக்களை வெளியேற்றுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

இவ்வுத்தரவு குறித்து, அபிப்பிராயம் தெரிவித்த கிராமவாசி ஒருவர் "இது எமது சொந்த மண் - இங்கிருந்து எம்மை யாராலும் வெளியேற்ற முடியாது" எனக் குறிப்பிட்டார்.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது, ஸ்ரீராமபுரம் வீடமைப்புப் பகுதியில் உள்ள 39 குடும்பங்களையும் உடனடியாக வெளியேற்றும்படி ஒக்ரோபர் 7ம் திகதி ஒப்பமிடப்பட்ட கடிதமூலம் வவுனியா பிரதேச செயலர் டி.வி.அமிர்தலிங்கம் காத்தார் சின்னக்குளம் கிராம சேவையாளரைப் பணித்துள்ளதாகவும், அவர்கள் வெளியேறாவிடின் பொலிஸாரின் உதவியை நாடும்படி கூறியுள்ளதாகவும் தெரியவருகிறது.



ஏற்கனவே ஒரு மாதத்திற்கு முன்னர் வாய்மூலமாக பணிக்கப்பட்ட போதும் இப்போது எழுத்து மூலமாக வெளியேற்ற உத்தரவு பணிக்கப்பட்டுள்ளது.

77ம் ஆம் ஆண்டின் இனப்படுகொலையையடுத்து மலையகத்திலிருந்து இடம் பெயர்ந்த மக்களே ஆரம்பத்தில் தச்சன்குளம், வேப்பங்குளம், கோவிற்குளம் பகுதிகளில் குடியேறியிருந்தனர். எனினும் விமான நிலைய விஸ்தரிப்பு என்று கூறி அரசினால் அப்பிரதேச காணிகள் ஆக்கிரமிக்கப்பட்ட பின் இந்த மக்கள் ஸ்ரீராமபுரத்திற்கு வந்து காடழித்து குடியேறினர்.

89ம் ஆண்டு காலப்பகுதியில் 102 குடும்பங்கள் குடியிருந்தன. 11.10.89இல் இராணுவத் தாக்குதலில் 13 பேர் கொல்லப்பட்டதையடுத்து, நாட்டின் வேறு பகுதிகளுக்கும், தமிழ் நாட்டிற்கும் இடம்பெயர்ந்த இம்மக்கள் பின்னர் மீளவும் இங்கு குடியேறியிருந்தனர். இக்குடும்பங்களில் 23 குடும்பங்களிடம் இக்காணிகளுக்கான அனுமதிப்பத்திரங்கள் உள்ளன.

உடனடியாக வெளியேறுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதால் தமது பயிர்ச்செய்கையையும் கைவிட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள் இந்த மக்கள்.

இவ்வாறு தமக்கு இழைக்கப்பட்ட அநீதியைக் கண்டித்து இக்குடும்பங்கள் யாவும் கிராமசேவகருக்கு வழங்கியுள்ள கடிதத்தில் மூன்று கோரிக்கைகளை விடுத்துள்ளனர். ஒன்று; நீண்ட காலமாகவே குடியிருக்கும் தமக்கு இவ்வீடமைப்புத் திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். இரண்டு; பயிர் செய்கையையும், கூலித்தொழில்களையும் கைவிட்டு இடம்பெயரும் தமக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும். மூன்று; வீடமைப்புத் திட்டத்தில் தமக்கு வீடுகள் வழங்கும் வரை பாதுகாப்பான பகுதியில் தற்காலிக குடிசைகள் அமைத்துத் தரவேண்டும்.

இவ் வெளியேற்ற உத்தரவு தொடர்பாக சரிநிகர், மாகாண வீடமைப்பு அதிகாரசபை உயரதிகாரி ஒருவரிடம் வினவிய போது இவ்வுத்தரவிற்கும் தமக்கும் எதுவித தொடர்பும் கிடையாது எனவும், இது அரசாங்க அதிபரின் அதிகாரத்திற்குட்பட்டது எனவும் குறிப்பிட்டார். மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் மாகாண அரசுக்கு உட்பட்ட இவ் ஆணைகள் யாவும் இப்போ நேரடியாக அமைச்சிடம் இருந்தே தமக்கு பிறப்பிக்கப்படுவதாகவும் அவர்களின் ஆணைகளுக்கு உட்பட்டே தமது செயற்பாடுகள் அமைவதாகவும் கூறினார்.

மறுபுறத்தில் இவ்வீடமைப்பு திட்ட பகுதியில் வாழும் குடும்பங்களை

→ 12

## பிள்ளையாருக்கும் தகனக்கிரியை

செப்டம்பர் 28ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட 'யாழ்தேவி' இராணுவ நடவடிக்கையில், யுத்தத்தில் பங்கு கொண்டவர்களைவிடப் பொதுமக்களுக்கே பாரிய இழப்புக்கள் ஏற்பட்டதாக அறியப்படுகிறது.

யுத்தம் ஆரம்பமான முதலாம் நாள் இராணுவத் தரப்பில் உயிர்சேதங்கள் குறைவே. ஆனால் இரண்டாம் நாள் யுத்தத்தில் இராணுவத்தரப்பில் உயிர் இழப்புகள் அதிகமாக ஏற்பட்டது. இதனால் ஆத்திரம் அடைந்த படையினர் குண்டுவீச்சு விமானங்கள் மூலம் சாவகச்சேரியிலும் அதனை அண்டியுள்ள பகுதிகளிலும் மட்டும் எண்பதுக்குமதிகமான குண்டுகளைப் பொழிந்துள்ளனர்.

சாவகச்சேரி இலங்கை வங்கி கட்டிடம், சாவகச்சேரி சந்தை, முருகன் மில் உட்பட பல வீடுகளும் குண்டு வீச்சால் முற்றாக சேதமாக்கப்பட்டன. இப்பகுதியைச் சேர்ந்த மரக்காலை உரிமையாளர் செல்வராஜா என்பவரின் வீட்டில் அமைக்கப்பட்ட பதுங்கு குழியின் மீது

→ 12

## நடுத்தெருவில் அகதிகள்



கலைக்கப்பட்ட இந்து பரிபாலனசபை அகதிமுகாம்

ஒக்ரோபர் நாலாம் திகதி. நேரம் இரவு 10.30 மணி. முகத்துவாரம் இந்து பரிபாலன சபை அகதி முகாமுக்குள் திமுதிமுவென நுழைகின்றனர் சில சமூக சேவைத் திணைக்கள அதிகாரிகள். அங்கிருந்த நூற்றுக்கணக்கான அகதிகளுக்கு மறுநாள் அதிகாலை அவர்கள் மட்டக்களப்புக்கு மாற்றப்படவுள்ளதாக அறிவிக்கின்றனர். ஒரு குடும்பத்திற்குத் தலா 2000/= ரூபா வீதம் வழங்கப்படும் எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்தபடி அதிகாலை மூன்று மணிக்கு ஆறு பஸ் வண்டிகளில் மட்டக்களப்பு, அம்பாறைப் பகுதி அகதிகள் ஏற்றப்பட்டனர். ஆனால் இவர்களுடன் இருந்த 26 கொழும்பு வாழ் மலையகத் தமிழ்க் குடும்பங்கள் செல்வதற்கு மறுத்ததனால் அவர்களுக்கு ரூபா 2000/= உதவித் தொகை மறுக்கப்பட்டதுடன் முகாம் இழுத்து மூடப்பட்டு அவர்கள் வெளியே தள்ளப்பட்டனர்.

104 பேர் அடங்கிய இவ் 26 குடும்பங்களும் 1983 இனப் படுகொலைச் சம்பவங்களின் போது அனைத்தையும் இழந்து இரத்மலானை இந்துக் கல்லூரியில் இருந்தவர்கள் ஆவர். 1985இல் அங்கிருந்து மீளக் குடியமர்த்துவதாகக் கூறி மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். பின்பு 1990 வரை தொடர்ச்சியாக பாவற்கொடிச்சேனை, மதுரைநகர் எனப் பல முகாம்களுக்கும் மாற்றப்பட்டுள்ளனர். இறுதியில் யுத்தம் ஆரம்பமான 90 யூனில் மீண்டும் கொழும்புக்குக் கூட்டி வரப்பட்டு முகத்துவாரம் முகாமில் வைக்கப்பட்டனர்.

கடந்த பத்து வருடங்களாக அகதி வாழ்வையே வாழ்ந்து வரும் இக்குடும்பங்கள், மீண்டுமொருமுறை அகதி முகாமுக்கே மாற்றும் அரசாங்கத்தின் முடிவை நிராகரித்துள்ளார்கள். அதனால் முகாமை விட்டு அரசாங்கம் இவர்களை வெளியேற்றியதுடன் சகல நிவாரண உதவிகளையும் நிறுத்தியுள்ளது.

சமூக சேவைகள் திணைக்களத்தின் இம் முடிவினால் உண்ண உணவின்றித் தங்க இடமின்றி இவ் 26 குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார், வயோதிபர்கள், மாணவர்கள் உள்ளிட்ட 104 பேர் முகத்துவாரம் வீதியோரங்களில் வாழுகின்ற பரிதாப நிலையை உருவாக்கி விட்டுள்ளது இலங்கை சமூக சேவைகள் திணைக்களத்தின் அற்புதமான 'சமூக சேவை'.

சில அரசு சார்பற்ற நிறுவனங்களின் புண்ணியத்தில் வீதியோரத்தில் வைத்து வழங்கப்படும் உதவிகள் இவர்களை இன்னமும் பிச்சை எடுக்காது காப்பாற்றுகிறது.

ஏற்கனவே விவேகானந்தா அகதி முகாமில் இருந்து அடித்து ஏற்றிக் கொண்டு செல்லப்பட்டவர்கள் மீளக் குடியமர்த்தப்படுவர் எனக் கூறப்பட்ட போதும் நாவலடி அகதி முகாமுக்கே கொண்டு செல்லப்பட்டனர். இம் முகாமையையும் கலைத்து விட்டு மீளவும் மீளக் குடியமர்த்துவதாகக் கூறி வாழைச்சேனை அகதி முகாமுக்கு மாற்றப்பட்டுள்ளனர். வாழைச்சேனை அகதி முகாமிலோ 7X7 சதுர அடி விஸ்தீரணமுள்ள இடமே ஒரு குடும்பத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. (ஒரு குடும்பத்தின் அங்கத்தவர்கள் தொகை மூவராயிருந்தாலும் சரி எண்மராயிருந்தாலும் சரி 7X7 சதுர அடி தான்) இதே அகதி முகாமுக்கே முகத்துவார மட்டக்களப்பு அகதிகளும் இப்போது கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

- என்.எஸ்.குமரன்.

நன்றி - நூலகத்திட்டம்



# எமெல்லாத் தமிழினி

## வாடகை வீட்டு

## தமிழரின் அவதி

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் வாடகை வீடுகளில் இருக்கின்ற தமிழர்களின் நிலை பரிதாபகரமானது.

அதுவும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவராக அவர் இருந்துவிட்டால் கேட்கவே வேண்டாம். அவ்வளவு பரிதாபம்.

ஒன்று, - வீட்டுச் சொந்தக்காரர்களின் கண்மூடித்தனமான வாடகை, வாடகை முற்பணம்; வருடா வருடம் அது அதிகரிக்கின்ற வேகம் என்பவற்றுக்கு அவர் ஈடுகொடுக்க வேண்டும்.

இரண்டு, வீட்டுக்கு வந்துபோகும் விருந்தாளிகள் ஒவ்வொருவரும் இடுப்புக்குள் ஆயுதங்களை மறைத்துக் கொண்டு வந்து போகும் புலிகளாக அயலவர்களும் வீட்டுச் சொந்தக்காரர்களும் சந்தேகப்பட்டுக் கதைக்கும் கதைகளுக்குத் தாக்குப் பிடிக்க வேண்டும்.

மூன்று, ஒவ்வொரு தடவை வீட்டிற்கு விருந்தினர் வருகின்ற போதும், பொலிஸ் நிலையத்திற்குப் போய் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

நான்கு, திடீரென வீட்டிற்கு நள்ளிரவில் வந்து குதிக்கும் பொலிஸார் விருந்தினர்களையோ வீட்டிலுள்ள ஒருவரையோ பிடித்துப் போகின்ற போதெல்லாம் பொலிஸ் நிலையத்துக்கும் வீட்டுக்குமாக அலைய வேண்டும். தேவைப்பட்டால் வட்டிக்கு எடுத்தாவது பொலிசுக்கு சில ஆயிரங்களை விசிற வேண்டும்....

இப்படிப் பலநூறு சிக்கல்கள்....
சில நாட்களுக்கு முன் 'எனது வீட்டின்' சொந்தக்காரன் என்னை அழைத்து இப்படிக் கூறினான்;
'மன்னிக்க வேண்டும். உங்களால் எங்களுக்கு ஒரு கஸ்டமும் இல்லை. ஆனாலும் உங்கள் வீட்டுக்கு விருந்தினர்கள் அதிகமாக வருகிறார்கள்... அப்படி வருவது எனக்கு விருப்பமில்லை...'

'வீட்டுக்கு விருந்தினர்கள் வருவதில் என்ன தப்பு என்று எனக்குப் புரியவில்லை' என்றேன் நான்.
'இல்லை... ஆனால் அயலவர்கள் உங்கள் வீட்டிற்குப் புலிகள் வந்து போவதாகக் கதைக்கிறார்கள்....'
'சரி... நான் என்ன செய்ய வேண்டும்...?'
'நீங்கள் வீட்டைக் காலி செய்து கொடுத்தால் போதும்...'
வீட்டைக் காலி செய்வது என்பது அவ்வளவு சுலபமான காரியமா? புதுவீடு தேடுவது, அதுவும் எனக்குக் கட்டுப்படியான வாடகையில் என்றால் அது ஒன்றும் இலகுவான வேலை அல்ல...

ஆனால் மாறித்தான் ஆக வேண்டும். அயலிலிருந்த இன்னொரு நண்பரிடம் எனது சிக்கலைச் சொல்லப் போனேன்...
'எனது கெதியும் உதுதான். நான் எனது காலத்தைக் கூட்டக் கேட்டேன் மறுத்துவிட்டான். தமிழர்களுக்கு வீடு கொடுப்பதில்லை என்று முடிவு செய்து விட்டானாம்..'

எனக்கு அதிர்ச்சி.
'ஏன் ?'
'பொலிஸ் தமிழர்களுக்கு வீடு குடுத்தால் பிறகு அதாலை வாற கரைச்சலுக்கு நீங்கள்தான் பொறுப்பென்று மிரட்டுதாம். தனக்குப் பயமாயிருக்காம்...'

'ஓ... எனது வீட்டுக்காரனின் அறிவிப்பின் அர்த்தம் என்னவென்று இப்ப விளங்குது எனக்கு..'

நண்பர் சிரித்தார். முகம் முழுக்க வேதனை.
'பொலிசுக்கு இந்த ஓடர் எப்ப வந்ததாம்..'
நான் பதில் சொல்லவில்லை. 'விதியே விதியே தமிழச் சாதியை என் செயக் கருதி இருக்கின்றாயடா' என்ற பாரதியின் வரிகள் ஞாபகத்துக்கு வந்தன.

## இஸ்லாமியனதும்

## இந்தமண்

மாறுதலுக்காக ஒரு கவிதையைத் தரலாம் என நினைக்கிறேன். கனடாவிலிருந்து வரும் தாயகம் இதழில் சிவசேகரம் அவர்கள் எழுதிய **''இஸ்லாமியனதும் இந்தமண்''** என்ற **கவிதை** இது.

'நாங்கள் யாழ்ப்பாணத்தவர்கள் அல்லவோ' என்று இப்பத்தியில் முன்பு ஒரு தடவை எழுதியதை மீண்டுமொரு முறை இதனுடன் இணைத்துப் படிக்கலாம்:

**இந்த மண் எங்களின் சொந்த மண் இதன்**
**எல்லை யார் தாண்டெனச் சொன்னவன்**
**இந்த மண் எங்களை ஈன்ற மண் எமக்**
**கிடமில்லை என்றெவன் சொன்னவன்**

**தந்தையர் தோளெமைச் சுமந்தமண் அருந்**
**தாயாரின் நெஞ்சில் நாம் சாய்ந்த மண்**
**பந்தடித் தோடி நாம் ஓய்ந்த மண் தமிழ்ப்**
**பாடியும் பேசியும் சுவைத்த மண்**

**வான் புகழ் நபிகளின் பாதையிற் பள்ளி**
**வாசலிற் தொழுகையிற் சேர்ந்த மண்**
**நோன்பினில் நல்லறஞ் செய்த மண் நாம்**
**நாள்தொறும் ஐம்முறை தொழுத மண்**

**காதலின் நினைவினில் மிதந்த மண் பல**
**கனவிடை ஆழ்ந்து மகிழ்ந்த மண்**
**வேதனை வெந்துய ருணர்ந்த மண் மனம்**
**தேறவும் ஆறவுஞ் செய்த மண்**

**அடிமையில் வாழ்ந்திட மறுத்த மண் தன்**
**உரிமையைக் காத்திடத் துணிந்த மண்**
**விடுதலைப் போரினில் எழுந்த மண் பகை**
**வியந்திட விந்தைகள் செய்த மண்**

**நாமெல்லாம் ஓரினம் என்ற சொல் தனை**
**மாற்றினோர் எங்களைத் தூற்றினோர்**
**போமென எங்களை ஓட்டினோர் செயல்**
**பார்த்ததால் நெஞ்சம் உடைந்த மண்**

**வீடு நற் தொழில் பொருள் போயினும் வெறுங்**
**கையராய் அகதிகள் முகாம்களில்**
**வாடினும் பன்முறை சொல்கிறோம் நாளை**
**வருகுவோம் எங்களின் சொந்தமண்**

## தமிழ்த் தலைவர்களுக்கு

## எப்போது புரியும்?

அண்மையில் இங்கு வருகை தந்திருந்த ஐரோப்பிய பிரதிநிதிகள் ஜனாதிபதி விஜ்ஜதுங்காவை சந்தித்துப் பேசினர்.

வடக்குக் கிழக்கில் இருப்பது பயங்கரவாதப் பிரச்சினையே என்ற அவரது புதிய தத்துவத்திற்கான அவரது நியாயங்களைக் கேட்டனர்.

ஐரோப்பிய அகதிகளை திருப்பியனுப்புவதற்குத் தயங்க வேண்டாம் என்ற ஜனாதிபதியின் அபிப்பிராயத்தையும் அவர்கள் செவிமடுத்தனர்.

ஆயினும், அதன் பின் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டின் போது, ஐரோப்பிய அகதிகளை இங்கு இப்போது திருப்பி அனுப்பக்கூடிய சூழ்நிலை இங்கு இல்லை என்று அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

ஐரோப்பாவிலிருந்து அகதிகளை எவ்வாறாயினும் வெளியேற்றி விட வேண்டும் என்று துடிக்கிற ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதிகளுக்கே உண்மை நிலை புரிகிறது. ஆனால் இங்குள்ளவர்களுக்கோ?

உலகத்திலே செய்ய முடியாதவைகள் இரண்டு தான் உண்டு.

ஒன்று நாய் வாலை நிமிர்த்துவது.

மற்றது சிங்களப் பேரினவாதிகளை உண்மை பேசச் செய்வது.

இது இங்குள்ள தமிழ்த் தலைவர்கட்கு எப்போது புரியுமோ?



*சரிநிகர் மாதம் இருமுறை இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் சார்பில் (MIRJE)வெளியிடப்படும் இதழாகும். கருத்துச் சுதந்திரமும் பத்திரிகைச் சுதந்திரமும் பேணப்படுவதற்காகவும், இனத்துவ சமத்துவத்துக்காகவும் சரிநிகர் பாடுபடும். சரிநிகரில் வெளியாகும் எல்லாக் கருத்துகளும் ஆசிரியருடையதோ அல்லது இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தினதோ கருத்துக்களாக அமைய வேண்டுமென்ற கட்டாயமில்லை. பத்திரிகை நாகரீகத்தையும் தர்மத்தையும் பேணியமைந்த எவ்வகையான மாற்றுக் கருத்துக்களையும் சரிநிகர் பிரசுரிக்கும்.*

*சந்தா:*
*உள்நாடு:175/=*
*வெளிநாடு : 30U.S.$*

*சந்தாவை காசுக்கட்டளை/தபாற் கட்டளை மூலமாக MIRJE என்ற பெயருக்கு எடுத்து அனுப்பி வையுங்கள்.*

*எல்லாத் தொடர்புகளுக்கும்*
*ஆசிரியர்*
*'சரிநிகர்'*
*18/2 அலோசாலை*
*கொழும்பு - 03*
*தொலைபேசி: 574047*

# மண்வாசகம்

### யுத்தத்திற்குப் பதில் யுத்தமே!

✱ வட-கிழக்கில் இனப்பிரச்சினை இருக்குமானால், நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ள சிங்கள, தமிழ் மக்களிடையே குரோதம் இல்லையே ஏன்? அதனூடாக எமக்குத் தெரிவது இலங்கையிலுள்ள சிங்கள, தமிழ் இனங்களிடையே இனக்குரோதம் இல்லையென்பதாகும்.
அவ்வாறெனின் இது என்ன? தெளிவாகவே ஆது புலிப் பயங்கரவாதிகளுக்கெதிராக நடைபெறும் யுத்தமொன்றாகும். யுத்தத்தை யுத்தத்தினாலேயே இல்லாதொழிக்க முடியும். யுத்தத்தைச் சமாதானத்தினால் நிறுத்துவது கடினம்.
கண்டி சந்திரரத்ன உடகம -லங்காதீபவில்- 04.10.1993

### சிங்களவர்களுக்கு மட்டுமே சுயநிர்ணய் உரிமை

✱ தமிழ்ப் பயங்கரவாதிகள் மூன்று நிபந்தனைகளைக் கோருகின்றனர். அவையாவன; வட-கிழக்குப் பிரதேசத்தை தமிழ் இனத்தின் தாயகம் எனக் கருதுவது, தமிழர்கள் தனியான இனமெனக் கருதுவது, அவர்களுக்குச் சுயமாக நிர்ணயிக்கும் உரிமை உள்ளதெனக் கருதுவதாகும்.
இந்த நிபந்தனைகளைப் பெற்றுக் கொடுத்தால் ஐக்கிய இலங்கையொன்று இருக்குமா? அந் நிபந்தனைகளுக்கு இடங்கொடுப்பதென்பது புலிகளுக்கு ஈழ அரசு ஒன்றைப் பெற்றுக் கொடுப்பதாகாதா? சுயமாக நிர்ணயிக்கும் உரிமை சிங்களவர்களுக்கு மட்டுமே உரித்தானதாக வேண்டும். ஒவ்வொருவரும் ஒவ்வொரு முடிவு எடுத்தால் இந்நாடு குழப்பல் ஜாலமாகப் போய்விடும்.
சிங்களச் சட்டத்தரணிகள் சங்கத்தின் சட்டத்தரணியும் ஸ்ரீ.ல.சு.க. பா.உ.மான எஸ்.எல். குணசேகர -லங்காதீபவில்- 07.10.1993

### சாபம்

✱ நாளைய தினம் இந்த யுத்தத்தை நிறுத்திச் சமாதானப் பேச்சுவார்த்தைக்குப் போகத் தீர்மானிப்பதாயின் இந்த யுத்தத்திற்குச் செய்த செலவுகளில் பயனில்லை. தமிழ்ப்பயங்கரவாதிகள் கோரும் தேசாபிமான 'தாயகக்' கோட்பாட்டை நீக்காத எவராவது இருந்தால் அவர்களைச் சிங்கள இனம் உள்ளவரை சாபமிடும்
தேசாபிமான பிக்கு முன்னணியின் பெங்கமுவே நாலக்க தேரர் -லங்காதீபவில்- 07.10.1993

### சதியும் சமஷ்டியும்

✱ இன்று வட-கிழக்கின் பிரச்சினையினுள் இருப்பது பயங்கரவாதம் மட்டுமல்ல. அதனுள் சிங்கள இனத்துவத்தை இல்லாது அழிக்கும் சர்வதேச சதியும் அடங்கியுள்ளது. இச்சதியைத் தோல்வியுறச் செய்வதற்காக எமக்குப் பாரிய வேலைத் திட்டமொன்று உள்ளது. இது பிரபாகரனை அல்லது எல்.ரீ.ரீ.ஈ ஐத் தோற்கடிப்பது தொடர்பான பிரச்சினையல்ல. தமிழ் இனவாதத்தைத் தோல்வியுறச் செய்யும் பிரச்சினையாகும்.
பலர் வட-கிழக்குச் சிக்கலுக்குத் தீர்வாகச் சமஷ்டி முறை ஒன்றை முன்வைக்கின்றனர். ஆனாலும் சமஷ்டித் தீர்வு கொடுப்பது வேறான அரசுகளை ஒருமைப்படுத்தவேயன்றி ஒருமைப்பட்டுள்ள அரசைப் பிரிக்க அல்ல. இந்நாட்டினுள் சமஷ்டி முறையொன்றை ஏற்படுத்துவதற்கு வரலாற்றுரீதியான எந்த ஊடகமும் இல்லை.
பேராசிரியர் நளின் த சில்வா -லங்காதீபவில்- 07.10.1993'

### சமாதானப் பேச்சுவார்த்தையா?

✱ இந்த யுத்தத்தைக் கிளாலியுடன் நிறுத்தி விட்டுச் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பார்கள் என்று என்னுள் பாரிய பயமொன்று உள்ளது. ஏனெனில் ஏகாதிபத்தியவாதிகள் விஜேதுங்கவின் கழுத்திற்கும் மரணக் கயிறு போட்டுள்ளனர்
வைத்தியக் கலாநிதி குணதாச அமரசேகர -லங்காதீபவில்- 07.10.1993

### தர்க்கமும் குதர்க்கமும்

✱ நாட்டின் ஒரு பகுதியை உடைத்தெடுக்க அந்நாட்டின் அரசாங்கத்துடன் யுத்தம் புரியும் பயங்கரவாதக் குழுவுக்கு அரசாங்கம் தனது விருப்பத்துடனேயே அவ்வாறு கோரும் நாட்டின் துண்டைத் தியாகம் செய்யாதாயின் அது தொடர்பாக உள்ள தீர்வு யுத்தத்தைத் தவிர வேறு என்னவெனக் கேள்வியெழுப்புவது தர்க்கானுகூலமானது.
ஆசிரியர் தலையங்கத்தில் -லங்காதீபவில்- 07.10.1993

### சிங்களத்தை இரண்டாகப் பிரிப்பதா?

✱ சிங்கள நாட்டின் சிங்களவர்களை விரட்டியடித்துக் கலைத்து விட்டு வரலாற்றைத் திரிபு படுத்தி படிப்படியாகத் தமிழ் இராச்சியம் இருந்ததெனக் கூறி ஈழமொன்றைக் கோருவதற்குப் புலிப் பயங்கரவாதிகளுக்குத் தேவையேற்பட்டுள்ளது. சிங்கள நாட்டை இரண்டாகப் பிரிப்பதற்குப் பயங்கரவாத, சர்வதேசவாத இயக்கமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதால், சிங்களவர்களான நாம் ஐக்கியத்தை ஏற்படுத்திக் கொள்வோம். அநகாரிக தர்மபால செயற்பட்டது போல் தேசம், மொழி, இனம் ஆகியவற்றைக் காக்க ஒன்றிணைந்து போராடுவோம்.
பேராசிரியர் நளின் த சில்வா -திவயினவில்- 09.10.1993

-சீ.சாத்தனார்-

நன்றி - நூலகத்திட்டம்





சரிநிகர்
18/2,அலோசாலை
கொழும்பு -03
தொலைபேசி :576704

பிரதம ஆசிரியர் உ.சேரன்

# மோகமும் மோசமும்

ஆசைகாட்டி மோசம் செய்வது பஞ்சதந்திரங்களில் ஒன்று.

யூ.என்.பி தனது அரசியல் எதிரிகளை முறியடிக்கப் பயன்படுத்தும் தந்திரங்களில் இது மிகவும் முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

இந்த தந்திரத்திற்கு இறுதியாகப் பலியாகிப் போனது டி.யு.என்.எப்.பும் அதன் இன்றைய தலைவர் காமினியும்.

லலித் அத்துலத்முதலியின் மறைவுக்குப்பின் நடந்த மாகாணசபைத் தேர்தலில் எதிர்பார்த்த வெற்றியை டி.யு.என்.எப் பெறாவிட்டாலும் வடமேற்கு,மேற்கு,தெற்கு மாகாணங்களில் யூ.என்.பி அல்லாத அதிகாரங்களை நிறுவிக்கொள்ள உதவத்தக்க வகையில் குறிப்பிடத்தக்க எவு ஆசனங்களை அவர்கள் பெற்றிருந்தார்கள்.

இதற்கு முன்னர், முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச இருந்த போது, தீவிரமான வளர்ச்சியைக் காட்டிய டி.யு.என்.எப், அவரின் மறைவின் பின் தான் ஒரு கட்சியாக இருப்பதற்கான நியாயத்தை இழந்து போயிற்று. டி.யூ.என்.எப், ஜனாதிபதி பிரேமதாச மீதான- அவரது ஜனநாயக விரோத போக்குகள் மீதான விமர்சனங்களடிப்படையிலேயே ஜனாதிபதி முறைமையை மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையுடன் உருவாக்கப்பட்ட கட்சி.

பிரேமதாச மறைந்ததும், புதிய டி.பி விஜேதுங்க அரசு, முன்னாள் ஜனாதிபதி கால 'தவறுகளை' ஒப்புக் கொள்ள/தொடங்கியதும், ஜனாதிபதி முறைமையை மாற்றுவது பற்றிப் பரிசீலிக்கலாம் என்பது பற்றி பேசியதும் டி.யு.என்.எப் பிற்கு எந்த அரசியல் அடித்தளமும் இல்லாமல் செய்யப் போதுமாயிற்று.

யூ.என்.பியின் இரண்டு அல்லது மூன்று 'கொழுத்த' மந்திரிப்பதவிகளை வழங்குவதன் மூலம் அக்கட்சியை முற்றாக விழுங்கிவிட யூ.என்.பிக்குள் திட்டமிடப்பட்டது. டி.யு.என்.எப. தலைவருக்கே தமது கட்சியை கலைத்து விட்டு யூ.என்.பியிலே சேர்ந்தால் என்ன என்ற அளவுக்கு தனது கட்சியின் இருப்புக்கு நியாயம் காணமுடியாமல் போயிற்று. பதவி ஆசை தடுமாற வைத்து விட்டது.

மந்திரிப்பதவிகளை வழங்குவதன் மூலம் பறிபோன மாகாணசபைகளையும் மீட்டு விடலாம் என்பது யூ.என்.பியின் திட்டமாக இருந்தது.

இந்த ஆசை காமினியாரையும் அவரது கட்சியையும் ஊசலாட வைத்து லலித் கால நம்பிக்கையில் சொற்பமேனும் இன்றைய கட்சிக்கு இல்லாத நிலையை தோற்றுவித்துள்ளது.

கட்சியை கலைத்து விட்டு யூ.என்.பிக்குள் சேரும்படி கேட்டதை ஒப்புக்கொள்ள சிரமப்பட்டார்கள் டி.யு.என்.எப்பினர்.

இப்போ கட்சி கலைந்து போகிறது.

இனிச் சிரமப்படத் தேவையில்லை.

டி.யு.என்.எப்பை திரும்ப சேர்ப்பதில் இனி யூ.என்.பி அக்கறை காட்டமாட்டாது. டி.யு.என்.எப் தான் யூ.என்.பி பின்னால் அலைய வேண்டும்!

அண்மையில் வடமேற்கு, தெற்கு மாகாண சபைகளின் முதலமைச்சர் பதவி ஒன்று கிடைக்கும் வாய்ப்பு கிட்டியுள்ளது என்பது உண்மைதான்.

ஆனால், டி.யு.என்.எப் தனிநபர்களது செல்வாக்கில் வாழும் கட்சியாக சீரழிந்து போனபின் இதற்கு அவ்வளவு முக்கியத்துவம் இருப்பதாக சொல்லமுடியாது. ஆசை காட்டி மோசம் செய்த யூ.என்.பியிடம் அது தன்னை முற்றாக இழந்து விட்டது.

இவ்வளவு நீண்ட முன்னுரைக்குப் பின் எமது வடக்கு கிழக்கு பிரச்சினையை ஒரு முறை திரும்பிப் பார்ப்பது நல்லது.

யூ.என்.பியின் ஆட்சிக் காலத்தில் தான் ஒன்றுமாறி ஒன்றாக பல பேச்சுவார்த்தை முயற்சிகள் நடந்தன.

தமிழ் பேசும் மக்களின் இனப்பிரச்சினையை 'தீர்க்க' அதிகளவில் முயற்சிகள் எடுக்கப்பட்டன.

ஆனால் யூ.என்.பியுடன் பேசிய ஒவ்வொரு முறையும் தமிழ் பேசும் மக்களுக்காக பேசியவர்கள் பெற்றுக் கொண்டதை விட இழந்தது அதிகம்.

முதலில் 'பேசத் தொடங்கிய' கூட்டணி, தனது பதவிகளை மட்டுமல்ல, தமிழ் பேசும் மக்களின் தலைவன் என்ற பதவியையும் இழந்தது.

முழுத் தேசத்தினதும் ஒரேகட்சியாக இருந்த அது இன்று சிராவஸ்திக்குள் இருக்கும் ஒருசிலரின் கட்சியாக அழிந்து போயிற்று.

அதன் பின்னர் முன்னாள் விடுதலை இயக்கங்கள். 'திம்புவில்' கதைத்ததை விட்டு இறுதியாக நாலம்சக் கோரிக்கை வைத்து அதையும் விட்டு...

உலக்கை தேய்ந்து உளிப்பிடியாகிய கதையாயிற்று.

இந்தக் கட்சிகளும் வெறும் 'அறிக்கை விடும்' அமைப்புகளாகிப் போய் விட்டன..

யூ.என்.பி யின் இந்தத் தந்திரம் தொடர்ந்து வெற்றி பெற்றே வந்துள்ளது; வருகிறது.

அதன் இறுதிப் பலி டி.யு.என்.எப்.

இதை எப்போது எம்மவர்கள் புரிந்து கொள்வார்களோ?

# திரும்பி வந்த யாழ்தேவி

ஆனையிறவிலிருந்து புறப்பட்ட 'யாழ்தேவி' கிளாலிவரை போய் திரும்பவும் ஆனையிறவுக்கே வந்துவிட்டது.

கொழும்பிலிருந்து காங்கேசன் துறைவரைக்குமாக ஓடிக்கொண்டிருந்த யாழ்தேவி எப்படிப் போய் போய் வந்து கொண்டிருந்ததோ அதேபோல் தான் இந்த கிளாலி நோக்கிய படையெடுப்பும் அமையப்போகின்றது என்பதால் தான் இதற்குப்பொருத்தமாக யாழ்தேவி என்று பெயர் சூட்டியிருந்தார்கள் போலும்.

ஒருதடவை போய் வந்த இந்த யாழ்தேவி அடுத்ததாக எப்போது புறப்படும் என்பது தெரியவில்லை.

ஸ்ரீலங்கா இராணுவத்தின் 'ஈழயுத்தம் 2'இன் பின்னான மிகப்பெரிய தாக்குதலான இக் கிளாலிப் படையெடுப்பு பத்திரிகைகளால் வர்ணிக்கப்பட்ட போதும் அதன் வெற்றி குறித்து பாதுகாப்பு அமைச்சு அறிக்கை விட்டு தெரிவிக்க வேண்டிய நிலையே ஏற்பட்டுள்ளது.

கிளாலியிலிருந்து கடலேரியூடாக நடந்து வந்த புலிகளின் போக்குவரத்து மார்க்கத்தை இல்லாதொழிப்பதே இந்த 'யாழ்தேவி'யின் நோக்கம் என்றும் முதலில் கிளாலியை கைப்பற்றி அங்கு படைகளை குவித்து பாதுகாப்புக்கான ஏற்பாடுகளைச் செய்து பலப்படுத்துவதும் பிறகு அதற்கப்பால் நகருவதும் என்று ஏற்கனவே இருந்த திட்டம் இப்போது தற்காலிகமாகவாவது கைவிடப்பட்டுள்ளதாக தெரிகிறது. கிளாலி மணற்பரப்பில் படைகளை தங்க வைத்துக் கொள்வது, நிர்வகிப்பது, அவர்களுக்கான உணவு விநியோகங்களை நடாத்துவது, புலிகளிடமிருந்து வரக்கூடிய தாக்குதல்களை சமாளிப்பது என்பன அத்துணை இலேசான காரியங்கள் அல்ல என்று புரிந்து கொண்டதன் பின்னரே இந்த முடிவு எடுக்கப்பட்டிருந்ததாக தெரியவருகிறது.

யுத்தத்தில் இத்தகைய நிலமைகள் சாதாரணமானவை. முன்னேறித் தாக்குவது, பின்வாங்குவது என்பன யுத்தத்தில் ஒன்றும் புதியன அல்ல. கொழும்பில் இருந்து அறிக்கை விடும் அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் புலிகள் நேராக யுத்தத்திற்கு வராது பின்வாங்குவதும் மறைந்து நின்று தாக்குவதுமான நடைமுறையை கடைப்பிடிப்பதுபற்றி சலிப்பூட்டும் விதத்தில் பேசிவருகின்றனர். 'அவர்கள் தமது வழியில் போரிடுகிறார்கள்; நாம் எமது வழிகளில் போரிடுகிறோம்' என்று ஒவ்வொரு பிரிவும் புரிந்து கொள்ள வேண்டும் என்பதை அறியாத இந்த அதிகாரிகள் திரும்பத்திரும்ப படையெடுப்பை தூண்டிக் கொண்டு மட்டுமே இருப்பார்கள். அவர்களால் வெளியுலகிற்கு காட்டப்படும் போர் நிலைபற்றிய பிம்பங்கள் அவர்களது 'ஆசையிலிருந்து' வெளிப்படுகின்றனவே ஒழிய உண்மையிலிருந்து அல்ல. எனவேதான், முன்னேறல் பின்வாங்கல் ஆகிய மிகச் சாதாரண யுத்த நடைமுறைகள் கூட சலசலப்பை நாட்டுமக்கள் மத்தியில் ஏற்படுத்தி விடுகின்றன.

உண்மையில் இந்த பின்வாங்கலிருந்து கற்றுக் கொள்ள வேண்டியது இராணுவம் அல்ல். அரசும், அரசியல் கட்சிகளின் தலைவர்களும் தான். கிட்டத்தட்ட ஒன்றரை லட்சம் துருப்புக்களை குவித்து வடக்கு கிழக்கு முழுவதும் இந்தியப் பட்டாளத்தின் வசமாக்கிய இந்தியாவினால் கூட - கோடிக்கணக்கில் செலவு செய்வதும் - வடக்கு கிழக்கில் அமைதியை தோற்றுவித்து விட முடியவில்லை; இன்றைய ஜனாதிபதி திரும்பத் திரும்பக் குறிப்பிடும் 'பயங்கரவாதப் பிரச்சினையை' தீர்த்து விட முடியவில்லை என்பது அவ்வளவு இலகுவில் மறந்துவிடக் கூடியதல்ல.

அண்மையில் ஐரோப்பிய பிரதிநிதிகளுடனான உரையாடலின் போது ஜனாதிபதி வடக்கு கிழக்கில் புலிப் பயங்கரவாதிகளின் சட்டவிரோத தாக்குதலே நிலவுகிறது என்று மீண்டுமொருமுறை அறிவித்துள்ளார். யாழ்பாணத்துக்கு வெளியே தமிழர்கள் அமைதியாக வாழ்கின்றார்கள். வடக்கு கிழக்கில் உள்ளூராட்சி தேர்தல்களை கூட நடாத்த அனுமதிக்காத புலிகளாலேயே அங்கு பயங்கர வாத நிலை நிலவுகிறது. வடக்கு கிழக்கு மக்களுக்கு தமது தலைவர்களை தெரிவு செய்யும் வாய்ப்பை வழங்க நாம் தயாராக இருந்தும் புலிகள் அதை மறுக்கிறார்கள்....என்றெல்லாம் அவர் அறிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு மக்கள் தமது தலைவர்களை தெரிவு செய்ய உள்ளூராட்சி தேர்தலை பயன்படுத்த

**சஞ்ஜித்**

விரும்பும் ஜனாதிபதியவர்கள் ஒரு முக்கியமான விடயத்தை நாசுக்காக மறைத்து விட்டுப் பேசுகின்றார். பாஸ்கரலிங்கமும், சண்முகலிங்கமும் அமைதியாக இங்கு வாழ்வதைப்பற்றிப் பேசும் அவர் இங்கு உள்ள பிரச்சினையின் உண்மைத்தன்மையை காண மறுத்து விடுகின்றார்....

உண்மையில் இந்த பின்வாங்கலிருந்து கற்றுக் கொள்ள வேண்டியது இராணுவம் அல்ல. அரசும், அரசியல் கட்சிகளின் தலைவர்களும்தான். கிட்டத்தட்ட ஒன்றரை லட்சம் துருப்புக்களை குவித்து வடக்கு கிழக்கு முழுவதும் இந்தியப் பட்டாளத்தின் வசமாக்கிய இந்தியாவினால் கூட - கோடிக்கணக்கில் செலவு செய்வதும் - வடக்கு கிழக்கில் அமைதியை தோற்றுவித்து விட முடியவில்லை; இன்றைய ஜனாதிபதி திரும்பத் திரும்பக் குறிப்பிடும் 'பயங்கரவாதப் பிரச்சினையை' தீர்த்து விட முடியவில்லை என்பது அவ்வளவு இலகுவில் மறந்துவிடக் கூடியதல்ல.

வடக்கு கிழக்கில் நடந்த தேர்தல்களில் மக்கள் அளித்த வாக்குகளை எந்த அரசு மறுத்து வந்திருக்கிறது? வடக்கு கிழக்கு மக்களால் த.வி.கூ.வுக்கு வழங்கப்பட்ட ஆணையை மதித்தா அவர்களை ஸ்ரீலங்கா அரசு பாராளுமன்றத்தை விட்டு விரட்டியது? வடக்கு கிழக்கு மக்கள் மாகாணசபைக்கு தெரிவு செய்ததாக தாமே ஒப்புக் கொண்ட தலைவர்களை அவர்களது ஆணையைப் பெற்றா பதவி நீக்கம் செய்தது இந்த அரசு? வடக்கு கிழக்கு மக்களினால் தெரிவு செய்யப்பட்டு வந்தவர்கள் என தாம் அங்கீகரிக்கிற எந்தப் பாராளுமன்ற உறுப்பினர்களுடைய அபிப்பிராயத்தை கேட்டு அரசு இன்று வரை இனப்பிரச்சினையை தீர்க்க முயன்றிருக்கிறது?

ஆக, வடக்கு கிழக்கு மக்களுக்கு இன்றைக்கு தேவை உள்ளூராட்சி தேர்தல் மூலம் எந்த அதிகாரமும் அற்ற சில நபர்களை தெரிவு செய்து வேடிக்கை பார்ப்பது தான் என்று ஜனாதிபதி அவர்கள் நினைக்கிறார்களோ? வடக்கு கிழக்கில் சிங்கள குடியேற்றங்களை திட்டமிட்டு நடாத்திய போது எந்த எம்பியால் அல்லது எந்த உள்ளூராட்சி சபையால், அல்லது எந்த அரச அமைப்பால் இதை தடுக்க முடிந்தது? வடக்கு கிழக்கில் உள்ள மக்களுக்கு எதையும் செய்ய அதிகாரமற்ற 'தலைவர்களை' தெரிவு செய்வதில் யாருக்குத் தான் லாபம்? நாட்டில் அமைதி வந்து விட்டது. நிலமை சுமுகமாகி விட்டது என்று பறைதட்ட விரும்பும் அரசை தவிர வேறுயார் இதனால் லாபமடைவார்கள்... சரி, புலிகள் இத்தேர்தலை நடத்த அனுமதிக்கிறார்கள் என வைத்துக் கொண்டால் அதை நடாத்திய பின் என்னதான் செய்ய போகின்றது அரசு?

வடக்கு கிழக்கை இணைப்பது தொடர்பாக தேர்தலை பெப்பிரவரியில் நடாத்தப் போவதாக இப்போது அறிவித்துள்ளார் ஜனாதிபதி.

'முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா' என்பார்கள். முதலையும் மூர்க்கனும் கூட சில வேளை விட்டாலும் விட்டு விடக்கூடும். ஆனால் ஸ்ரீலங்கா அரசு ஒருபோதும் விடப்போவதில்லை என்பது திரும்பத்திரும்ப மெய்ப்பிக்கப்பட்டு வருகிறது.

பிரிந்து போவோம் என்று சொன்னால், விடமாட்டோம் ஒன்றாகவே இரு என்று கூறி 'யுத்தத்தை நடாத்துகிற அதேஅரசு, ஒன்றாயிருக்க விரும்பும் வடக்கையும் கிழக்கையும் பிரித்தே விடுவது என்று தீவிரமாக இயங்கிவருகிறது.

அப்படித்தான் வடக்கும் கிழக்கும் ஒன்றாகியிருப்பது என்று அங்குள்ள மக்கள் தீர்ப்பளித்துவிட்டால், ஒன்றாகியிருக்க அனுமதிக்க தயாராக இருக்கிறதா அரசு?

அவ்வளவுக்கு மக்களது அபிப்பிராயத்தில் அக்கறையிருந்தால் 1977 தேர்தலில் வடக்கு கிழக்கு மக்கள் அளித்த தீர்ப்புக்கு அது என்ன பதில் சொல்லப்போகிறது!

இந்த நிலையில் இயங்கும் ஒரு அரசுக்கும், அரசுத் தலைவருக்கும் பல்லின சமூகம் வாழும் ஒரு நாட்டில் அதிகாரத்தைக் கொண்டிருக்க தார்மீக உரிமை கிடையாது.

அந்த உரிமை அவர்களுக்கு இருப்பதாக வலிந்து பிடித்துக் கொண்டிருப்பதால், சிறுபான்மை சமூகங்கள் தமது தலைவிதியை தாமே தீர்மானிக்க புறப்படுவதில் என்ன ஆச்சரியமிருக்கிறது? புலிகள் மட்டுமல்ல, கரடிகள், சிங்கங்கள் என்று எத்துணை மோசமான தலைமைகள் உருவாகினாலும், அங்குள்ள இன்றைய பிரச்சினை இரண்டு தேசங்களுக்கிடையிலானது என்றாகிப் போனபின், அம்மக்களின் தலைமைகள் பற்றிப் பேசி காலத்தை வீணாக்குவதில் ஒரு பயனும் இல்லை.

புலிகள் மட்டுமல்ல உலகிலுள்ள அனைத்துப் 'பயங்கரவாதப் பட்டம்' பெற்ற போராட்டக் குழுக்களுக்கும் இது பொருந்தும்.

புலிகள் பயங்கரவாதிகள் என்று சொல்லவும் அதைத் தீர்த்து வைக்கவும் தமிழ்மக்களுக்கு மட்டும் தான் முடியும். ஸ்ரீலங்காவுக்கோ இந்தியாவுக்கோ அல்ல.

இந்த யதார்த்தை தெரிந்து கொள்ள விரும்பாவிட்டால்... இன்றைய நிலை இன்னுமொரு சில தசாப்தங்களுக்கு சந்தோஷமாக அனுபவிக்கலாம்....!

நன்றி - நூலகத்திட்டம்



## யாழ்ப்பாணம் இன்று — 10

தொடர்ந்து ஆறு மணித்தியாலம் சைக்கிள் ஓடுவது எவ்வளவு கடினம் என்பது ஓடிப் பார்த்தவர்களுக்குத் தெரியும்.

கொம்படிப்பாதையோ, ஊரியான் பாதையோ கோடைகாலத்தில் தகிக்கும், சோளகம் எதிரே வருபவர் தெரியாதளவு (கடுமையாக வீசுகிற போது) புழுதி.

அந்த வெளிக்குள் இடையில் ஹெலி வந்தால், சொல்லவே வேண்டாம். மனத்தின் பதைப்பை யாரறிவார்?

பெருமழை பெய்தாலோ வெள்ளம்.

மாரி அரும்புகிற பொழுதுகளில், நிலம் காய்ந்தும் இராது, வெள்ளமாகவும் ஓடாது. சேறாகவும் சகதியாகவும் இருக்கிற நாட்களில், கற்பனையே பண்ண முடியாத கொடுமை.

நிறைந்த பாரத்துடன் சைக்கிள் உருட்டி வெளி தாண்டுவார்கள் வியாபாரிகள்.

உருட்டுகிற போது, சேறு சில்லில் அப்பிக் கொண்டு, மட்காட்டை நிறைக்கும். பத்து நிமிடம் உருட்டுவதற்கிடையில், மட்காட் சேறால் நிரம்பி சைக்கிள் பிரேக் அடித்து விடும்.

வியாபாரி கையில் வலிமையான தண்டு கொண்டு செல்வர். நிறைந்த சேற்றை தண்டால் குத்திக் குத்தி அப்புறப்படுத்துவர். சைக்கிள் நிறைந்த பாரம். மீண்டும் உருட்டல்.

இப் பெருவெளியைத் தாண்ட மூன்று மணித்தியாலத்திற்கும் மேலாகத் தேவை.

மழைக் காலங்களில் இப் பெருவெளி கடல் நீரால் நிறைந்து விடும்.

''அங்கார் அதுதான் ஆனையிறவு ஆமிக் காம்ப்'' என்று ஒருவன் அவசரமாகக் கத்திக் காட்டுவான்.

அவ்வளவுதான் கனவு கலையும். இரவில், அமாவாசை இருட்டில் வழி தெரியாது இராணுவ முகாமை அண்மித்தும் வள்ளங்கள் சென்று விடுவதுண்டு.

தூரத்தில் சிங்கள மொழிக் குரல் கேட்டு துடித்துப் பதைத்துத் திரும்பியவர்களும் உண்டு. ஒப்பீட்டளவில் பூநகரி- சங்குப்பிட்டிப் பாதை இலகு.

பூநகரிப் பாதையில் பகலில் விமானப் படையினர் குண்டுகளைப் பொழிகிறார்கள்.

பகலில் பயணம் இல்லை. இரவில் காத்து நிற்கிற மணித்தியாலத்திற்குக் கணக்கு இல்லை.

பின்னேரம் மூன்று மணிக்கு முன்னர் வந்தால் கடலை அண்டிய சிறு பற்றைக் காடுகளின் இடையில், வருகின்ற ஒழுங்கின் வரிசையில் நிற்க வேண்டும். குண்டு விமானமோ, ஹெலியோ வந்தால் பற்றைகள் தான் தஞ்சம்.

பொழுது கருகத் தொடங்க, வந்த ஒழுங்கின் வரிசையில் உள்ளே ரியூப்புகளும், சீற்றும் களவாடப் பட்டிருக்கும்.

எத்தகைய இக்கட்டான சூழலுக்கெல்லாம் முகம் கொடுத்தார்கள்.' தீரமுடன் எதிர்த்தார்கள்.

மனம் சலிக்கவில்லை.

வயல் விதைக்கிறவன் பாடு திண்டாட்டம்.

முதலில் உழவேண்டும். ட்ராக்ரர் என்றால் வெஜிடபில் ஓயிலும், மண்ணெண்ணெயும் வேண்டும். மிகுந்த விலை. மாட்டைக் கொண்டு உழுவதென்றால் நாட்கணக்காகும்.

உழுதாயிற்று.

அடிக்கட்டுப் பசளை இடவேண்டும். பசளை தாண்டிக்குளத்தைத் தாண்டுவது இல்லை. இருக்கிற சாணங்களும்,குப்பைகூளங்களும் பசளையாகும்.

பிறகு உழுதல். நெல் விதைத்தல் அல்லது நாற்று நடல்.

களை பற்றிப்பிடிக்கும். களை கொல்லி மருந்து வேண்டும். இல்லை.

கூலிக்காரர் களை பிடுங்குவார்கள். நிறையக் காசு.

இந்தக் காலங்களில் விசித்திரம் விசித்திரமான நோய்கள் நெல்லில் பரவின.



## குத்து விளக்கில் கணக்குப் பார்த்து......

முந்நூறுக்கும் மேற்பட்ட வள்ளங்கள் வந்து விடும்.

இரண்டு ஓட்டி இருப்பர். ஒருவர் வள்ளத்தைத் தண்டினால் வலிக்க, மற்றவர் வள்ளத்தைத் தள்ளி வருவர். இடையிடை மேட்டுப் பகுதி வருகிற போது வள்ளத்துள் இருப்பவர்களும் இறங்கி வள்ளத்தைத் தள்ள வேண்டும்.

இதனால் நாரிப் பிடிப்பு வந்தவர்கள் நிறைய உண்டு.

ஆடி அசைந்து வள்ளம் வெளி தாண்ட இரண்டு மணித்தியாலங்களுக்கும் மேலாகி விடும்.

விடியற் புறத்தில், அல்லது மாலைப் பொழுதில் நீர் நிறைந்து நிற்கும் அப்பெருவெளி மிக அழகான பிரதேசம்.

சூரியன் உதிக்கிறது, அல்லது மறைகிறது. இள மஞ்சள் பொழுது. பறவைகள் கூட்டமாகப் பறக்கும். இடையிடை நீருக்குள் சரிவு எடுத்து மீனைக் கொத்திப் பறக்கும். தூரத்தில் காடுகளாக மரங்கள்.

இடையிடை சிறுசிறு மணற்றிடர்களில் வினோதமான பறவைகள் காணப்படும். ''இது ரஷ்யாவிலிருந்து வருகிற பறவை. சீசனுக்கு இங்கு வந்து விடும்'' என்று ஓட்டி கூறுவார்.

சூழல் எத்தகைய வர்ணங்களாலும் தீட்ட முடியாத அற்புதமான ஓவியம்.

வாழ்நாட்களில் கலை என்றால் என்ன என்று மலங்கப் பார்ப்பவர்களும், இக் காட்சியில் மெய்மறந்து இருப்பார்கள்.

அனுப்பிக் கொண்டிருப்பார்கள். (கேரதீவில் உள்ளே அனுப்புகிற மீசைக்காரனை இப்பொழுதும் ஞாபகம் இருக்கிறது. அவன் என்ன ஆனானோ?)

அனுப்பிய ஒழுங்கின் படி உள்ளே வள்ளம் ஏற முன்னர் இன்னொரு முறை வரிசை. ஏழு மணியளவில் பெரும் சத்தத்துடன் வள்ளம் வரும்.

இருபத்தைந்து சைக்கிள், முப்பது மனிதர் எனும் கணக்கில் ஏறினால் வள்ளம் மூன்று நிமிடத்தில் மறு கரை அடைந்து விடும் . எண்ணி மூன்றே மூன்று நிமிடம்.

மறு கரை அடைந்தால் பிறகு சைக்கிள் வலிப்பு.

## அருணா பரமேஸ்வரன்

இந்த மூன்று நிமிடப் பயணத்திற்காக, பதினைந்து மணித்தியாலத்திற்கு மேலாகக் காத்து நிற்பவர்களும் உண்டு.

வாடைக்காற்று வீசுகிற போதிலும், பனி பெய்கிற போதிலும், கடற்கரையில் நிற்க முடியாது. எனினும் சைக்கிளில் பெரும் பாரங்களுடன் கால் கடுக்கக் காத்து நின்றார்கள்.

கொடுமையான சீவியம்.

இதற்குள்ளும் நகைச்சுவை உண்டு.

சைக்கிளை விட்டு விட்டு காத்து நிற்கிற போது, நித்திரை கொள்பவர்கள் எழுந்து பார்க்கிற போது, சைக்கிள் சீற்றைக் காணக் கிடைக்காது.

சைக்கிளை ஒரு கவர்த்தடியில் ஏற்றி வைத்து விட்டு, ரயர்களும்,

அடித்தண்டு மஞ்சளாகியது. அல்லது மேல் இலைகள் கருகின.

நோய் இன்னதென்று தெரியவில்லை. இருந்தாலும் மருந்து இல்லை. ஒரு மந்தாரமான சூழலில் அடியில் வெள்ளம் இருக்க, சூரியன் சுட்டெரிக்காததனால்,பார்த்துக் கொண்டு நிற்க நோய் வேகமாகப் பரவியது.

சிலர் நெல்லிற்கு மண்ணெண்ணெயை மருந்தாக அடித்தார்கள்.

என்னவோ கதிர்கள் மாத்திரம் பொலிய வைத்தன.

சூடடிக்க வேண்டும். அதே பிரச்சினை. மண்ணெண்ணெய், வெஜிடபிள் ஓயில்.

சூடடித்தார்கள். நெல் பொலிந்து தான் இருந்தது.

காற்றாடியில் நெல்லைப்புடைக்க முக்கால்வாசி சப்பியாகப் பறக்க, சிறிது நெல் விளைந்து இருந்தது.

நெல் எவ்விடமும் போவதில்லை. அதனால் மலிவு.

எல்லாம் முடிந்து, குத்து விளக்கில் கணக்குப் பார்த்து அன்றிரா அழுதவர்கள் உண்டு.

இடையில் தொண்டமானின் யோசனை ஒன்றின் பேரில் தீர்வு வரும் என்று நெல்லைக் கட்டி வைத்தவர்கள் ஏராளம்.

வீட்டின் மேலால் பறக்கிற விமானத்தைக் காட்டி இதில் தொண்டமான் தான் வருகிறார் என்றார்கள்.

இது சலிப்பின் வெளிப்பாடா?

சலித்துப் போனவர்களும் இருந்தார்கள். (வரும்)

## நாலு வார்த்தை எழுதவிடு

சூரியா

### அரங்காடிகள்.

''நாமும் நமக்கோர் நலியாக்கலை உடையோம்.''

இதுமகாகவியின் வரிதான். என்றாலும் **அரங்காடிகளின்** நம்பிக்கையும் இதுதான்.

1993 பெப்பிரவரி கொழும்பில் அரங்க செயற்பாடுகளுக்காக தொடங்கப்பட்ட அமைப்பு **அரங்காடிகள்**. நாடகம் இதன் பிரதான குறி.

இவ்வகையில் நான்கு நாடகங்கள் மேடையேற்றப்பட்டுவிட்டன. குழந்தை ம.சண்முகலிங்கத்தின் **இப்போதைக்கேது வழி, முயலார் முயல்கிறார்**, நா.சுந்தரலிங்கத்தின் **அபசுரம்**, அ.தாசீசியஸின் **பொறுத்தது போதும்** ஆகிய நாடகங்கள் அவை.

**அ.ரவி** (இப்போதைக்கேது வழி, முயலார் முயல்கிறார், பொறுத்தது போதும்) **சோ. தேவராஜா** (அபசுரம்) இந் நாடகங்களை நெறியாள்கை செய்திருந்தனர்.

இந் நாடகங்கள் பல்வேறு அரங்கத் தன்மைகளைக் கொண்டமைந்தன. நேரடி நாடகமாக(Straight play) **இப்போதைக்கேது வழியும்**, அபத்த நாடகமாக (Absurd play)**அபசுரமும்**. சிறுவர் நாடகமாக(Children play) முயலார் முயல்கிறாரும், கூத்து வகைகளைக் கொண்ட மோடிப்படுத்தப்பட்ட (Stylized play)நாடகமாக **பொறுத்தது போதும்** எனும் நாடகமும் அமைந்திருந்தன. இவை ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் மேடையேற்றப்பட்டவை.

இந் நாடகங்கள் பற்றிய விமர்சனம் இங்கு தேவையற்றது. ஆனால் இவை தன்னளவில் முழுமைபெற்ற நாடகங்களும் அல்ல. ஆலை இல்லா ஊர்-கொழும்பு. இலுப்பம் பூ -இந் நாடகங்கள்.

ஆனால் அரங்காடிகளின் முயற்சியைப் பாராட்டுகிறோம் இறுக்கமான நேரங்களும், நெருக்குதலுக்குள்ளான வாழ்வும் கொண்டிருக்கின்ற கொழும்புச் சூழலில் இந் நாடகங்களை மேடையேற்றியமை குறிப்பிடப்பட வேண்டியது.

பொதுவில் ஈழத்துத் தமிழ் நாடக அரங்கு முனைப்புடன் வளர்ச்சி பெற்றுக் கொண்டிருக்கிறது. இது வளர்ச்சியின் குறியீடு.

தமிழ் நாட்டைச் சேர்ந்த **இந்திரா பார்த்தசாரதி, ந.முத்துசாமி** ஆகியோரது **மழை, நாற்காலிக்காரர்** ஆகிய நாடகங்கள் இங்கு தான் அரங்க முழுமை பெற்றன. இந்தியாவைச் சேர்ந்த **பாதல் சர்க்கார், கிரிஷ் கர்னாட்** ஆகியோரது **ஏபங் இந்திரஜித்** (முகமில்லா மனிதர்கள்) **துக்ளக்** போன்ற நாடகங்களும் ஈழத்து அரங்கில் நாடகமாகின.

அபத்த நாடக வகையை (அபசுரம்) 1968இலேயே ஈழத்து அரங்கு கண்டுவிட்டது. கவிதையால் நெய்யப்பட்ட **கோடை, புதியதொரு வீடு**, கடூழியம் இங்கு அரங்க வளர்ச்சியில் பா நாடகமாயின.

கூத்தும், நவீன கருத்தும் இணைந்து அறுபதுகளின் பிற்கூற்றிலேயே (**கந்தன் கருணை, சங்காரம், பொறுத்தது போதும்**) ஈழத்து அரங்கின் வளர்ச்சி அடுத்த கட்டத்துக்குத் தாவியது.

**அலெக்சி அபுசோவ் (பிச்சை வேண்டாம்) ரென்னன்சி வில்லியம்ஸ் (கண்ணாடி வார்ப்புகள்) கார்ஸியா லோர்க்கா (ஒரு பாலை வீடு) பெர்டோல்ட் பிறெக்ட் (யுக தர்மம்) அன்ரன் செக்கோவ் (சம்பந்தம்)** என உலக நாடக வல்லுனர்களின் நாடகங்களை ஈழத்து நாடக அரங்கு எப்போதோ கண்டாயிற்று.

நாடகத்தின் எல்லா வகைத் தன்மைகளையும், அரங்கின் பல்வேறு வடிவங்களையும் கொண்ட ஒரு படைப்பினை (**மண் சுமந்த மேனியர்**) ஈழத்து அரங்கில் பார்த்தோம். வீதி நாடகங்களும் (**திருவிழா, மாயமான்**) இங்கிருந்தன.

**நாடோடிகள், நடிகர் ஒன்றியம், அம்பலத்தாடிகள், நாடக அரங்கக் கல்லூரி, அவைக் காற்றுக் கலைக் கழகம், கலாசாரக் குழு** என நாடக அரங்கச் செயற்பாட்டிற்காக அமைப்புக்களும் காணப்படுகின்றன. அவ் வகையில் **அரங்காடிகளும்** ஒன்று.

உயர்தர வகுப்பிலும் பல்கலைக் கழகத்திலும் **நாடகமும் அரங்கியலும்** என்பது ஒரு பாடமாகவே போதிக்கப்படுகின்றது.

விரிவாக எழுதப்பட வேண்டிய விடயங்கள் இவை.

மேற் குறிப்பிட்ட செய்ற்பாடுகளை நோக்கும் போது பலர் இதற்கான வேலைத் திட்டங்களில் பங்கெடுத்தார்கள். **வித்தியானந்தன், சிவத்தம்பி, கணபதிப்பிள்ளை, கைலாசபதி, மகாகவி, முருகையன், அ.தாசீசியஸ், நா.சுந்தரலிங்கம், சி.மௌனகுரு, க.பாலேந்திரா, நிர்மலா, இளைய பத்மநாதன், குழந்தை ம.சண்முகலிங்கம், க.சிதம்பரநாதன், மாவை நித்தியானந்தன், வி.வி.வைரமுத்து, பிரான்ஸிஸ் ஜெனம்,சொர்ணலிங்கம்,குகராஜா** ஆகியோர் ஈழத்து அரங்க வளர்ச்சியில் மிக முக்கிய புள்ளிகள். (சிலர் விடுபட்டுப் போயிருக்கலாம் என்பது வருத்தத்திற்குரியது)

சம காலத்தில் யாழ்ப்பாணத்து அரங்கு அடுத்த கட்டத்திற்கு தாவி விட்டது.( பார்க்க: சரிநிகர் கலாநிதி கிருஷ்ணதுரை எழுதிய **இன்றைய யாழ்ப்பாணத்தில் கலை**) புதிய பரிசோதனை முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அரங்கு முழுமையாகப் பயன்படுகின்றது. இடையில் கட்டியிருக்கிற சால்வையும் செய்தி சொல்கிறது. (**உயிர்த்த மனிதர் கூத்து**) நாற்சார் வீடும் அரங்காகிறது. (**எந்தையும் தாயும்**)

அரங்கு தொடர்பாக **க.சிதம்பர நாதனின்** பரிசோதனை முயற்சிகள் (**உயிர்த்த மனிதர் கூத்து, பொய்க்கால்**) கேள்விக்குள்ளாகின்றன. ''இது அரங்கா?'' எனச் சிலர் வினவுகின்றனர்.

அரங்கு தொடர்பாக வினாக்கள் எழுகின்றன யாழ்பாணத்தில். நாடக ஆர்வலர்கள் ஒவ்வொரு அரங்கையும் கூர்ந்து கவனிக்கிறார்கள்.

அரங்கின் பல்வகைத் தன்மையைக் காட்ட ஒரே நாளில் **பொய்க்கால்** (சிதம்பரநாதன்) **இரு துயரங்கள்** (சுந்தரலிங்கம்) கைலாசபதி கலைஅரங்கில் மேடையேறுகின்றன.

**மண்சுமந்த மேனியரிற்குப்** பிறகு யாழ்ப்பாணத்து அரங்கு புதுப்புது வடிவங்களை தரிசிக்கிறது. புதிய புதிய பரிசோதனை முயற்சிகளை மேற்கொள்கிறது. மாயமான் (வீதி நாடகம்) **உயிர்த்த மனிதர் கூத்து, எந்தையும் தாயும், பொய்க்கால்** என அரங்குகள் வெவ்வேறு வடிவம் கொள்கின்றன.


**க.சிதரம்பநாதன்** இப்பரிசோதனை முயற்சியில் குறிப்பிடப்பட வேண்டியவர். இப்பரிசோதனை முயற்சிகள் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியனவா என்பதனை காலம் தீர்மானிக்கட்டும். ஆனால் வரவேற்கப்படவேண்டியன.

ஈழத்து அரங்கு இவ்வாறு விவாதிக்கப்பட்டும், செழுமைப்பட்டும்,வளர்ந்து வருகிறது.

இதன் இன்னொரு வெளிப்பாடாகவே கொழும்பில் தோற்றம் பெற்ற **அரங்காடிகள்** எனும் அமைப்பைக் குறிப்பிடலாம்.

நன்றி - நூலகத்திட்டம்





# ஐந்து வருட 'ஜனநாயக' வழியில் தமிழ்க் கட்சிகள் கண்டதென்ன?

தமிழ் அரசியற் கட்சிகள் 'ஜனநாயக' வழிக்குத் திரும்பியதாக அறிவித்து ஸ்ரீலங்கா அரசின் 'பாராளுமன்ற' அரசியலுக்குள் நுழைந்து ஐந்து ஆண்டுகளாகி விட்டன.

1983 ஜுலைக் கலவரத்தையடுத்து ஆயுதங்களை ஏந்தி ஆயுதப் போராட்டம் நடாத்தும் 'விடுதலை இயக்கங்களாக' இவை உருவாகியிருந்தன.


1987 ல் சரியாக ஐந்து ஆண்டுகளின் பின் இந்திய-இலங்கை ஒப்பந்தம் உருவானதைத் தொடர்ந்து ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டன. தமது அந்த ஐந்தாண்டு கால ஆயுதப் போராட்ட வரலாற்றில் ஆயுதப் போராட்டத்தால் அல்ல, பேச்சுவார்த்தைகளின் மூலமே பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்ற இந்திய ஆசியுடனான புதிய ஞானஸ்நானத்துடன் 'பாராளுமன்ற சட்டவாத' அரசியலினுள் நுழைந்தன.

இப்போது இந்தப் 'பாராளுமன்ற அரசியல்' வாழ்வுக்கும் ஐந்தாண்டுகள் பூர்த்தியாகிவிட்டன.

ஆயினும், ஆயுதம் மூலமாக அல்ல, அரசியல் ரீதியாகவே பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்று தொடர்ந்து பேசிக் கொண்டே தமது 'பேசித் தீர்க்கும்' முயற்சியிலீடுபட்டு வருகின்ற இக்கட்சிகளுக்கு இன்னமும் இதில் சலிப்பு ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

வடக்கு கிழக்கிலே நிலவுவது பயங்கரவாதமே ஒழிய தமிழர் பிரச்சினையல்ல என்று கூறியபடி யுத்தத்தை நடாத்தி வரும் அரசுடன் பேசித் தீர்ப்பதற்காக சார்ந்து நின்று கொள்வதே சரியானதென அவை கருதுவதாகத் தெரிகிறது.

வடக்கு கிழக்கில் நடக்கின்ற தாக்கு



தல்கள் புலிகளுக்கு எதிரான யுத்தம் என்ற பெயரால் வடக்கு கிழக்கு மக்கள் மீது நடாத்தப்படும் யுத்தமே என்பதையிட்டு யாரும் பெரிதாக அலட்டிக் கொள்வதாகத் தெரியவில்லை.

'ஆயுதமேந்திய யுத்தத்தாலல்ல, அரசியல் ரீதியாகவே பிரச்சினையைத் தீர்க்க முடியும்' என்ற வேதவாக்கை அரசுடன் சேர்ந்து இந்த 'ஜனநாயக' வழிக்குத் திரும்பிய கட்சிகள் முதல் என்றென்றைக்கும் 'ஜனநாயக' வழிகளிலேயே இயங்குவதாகக் கூறிக் கொள்ளும் கூட்டணி வரை உச்சரித்து வருகின்றன.

'பிரச்சினை ஒரு அரசியல் பிரச்சினை என்றால் மட்டுமே அதை அரசியல்ரீதியாகத் தீர்க்க முடியும். பிரச்சினை ஒரு பயங்கரவாதப் பிரச்சினையாக இருக்கும் போது அதை எப்படி அரசியல்ரீதியாகத் தீர்க்க முடியும்? பயங்கரவாதத்தை ஒடுக்க யுத்தத்தை நடாத்துவதைத் தவிர வேறென்ன வழி இருக்க முடியும்' என்பது அரசின் நிலைப்பாடு. தனது யுத்தத்தை நியாயப்படுத்த அரசு கூறும் கருத்து இது.

அரசைப் பொறுத்த வரை அதன் சிந்தனையில் தெளிவான திட்டம் இருக்கிறது. ஆனால் இந்தத் தமிழ்க் கட்சிகளுக்கு?

பிரச்சினையை 'அரசியல்ரீதியாக' தீருங்கள் என்பதன் மூலம் யுத்தத்தையும் அரசியலையும் இருவேறு முனைகளில் வைத்துப் பேசுகின்றார்கள் இவர்கள். அதாவது அரசியல் வேறு, யுத்தம் வேறு என்று புதிய பாடம் ஒன்றை இவர்கள் கூறி வருகின்றார்கள். யுத்தம் என்பது பயங்கரவாதத்தின் -வெறும் யுத்த வெறியின்- ஒரு அம்சமாகவும் அரசியல் என்பது பாராளுமன்றம், மாகாணசபை மற்றும் அரச நிறுவனங்களில் கூடி விவாதிப்பதும் மன்றாடுவதுமான ஒரு சமாச்சாரமுமாக இவர்களால் அறிவிக்கப்படுகிறது. அரசியல் என்பது என்ன? யுத்தம் என்பது என்ன? என்ற அடிப்படைப் பிள்ளைப் பாடங்களைக் கூடக் குழப்பியடித்துக் கொண்டு 'ஜனநாயக வழியில்' செயற்பட்டு வருகின்றார்கள் இவர்கள்.


அரசியல் என்பது அரசதிகாரத்திற்கான செயல்முறை என்பதையோ, அரசதிகாரத்திற்கான செயல்முறையானது சட்டபூர்வ பாராளுமன்ற வழிமுறைகளிலான 'போராட்டங்களாலோ' அல்லது ஆயுதம் ஏந்திய போராட்டத்தாலோ - அரசதிகாரத்தின் தன்மையைப் பொறுத்து- அமைகிறது என்பதைப் பற்றியோ இவர்க்ள் விளங்கிக் கொண்டுள்ளதாக இல்லை; அல்லது அதனை வசதிக்காக மறந்துவிட்டுள்ளார்கள்.

சுருங்கச் சொன்னால், ஒன்று செயல் மற்றையது அதைச் செய்யும் வழிமுறை; அரசியல் என்பது ஒரு செயல் என்றால் பாராளுமன்ற முறையோ ஆயுதப் போராட்டமோ இருவேறு வழிமுறைகள். செய்யும் அரசியலின் (செயலின்) தன்மையைப் பொறுத்து போராட்ட வழிமுறைகள் வேறுபடலாம்; வேறுபடும். அரசியல் அதிகாரத்திற்கான கோரிக்கையின் தன்மையைப் பொறுத்து இது வேறுபடுகிறது.

ஆனால் இதை வசதியாக மறந்துவிட்டு 'அரசியல் ரீதியாக' என்று திரும்பத் திரும்ப கூறிவருகின்றார்கள்.

1983ல் 'இயக்கங்களால்' முன்வைக்கப்பட்ட கோரிக்கை தனிநாடாக இருந்தது; தனி அரசுக்கான அதிகாரத்தைக் கோருவதாக இருந்தது. 1987ல் அது அதிகாரப் பங்கீடாகக் குறுகியது. தனிநாட்டுக் கோரிக்கை ஆயுதப்போராட்டத்தாலேயே சாத்தியம் எனப் புரிந்து கொண்டோ புரியாமலோ ஆயுதத்தைத் தூக்கிய இயக்கங்கள், அதிகாரப்பகிர்வுக்கு ஆயுதப்போராட்டம் தேவையில்லை என்று கருதியோ என்னவோ 'ஆயுதப் போராட்டத்தை' கைவிட்டன. 1987ல் வழங்கப்பட்ட மாகாணசபை அதிகாரப்பகிர்வு கூட அதற்கு முந்திய ஐந்தாண்டு கால ஆயுதப்போராட்டத்தால் வழங்கப்பட்டதா அல்லது இந்திய நெருக்குவாரத்தால் வழங்கப்பட்டதா அல்லது அதற்கும் முந்திய கூட்டணி தமிழரசுக்கட்சியின் போராட்டத்துக்காக வழங்கப்பட்டதா என்பதை யாரும் ஆராயவில்லை. எல்லோரும் அதை ஏற்று மாகாண சபை அதிகாரத்துடன் திருப்திப்பட்டுக் கொண்டார்கள். புலிகளை இந்தப் பிரேரணையால் திருப்திப்படுத்த முடியாமல் போன பின்னர் திரும்ப யுத்தம் வெடித்தும் மீளவும் பேச்சுவார்த்தையில் ஈடுபட இவர்கள் முயன்று வருகின்றனர்.

ஆக இவர்கள் மாகாண சபையினால் தமிழ் மக்களின் பிரச்சினை தீர்க்கப்படவில்லை என்று ஒப்புக் கொண்டுள்ளனர்




ஆயுதப் போராட்டத்தை விட்டு 'அரசியல் ரீதியாக' பிரச்சினையைத் தீர்க்க 'ஜனநாயக' வழிக்குத் திரும்பியதாகக் கூறும் இக் கட்சிகள் இப்படிக் கூறுவது ஒருவகையில் நியாயம்தான்! உண்மையில் இவர்கள் 'பாராளுமன்ற சட்டவாத' முறையில் அரசுடன் போராடுவதன் மூலம் அரசியல் பிரச்சினையைத் தீர்க்க முயலவில்லை -அப்படி செய்வதாகக் கூறிக் கொண்டாலும் அவர்கள் பிரச்சினையை அரசியல் ரீதியாகவே தீர்க்க முயல்கின்றனர். அதாவது 1983 கோரிக்கையைக் கைவிட்டு மாகாண சபைக்கு இறங்கியது போல, அதையும் கைவிட்டு வேறெதையாவது ஏற்றுக் கொள்ளுதலாகிய அதிகார விட்டுக் கொடுப்பு மூலம் பிரச்சினையைத் தீர்க்க முயல்கின்றனர். (தாம் தமக்கு எது தேவையோ அதை முன்வைத்து அதற்காக போராடுவதற்குப் பதில் தமக்கு எதை அவர்கள் தருவார்களோ அதைப் பெற எதை எதை (அரசியல் ரீதியாக) விட்டுக் கொடுப்பது என்பதே இவர்களது வழிமுறை போல் தெரிகிறது. இந்த அர்த்தத்தில் இவர்கள் கூறும் 'அரசியல் ரீதியாக' தீர்த்தல் என்பது உண்மைதான்!)

ஆனால் இந்த அரசியல் ரீதியாக தீர்க்கின்ற 'ஜனநாயக' வழிமுறை கூட ஐந்தாண்டுகளாகியும் முடிந்த பாடாக இல்லை.

> ஒன்று செயல் மற்றையது அதைச் செய்யும் வழிமுறை; அரசியல் என்பது ஒரு செயல் என்றால் பாராளுமன்ற முறையோ ஆயுதப் போராட்டமோ இருவேறு வழிமுறைகள். செய்யும் அரசியலின் (செயலின்) தன்மையைப் பொறுத்து போராட்ட வழிமுறைகள் வேறுபடலாம்; வேறுபடும். அரசியல் அதிகாரத்திற்கான கோரிக்கையின் தன்மையைப் பொறுத்து இது வேறுபடுகிறது.

இதை இவர்கள் எப்போது முடிக்கப் போகிறார்களோ?

இந்த ஐந்தாண்டு காலத்துள் இவர்களது 'ஜனநாயக வழிமுறை' சாதித்ததுதான் என்ன? அரசு எதையாவது செய்யவேண்டும் என்பதற்காக இவர்கள் ஏதாவது ஒரு சிறிய போராட்டத்தையாவது -இவர்கள் கூறும் ஜனநாயக வழியிலான போராட்டத்தையாவது- நடாத்தியிருக்கிறார்களா? அரச படைகளுடன் கூட்டு நடவடிக்கையில் ஈடுபடுவதைத் தவிர, வேறு எதை இவர்கள் செய்திருக்கிறார்கள்? தமிழரசுக் கட்சிக்காலப் போராட்டங்களில் ஒன்றையேனும் இவர்கள் செய்திருக்கிறார்களா? தமது போராட்டத்திற்காக ஒரு கிரமமான பத்திரிகையாவது கொண்டு வந்திருக்கிறார்களா? பத்திரிகை அறிக்கைகளில் தான் போராட்டம் நடாத்துவதென்றால் அதை இவர்களை விடச் சிறப்பாகச் செய்கிறார் குமார் பொன்னம்பலம் அவர்கள்....



அப்படியானால் இந்த 'ஜனநாயக' வழிக்கு என்னதான் அர்த்தம்?

இப்படிச் சொல்லும் போது ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடும் புலிகள் சரி என்றோ, இவர்களையும் திரும்பப்போய் 'புலிகளைப்போல்' ஆயுதத்தை தூக்கும்படியோ கோருவதாக அர்த்தமில்லை. 1983ல் ஆயுதத்தை தூக்கியபோதும் சரி, இப்போது போட்டு விட்டு நிற்கும் போதும் சரி, இவர்கள் யாருமே எதைச் செய்கிறோம் என்பதை உணர்ந்து கொண்டு செய்யவில்லை என்பதுவே இங்கு வலியுறுத்தப்படுகிறது. புலிகள் கடந்த பத்தாண்டுகால 'ஆயுதப் போராட்டத்தின்' மூலம் தமிழ் மக்களின் விடுதலைக்காக சாதித்தது ஒன்றும் அதிகமில்லை. வடக்கிலிருந்து முஸ்லீம்களை விரட்டியதையும் பிற விடுதலை இயக்கங்களை அழித்ததையும் தமிழ் மக்களது அரசியல் உரிமைகளை நசுக்குவதையும் பார்க்கிற ஒருவருக்கு அவர்கள் தமிழ் மக்களின் விடுதலைக்காக சாதித்ததாகச் சொல்ல மிச்சமாக இருப்பது ஒன்று மட்டுமே என்று தெரியும். அதுதான் இன்றுவரை அரசுதரப்பிலிருந்து எப்போதாவது 'பேச்சுவார்த்தை' என்று யாராவது கூறிவருவது.

ஆம், அவர்களது ஆயுதப் போராட்டமும் அரசைப் பேச நிர்ப்பந்திப்பதாகவே தான் அமைந்திருக்கிறதே ஒழிய தமிழ் பேசும் மக்களின் விடுதலையை அடிப்படையாகக் கொண்டதாகத் தெரியவில்லை. அல்லாவிடில் 'புலிகளால் ஆளப்படும் விடுதலை' பெற்ற பிரதேசத்தில் உள்ள மக்கள் வேறு இடங்களில் உள்ளவர்களை விட (யுத்த சுமைகள் இருப்பினும்) சுதந்திரமாக இருக்க வேண்டாமா?

ஆனால்.....

ஆக, இன்றைக்கு நம் கண்முன்னே உள்ள பிரச்சினை எந்தப் போராட்ட வழிமுறை சரி என்று பார்ப்பது அல்ல. எந்தப் போராட்ட வழிமுறை சரியாக நடாத்தப்பட்டது என்பதே. எந்தப் போராட்ட வழிமுறையையுமே சரியாக நடத்தாதவர்கள் ஒன்றை விட மற்றையதையே சரியானதென்று கூறுவது தம்மை நியாயப்படுத்த உதவுமே ஒழியே வேறொன்றிற்கும் உதவப் போவதில்லை. அதிகாரப் பங்கீட்டை நோக்கமாகக் கொண்டு செயற்படுகின்ற இருசாராருக்கும் ஞாபகப்படுத்த வேண்டிய ஒன்று உண்டு. தமது போராட்ட வழிமுறை வழங்கிய இன்பத்தில் தாமே மூழ்கிப் போய் உண்மையை மறந்து விட்ட அவர்களுக்கு அதை ஞாபகப்படுத்துவது இந்தக் கட்டத்தில் அவசியம் என்று தோன்றுகின்றது!

அதுதான் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் கீழ் தமிழ் மக்கள் இரண்டாம் மூன்றாம் தரப் பிரசைகளாக்கப்பட்டுள்ளார்கள்; அவர்களது தேசிய இன அடையாளம் முற்றாக அழிக்கப்படுவதற்கான திட்டமிட்ட நடவடிக்கையில் அரசு ஈடுபட்டு வருகிறது என்பதாகும்.

இதைப் புரிந்து கொண்டால், இதற்காக ஏதாவது செய்ய வேண்டுமென்றால் உங்கள் விதிமுறைகளைப் பற்றிப் பேசுவதை விட்டு உங்கள் அரசியலைக் கொஞ்சம் சரி பார்த்துக் கொள்ளுங்கள் என்பதை மட்டும் இப்போதைக்கு சொல்லி வைக்கலாம்.

இறுதியாக ஒன்று:

நடைபாதையில் தடுக்கி விழுந்தால் -அது சிராவஸ்தி படிக்கட்டாயினும் சரி- வைத்திய சாலையில் மருத்துவம் செய்யலாம். ஆனால் அரசியற் பாதையில் தடுக்கி விழுந்தால் அதற்கு வைத்தியம் செய்வது சாத்தியமே இல்லை.

நன்றி - நூலகத்திட்டம்






முன்பெல்லாம் யாழ்தேவி என்றால் வடக்கு நோக்கி செல்லுகின்ற உற்சாகம் மனதில் பொங்கும். ஆனால் இப்போதெல்லாம் அது தாண்டிக்குளம் தேவியாக மாறிவிட்டதனால் பிரயாணிகள் மனதில் அடுத்து வரவுள்ள கஷ்டமும் அலுப்பும் குறித்த சோர்வையே காணக்கூடியதாக இருக்கிறது. கொழும்பில் யாழ்தேவியில் ஏறியவுடன் நம் தேசத்திற்கு செல்லும் ஒருசுகம் ஏற்படுவதை மறுக்க முடியாது. (ஆனையிறவில் புறப்பட்டு கிளாலி வரைபோய் திரும்பி வந்த 'யாழ்தேவி' அல்ல இது)

காலை புகையிரதத்தில் ஏறினால் ஆறே மணித்தியால பிரயாணம். பஸ்சில் பிரயாணம் செய்வதால் ஏற்படக்கூடிய 'செக்கிங்' சிக்கலைத் தவிர்ப்பதற்காக ரெயில் பயணத்தையே பெரும்பாலானவர்கள் தெரிவு செய்கின்றனர். ஆயினும் இடையில் அனுராதபுரத்தில் ஒரு சில சமயங்களில் 'செக்கிங்' இருக்கத்தான் செய்கிறது. பெட்டி படுக்கைகளையும் சந்தேகத்துக்கிடமானவர்களின் அடையாள அட்டைகளையும் பொலிஸார் ஒருதரம் துலாவுவது நடக்கத்தான் செய்கிறது.

மதிய உச்சி வெயில் உருக்கும் வேளை வவுனியா நகரை புகையிரதம் அடைகிறது. புகையிரத நிலையத்தில் புகையிரதம் தரிக்கும் முன்பாகவே அழகிய தமிழ் ஒலிபரப்பு காதில் ஒலிக்கிறது. ''கொழும்பிலிருந்து புறப்பட்ட யாழ்தேவிப் புகையிரதம் இன்னும் சில நிமிடங்களில் தாண்டிக்குளத்திற்குப் புறப்படும்''.

புகையிரதம் நிற்கும் முன்பே பயணிகள் ஒருவரை ஒருவர் இடித்துக் கொண்டு குதித்து ஓடுகின்றனர். முன் வரிசையில் நிற்பதற்காக. எதற்காக இந்த வரிசை? பொதிகளைப் பரிசோதிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட இந்த வரிசையில் ஒருவர் பின் ஒருவராக பொதிகளைக் கொட்டிக் காட்டுதல் வேண்டும். இந்தச் சோதனையில் தமிழில் உரையாடக் கூடிய இராணுவ, பொலிஸ் பிரிவுகளைச் சேர்ந்த பெண்களே ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்த முதலாவது காட்சியே -கொழும்பிலிருந்து செல்லும் ஒருவருக்கு- புதிய அனுபவமாக இருக்கும். கொட்டிய பொருட்களை அள்ளிப் போட்டவாறு, அடுத்ததாக பாஸ் எடுக்கும் வரிசைக்கு ஓட வேண்டும். அடையாள அட்டையைக் கொடுத்தால் பெயரை எழுதி 16 மணித்தியாலத்திற்கு செல்லுபடியாகின்ற சிறு நீலத் துண்டு ஒன்று தருவர். இதுவே வவுனியா நகருக்குள் பிரவேசிப்பவருக்கான அனுமதிப் பத்திரம் -பாஸ்- ஆகும்.

சிறு துண்டுப் பாஸை பாதுகாப்பாக பத்திரப்படுத்திய பின் நகருக்குள் நுழையும் புகையிரத வீதியில் போனால் நகரச் சுற்று வட்டத்தில் நீண்டு உயர்ந்து நிற்கும் மணிக்கூட்டுக் கோபுரத்தை காணலாம். (முன்னால் ஜனாதிபதியின் உபயம்) ஒரு புறம் தூசி கிளப்பும் வாகனங்கள். மறுபுறம் குழந்தை முதல் பெரியோர் வரை ஓடும் துவிச்சக்கர வண்டிகளின் நெரிசல். நகர மத்தியில் எல்லா வீதிகளையும் இணைக்கும் சந்தியில் ஒரு பொலிஸ் நிலையம். எதிர்ப்புறம் பஸ் நிலையத்துடன் கூடிய புதிய கட்டிடத் தொகுதிகள். இரவில் படக்காட்சிகள். நேரம் தவறாத பாடசாலைகள். ஆங்காங்கே காக்கி உடையுடன் பொலிசும் இராணுவத்தினரும்..... திடீரெனப் பார்க்கும் ஒருவருக்கு தோன்றும் இப்புதிய உலகம் இராணுவமயப் படுத்தப்பட்ட நகரமா இது என்ற சந்தேகத்தை எழுப்பத் தான் செய்யும்.

## சிவில் நிர்வாகம்

854 சதுர மைல் விஸ்தீரணம் கொண்ட வவுனியா மாவட்டத்தில் 81 சதுர மைல் பிரதேசம் மட்டுமே இராணுவ கட்டுப்பாட்டில் உள்ளது. வவுனியா, செட்டிக்குளம், வவுனியா தெற்கு ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளையும், வவுனியா வடக்கு, நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவையும் கொண்டுள்ள இம் மாவட்டத்தின் 102 கிராம சேவகர் பிரிவுகளில் 49 பிரிவுகளே இராணுவ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இவற்றை சுத்தப்படுத்தப்பட்டுள்ள பகுதிகள் என (cleared area) அழைக்கின்றனர்.


## பாஸ்

ஒரு நாள் பாஸ் (புகையிரத நிலையத்தில் எடுப்பது) மூன்று நாள், பதினைந்து நாள், ஒரு மாதம், மூன்று மாத பாஸ்கள், நிரந்தரப் பாஸ்கள் என்ற அடிப்படையில் எல்லாம் ஒரே பாஸ் மயம்தான். பாஸ் இல்லாத ஒரு நபரைக் கூட அங்கு காண முடியாது. அடையாள அட்டையை விட சக்திவாய்ந்ததாக உள்ளது இந்தப் பாஸ். இப் பாஸினால் உள்ள சிரமங்களுக்கு அப்பாலும் மக்கள் இதை விரும்பி ஏற்றுக் கொள்வதைக் காணக் கூடியதாக இருக்கிறது. காரணம், தமது பாதுகாப்புக்கு இந்த நீலத் துண்டு உத்தரவாதம் செய்கிறது என நம்புகின்றனர். இந்த இடத்தில் நெருடுவது இந்த நம்பிக்கைதான்! வவுனியாவில் பாதுகாப்பாக இருக்க இந்த 'நீலத் துண்டு' அவசியம் என்று சொல்லுகையில் வவுனியாவின் மேலோட்டமான தோற்றம் ஏற்படுத்துகின்ற பிரமையில் விழுகின்ற முதல் கீறல் இது.

நகரத்தை விட்டு சற்று வெளிக் கிளம்பினால் கைவிடப்பட்ட விவசாய நிலங்களையும், குளங்களையும், வீதிகளையும் இடிந்த நிலையில் காடுகளாக மாறியுள்ள வீடுகளையும் அகதி முகாம்களையும் சிறு கொட்டில்களாலான பாடசாலைகளையுமே காண முடிகிறது.

## நலன்புரி முகாம்கள்

செட்டிக்குளம், அடம்பன்குளம், கரம்பைமடு, ஆண்டியாபுளியங்குளம், வேப்பங்குளம், நெலுங்குளம், எல்லையப்பர் மருதங்குளம், ஆசிக்குளம் (சிதம்பரபுரம் முகாம்) பகுதிகளில் இந்தியாவிலிருந்து திரும்பி வந்தவர்களுக்கும், உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களுக்கும் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் இந்தியாவிலிருந்து திரும்புகிறவர்களைப் பராமரிக்கும் முகாம்களை யூ.என்.எச்.சி.ஆர் நடாத்தி வருகின்றது. ஏனையவற்றை அரசாங்கமே நிர்வகிக்கின்றது. சில அரச சார்பற்ற நிறுவனங்களும் இவற்றின் பராமரிப்புக்கு உதவுகின்றன.



அரச அதிபர் திரு. தில்லை நடராஜா

இம் முகாம்கள் யாவும் (யூ.என்.எச்.சி.ஆர் ஆல் பராமரிக்கப்படும் ஆசிக்குளம், அடம்பன் குளம் முகாமைத் தவிர) ஓலையால் வேயப்பட்ட மிகச் சிறிய குடில்களாகவே உள்ளன. ஆனால் இவை ஒவ்வொரு குடும்பத்திற்கெனவும் தனித்தனியாக அமைக்கப்பட்டுள்ளன. மழைக்காலங்களில் இக்குடில்கள் பலவற்றில் அரைவாசிக்கு மேல் வெள்ளம் புகுந்து விடும்.

பெரும்பாலான முகாம்களுக்கு மலசலகூட வசதிகள் கூட ஒழுங்காக இல்லை. யூ.என்.எச்.சி.ஆர் ஆல் பராமரிக்கப்படும் கரம்பைமடு முகாமில் 70 குடும்பங்கள் வசிக்கின்றன. ஆனால் 10 சிறிய (ஏறத்தாழ 4 சதுர அடி விஸ்தீரணமுடைய சுற்றி வர கிடுகுகளால் மறைக்கப்பட்ட கூட்டுக்குள் மலசலம் கழிப்பதற்கான குழி தோண்டப்பட்டுள்ளது) மலசல கூடங்களே அமைக்கப்பட்டுள்ளன. பெரியவர்கள் இவற்றில் இருந்து எழும்ப முடியாது. அதனால் சிறியவர்கள் இவற்றைப் பாவிக்க ஏனையோர் 'வெளிக்குச்' செல்கிறார்கள். இங்கு இரண்டு கையினால் இயக்கப்படும் குழாய்க் கிணறுகளே அமைக்கப்பட்டுள்ளன. தண்ணீர்ப் பிரச்சினை மோசமாக உள்ளது.

24 குடும்பங்களைக் கொண்ட எல்லையப்பர் மருதங்குளம் முகாமில் மலசல கூடங்கள் இடிந்த நிலையில் சீரழிந்து போய் உள்ளன. சுகாதார வசதிகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளன. ஒரே ஒரு கிணறு தான் உள்ளது. மன்னாரில் இருந்து இடம் பெயர்ந்து வந்த 8 குடும்பங்கள் உணவு முத்திரை நிவாரண உதவிகள் கூட இல்லாமல் தவிக்கிறார்கள். இம் முகாம் ஒரு கைவிடப்பட்ட முகாமாக மாறிவிட்டது என கச்சேரி ஊழியர்களே வேதனைப்படுமளவுக்கு இம் முகாமின் நிலைமை உள்ளது.

36 குடும்பங்கள் வசிக்கும் நெலுக்குளம் முகாமில் வவுனியாவின் உயர் அரச உத்தியோகத்தர் ஒருவரின் கணவரால் ஒப்பந்த அடிப்படையில் கட்டப்பட்ட கட்டடம் இடிந்து விழுந்து தூண்களே எஞ்சியுள்ளன. இம் முகாமில் இருந்தவர்களில் 8பேர் வரை காயமடைந்தனர். ஆனால் கேட்பார் இல்லை. மிகவும் வசதி குறைந்த முகாமாக இது உள்ளது.

இம் முகாம்களுக்கு கிழமையில் இரண்டு தடவை நடமாடும் வைத்திய சேவை மேற்கொள்ளப்படும். இடையில் நோய் வந்தால் நகரத்திற்கே செல்ல வேண்டும். வைத்தியசாலைகள் எவையும் இங்கு கிடையாது அதுவும் இரவில் கடுமையான வருத்தம் வந்தால் உயிரை விடத்தான் வேண்டி ஏற்படும். 24 மைல்களுக்கு அப்பால் உள்ள செட்டிக்குளப் பகுதியிலிருந்து இரவில் போக்குவரத்து இல்லாத நகரத்திற்கு ஒருவரைக் கொண்டு செல்வதானால் இராணுவப் பொலிஸ் வண்டிகளிலேயே உதவி கேட்க வேண்டும். அவற்றுக்கும் ஏதாவது 'வருத்தம்' என்றால் அதோகதிதான்.

மாதமிருமுறை குடும்ப எண்ணிக்கையைப் பொறுத்து நிவாரண உதவிகள் கொடுக்கப்படுகின்றன. ஆனால் இவை குறித்த காலத்தில் கிடைப்பதில்லை என அம் மக்கள் குறைபடுவதுடன் தமக்கு அவை பற்றாக் குறையாகவே உள்ளன எனவும் கூறுகின்றனர்.

முகாம்களை விட்டு வெளியேறுகின்ற ஒவ்வொரு தடவையும் பொலிஸாரிடம் பாஸ் எடுத்தல் வேண்டும். பெரும்பாலும் நாட்கூலி வேலைக்காக முகாமை விட்டு வெளியேறும் ஒவ்வொருவரும் ஒவ்வொருநாளும் பாஸ் எடுக்க வேண்டியிருப்பதையிட்டு சலித்துக் கொள்கிறார்கள்!

மன்னார் வீதியைத் தவிர நகரத்திற்கு வெளியில் உள்ள வீதிகள் பற்றி சொல்லிப் புரிய வேண்டிய அவசியம் கிடையாது. ''பள்ளமும் குழிகளும் கொண்ட கிறவல் வீதிகள் மழைக் காலத்தில் போட் ஓடலாம்'' என்று கிண்டலாகக் கூறுகிறார் அவ்வூர் வாசி. வெயில் காலத்தில் ஊழியர்களது வெள்ளை உடைகள் வீடு திரும்பும் போது சிகப்பாக மாறிவிடும். காலை ஒரு பஸ்; மாலை ஒரு பஸ். நகரத்திலிருந்து காலை செட்டிக்குளம் செல்பவர்கள் மாலைதான் வரமுடியும். செட்டிக்குளத்திலிருந்து காலை புறப்படுபவர்கள் நகரத்திலிருந்து மாலைதான் வீடு செல்ல முடியும். சுருக்கமாகச் சொன்னால் போக்குவரத்தும் மக்களுடைய வாழ்க்கையை நிர்ணயிக்கும் காரணியாக மாறி விட்ட பரிதாபம்.



புகையிரத நிலையப் பாதுகாப்பு

பாடசாலைகள் பற்றியும் கல்வி விடயம் பற்றியும் கல்விமான் ஒருவரிடம் வினவியபோது கட்டுப்பாட்டிலில்லாத ஓமந்தை மகா வித்தியாலயத்தின் தரம் ஒழுங்கு கூட கட்டுப்பாட்டுப் பிரதேச பாடசாலைகளில் இல்லை என மனம் வெதும்பினார்.

கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்ட பகுதிகளில் செப்டம்பர் முதலாம் திகதிக்குப் பிறகே பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஒரு திறந்த வெளியில் இரண்டு சிறு குடிசைகள். மூன்று ஆசிரியர்கள். நாற்பது மாணவர்கள். ஆண்டு நான்கு வரை நான்கு வகுப்புகள் மழை வந்தால் அவர்களின் கதி என்னவென்றே கற்பனை பண்ண முடியாது. அது தான் வீரபுரம் மணிவாசகர் வித்தியாலயம். இங்கு எல்லோரையும் ஒன்றாக இருத்தி பல்தரக் கற்பித்தலே மேற்கொள்ளப்படுகிறது. ஆண்டியா புளியங் குளத்தில் உள்ள முஸ்லீம் மகா வித்தியாலத்தில் 54 பிள்ளைகள் ஆண்டு எட்டு வரை கற்கிறார்கள். 37 குடும்பங்கள் வாழும் அகதி முகாமிலேயே பாடசாலையும் உள்ளது. தளபாட வசதிகள் இல்லை. நிலத்தில் இருந்தே கற்கிறார்கள். நிலத்திலேதான் கோடுகள் போடப்பட்டு வகுப்பறைகள் பிரிக்கப்பட்டுள்ளன. ஊரின் பெயருக்கேற்ற விதத்தில் பாடசாலையும் ஆண்டியாகவே உள்ளது.

செட்டிக் குளத்தின் பெரிய பாடசாலையான செட்டிக்குளம் மகா வித்தியாலயம் இராணுவத்தின் வசம் உள்ளதால் அது இப்போ நாலாவது இடமாக முதலியா குளம் தேவாலயத்தில் நடத்தப்படுகிறது. (இதற்கு முன்னர் இப் பாடசாலை வெவ்வேறு மூன்று இடங்களில் நடைபெற்று வந்தது) இங்கு 150 மாணவர்களும் ஆசிரியர்களும் உள்ளனர். ஆண்டு பத்து வரை நடைபெறுகிறது. தளபாட வசதியோ இட வசதியோ கிடையாது இப் பாடசாலைகள் யாவும் நகரிலிருந்து வரும் ஆசிரியர்களாலேயே (முஸ்லீம் மகா வித்தியாலயம் தவிர) நடத்தப்படுகிறது. போக்குவரத்து தடைப்பட்டால் பாடசாலைகளும் தடைப்படும். மீளக் குடியமர்த்தல் தொடர்பாக செட்டிக்குளப் பிரதேச செயலர் தேவி திருநாவுக்கரசு அவர்களிடம் வினவியபோது தனது பிரிவில் இந் நடவடிக்கை துரிதமாக மேற்கொள்ளப்படுகிறதெனக் கூறினார். இதற்காக உடனடிப் பொருட்களின் கொள்வனவுக்கு குடும்பம் ஒன்றிற்கு இரண்டாயிரம் ரூபாவும் குடிசை அமைப்புக்கு ஐந்நூறு ரூபாவும் தொழில் முயற்சிக்கு நாலாயிரம் ரூபாவும் கொடுக்கப்படுகிறது.

குடும்பங்கள் பல சேர்ந்தவுடனேயே அவர்களின் பகுதியில் மீளக்குடியமர்தல் மேற்கொள்ளப்படுகிறது. குடியமர்த்தப்பட்ட நாளில் இருந்து தொடர்ந்து 3 மாதங்களுக்கு நிவாரணமும் கொடுக்கப்படுகிறது எனவும் குறிப்பிட்டார்.

# வவுனியாவிலிருந்து ...

# யுத்தத்திற் ...

# எத்தனை ...

ஆனால் இவரது எல்லைக்குள் வரும் மீளக்குடியமர்த்தப் பட்ட முதலியகுளம் கப்பாச்சிக் கிராமப் பகுதியில் ஒரு குழந்தை காணாமல் போனதும் அதன் பின்பு 12 குடிசைகள் வரை இனம் தெரியாதோரால் எரிக்கப்பட்டதும் இங்கு குறிக்கப் பட வேண்டியது. மீளக்குடியமர்த்தப்பட்ட பகுதிகளில் வாழ்வதற்கான பொருளாதார சமூக வசதிகளும் விருத்தியாக்கப்படவில்லை என்பதனால் ஒரு சூனியப் பிரதேசத்தில் ஏனோதானோ என வாழுகின்ற மனோநிலையே இவர்கள் மத்தியில் காணப்படுகிறது. குறிப்பாக அகதி வாழ்வின் கொடூரத் தன்மைகளில் இருந்து விடுபட மீளக்குடியமர்தலை விட வேறுவழியில்லை என்பதனாலேயே இம்முடிவுக்கு இம்மக்கள் வந்ததாகத் தென்படுகிறது. உதவி அரச அதிபர் அவர்கள் குறிப்பிட்ட நிவாரணம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த கப்பாச்சிக் கிராமவாசியொருவர் மூன்று மாதங்களுக்கு மட்டுமே வழங்கப்படுகிற இந் நிவார



-ஒரு வகுப்பறை; ஆண்டியா புளியங்குளம் முஸ்லீம் வி

நன்றி - நூலகத்திட்டம்



# செய்தி அறிக்கை

# கங்கள்?

4000 ஏக்கர் நெற்செய்கைக்கு உட்பட உள்ளது. ஆனால், 9ம், 10ம் பிரிவுகளில் வாழ்ந்த 260 குடும்பங்களைச் சேர்ந்த 1300 பேரில் யாரும் இதுவரை இங்கு மீளக் குடியமர்த்தப்படவில்லை மாறாக தமிழர்களுடைய நெற் பிரதேசங்களை அங்கு வாழும் பெரும்பான்மையினர் அபகரித்துக் கொண்டனர். இராணுவம் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறது. மூன்று சிங்களக் குடும்பங்களே இருந்த பாவற்குளத்தில் இப்போ 1200 வாக்காளர்கள் உள்ளார்கள்.

அவர் மேலும் தெரிவித்ததாவது இன விகிதாசாரம் என்பது திட்மிட்டுச் சிங்கள மக்களை குடியேற்றுவதற்கான முகமூடியே என்றும் அதனாலேயே திட்டமிட்ட் முறையில் எல்லைப் புறங்களிலேயே வீடமைப்புத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. நெருக்கடிகள் ஏற்படும் காலங்களில் இவ் வீடுகளில் குடியேற்றப்படும் மக்கள் இவ் வீடுகளை விட்டு -அண்மையில் கப்பாச்சியில் நடைபெற்றது போல- வீடுகளை விட்டு ஓடுவார்கள். அவ் வீடுகளில் சிங்கள மக்கள் தாமாகவே குடியேறிக்கொள்வார்கள். இது தான் அவர்களின் திட்டம் என்றார் அவர்.

### பல்கலைக் கழக இணைப்புக் கல்லூரி

நகரத்தில் தமிழ் பேசும் மாணவர்களுக்கு என உருவாக்கப்பட்ட பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரியில் மாணவர்களுக்கான அடிப்படை வசதிகள் மிகவும் குறைவாகவே உள்ளன. தமக்கான வசதிகளை செய்துதரக் கோரி மாணவர்களால் நடாத்தப்பட்ட போராட்டம் நிறுத்தப்பட்டு கல்லூரி மூடப்பட்டுள்ளது. இது தொடர்பாக அக் கல்லூரியின் பதிவாளரை வினவிய போது மாணவர்களுக்கு எந்த விதமான பிரச்சினைகளும் இல்லை; சில தூண்டுதல்களாலேயே மாணவர்கள் இவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்றார். மூன்று கற்கை நெறிகளைக் கொண்ட இக் கல்லூரியில் தற்போது 250 மாணவர்கள் வரை அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் இவர்களுக்கென ஓரிடப்படுத்தப்பட்ட விரிவுரை மண்டபங்கள் இல்லை இருப்பவையும் இட வசதி குறைந்த மிகச் சிறிய இடங்களே. மலசலகூட வசதிகள் மிகக் குறைவு. இது பற்றி உயர் அதிகாரியுடன் மாணவர்கள் உரையாடிய போது ''அரை பரல் வெட்டித் தருகிறோம், மூத்திரம் பெய்யுங்கள்'' என்றாராம். நீர் மின்சார வசதிகள் இப்போதுதான் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நூலக வசதி இல்லை. இப்போ இருக்கும் நூலகத்தில் ஒரே நேரத்தில் ஐந்து மாணவர்கள் தான் கற்க முடியும், மகாபொல வசதிகள் உரிய நேரத்தில் மேற்கொள்ளப்படாமையால் அதனை இழந்தவர்கள் கூலி வேலை செய்தே கற்க வேண்டிய நிலையில் உள்ளனர் நாட்டிலுள்ள ஒன்பது இணைப்புக் கல்லூரிகளில் ஒன்றான வவுனியா இணைப்புக் கல்லூரிக்கு மட்டும் ஏன் இந்தப் பாராபட்சம் என மாணவர்கள் கேட்கின்றனர்.

* * *

ஆனால், வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரும், இராணுவ உயர் அதிகாரிகளும் தெரிவித்த கருத்துகள் வவுனியா பற்றி இவற்றிற்கு முற்றிலும் எதிரான பிம்பத்தையே ஏற்படுத்தும். அரசாங்க அதிபர் தில்லை நடராஜா அவர்களுடன் பேசும் போது எல்லாம் மிகவும் சுமூகமாகவும் கட்டுப்பாட்டுடனும் இருக்கின்றன என்றே தோன்றும். சிவில் நிர்வாக அதிகாரங்கள் முதல் அனைத்துக் கட்டுப்பாடுகளும் இராணுவப் பிரிகேடியரின் விரலசைவில் இயங்குவதை இட்டு அவர் ஒன்றும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. அரச அதிபரை விட இராணுவ இணைப்பதிகாரி அனைத்து அதிகாரங்களும் படைத்தவராக இருப்பதை தெளிவாகக் காணக் கூடியதாக இருந்தது. 'வவுனியா பல்கலைக் கழக இணைப்புக் கல்லூரி தொடர்பான பிரச்சினையில் வேறு எவரையும் சந்திப்பதை விடுத்து பிரிகேடியருடன் பேசினாலேயே பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்து விடும்' என ஒரு சிவில் உத்தியோகத்தரே தெரிவிக்கும் நிலையில் இருக்கிறது பிரிகேடியரின் அதிகாரம்

சிவில் நிர்வாக நடவடிக்கைக்ளைப் பொறுத்தவரை இராணுவ கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட் பகுதிகளிலேயே மேற்கொள்ளப்படுகிறது என்கிறார் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் தில்லை நடராஜா. ''வவுனியா வடக்குப் பிரதேசம் (நெடுங்கேணி) எமது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட பிரதேசம். அங்கும் அரச ஊழியர்கள் கடமையாற்றப் போகின்ற போது அவை எமது கட்டுப்பாட்டிற்குள் இல்லை.''


கட்டுப்பாட்டிற்குட்பட்ட ' பகுதிகளில் மேற்கொள்ளப்படும் சிவில் நிர்வாக நடவடிக்கைகள் இராணுவப் பொலிஸ் உயர் அதிகாரிகளுடன் இணைந்து மேற்கொள்ளப்படுவதால் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பெரிதும் உதவுகின்றது என்கிறார் அவர். இராணுவத்திற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள பிரிகேடியரே சிவில் நிர்வாக இணைப்பு அதிகாரியாகவும் உள்ளார் என்ற போதும் எமது சுதந்திரமான எல்லா நடவடிக்கைகளையும் இவர்கள் கட்டுப்படுத்துவது இல்லை. மற்றைய எல்லைப் புறயுத்த நகரங்களுடன் ஒப்பிடுகையில் இங்கு கட்டுப்பாடுகள் மிகவும் குறைவு என்று தெரிவிக்கின்றார் திரு. தில்லை நடராஜா

கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் புத்தர் சிலைகள் நிறுவப்பட்டு வருவது தொடர்பாக கருத்துத் தெரிவித்த திரு. நடராஜா அவர்கள், இவற்றை நிறுத்தப் பிரிகேடியர் அவர்கள் உறுதி அளித்துள்ளார் எனக் குறிப்பிட்டார்.

சிங்களக் குடியேற்றம் தொடர்பாக இரண்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது உண்மையே என்று தெரிவிக்கும் அரசாங்க அதிபர் அது பற்றிக் குறிப்பிடுகையில் ''

தேக்கம் காட்டுக் குடியேற்றம் அவற்றில் ஒன்று என்றும், அங்கு மூன்று இனத்தவருக்கும் இன விகிதாசாரப்படி குடியிருப்புக் காணிகள் வழங்கப்பட்டன என்றும் ஆனால் நீர்வசதி இங்கு மிகவும் குறைவானமையினால் சில குடும்பங்கள் அங்கிருந்து வெளியேறி விட்டன என்றும் அவ்விடங்களில் இப்போது பெரும்பான்மை இனத்தைச் சார்ந்தவர்கள் குடியேறி விட்டனர் என்றும் தெரிவித்தார். இது தொடர்பாக ஜனாதிபதிக்கு பல முறைப்பாடுகள் கொடுக்கப்பட்டன. அதன் விளைவாக வடகிழக்கு ஆளுனர் நளின் செனவிரத்னாவின் பணிப்பின் பேரில் 3 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டது. இக்குழுவின் சிபாரிசுப்படி 1989 ஒக்டோபர் 21ம் திகதிக்கு முன் குறிப்பிட்ட காணிகளில் இருந்தவர்கள் தமது காணிகள் என நிரூபிக்கும் பட்சத்தில் அனுமதிக்கப்படுவர் எனக் கூறப்பட்டது.

இவ்வாறே யாத்திரீகர் விடுதிக்கு என கொடுக்கப்பட்ட காணியில் அரச அதிபரின் அனுமதி இன்றி 9 கடைகள் கட்டச் சிங்களவருக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. நகர அபிவிருத்தி அதிகாரசபை இவ்வத்துமீறிய நடவடிக்கையை கண்டித்துள்ளதோடு அக்கடைகளை அகற்றுமாறும் இணைப்பதிகாரியை வேண்டி உள்ளோம்.



யு.என்.எச்.சி.ஆர் அகதி முகாம்

இரண்டு மாதங்களுக்கு முன்பு கூட சில படைவீரர்கள் கோவிற்குளம் சென்று 120 குடும்பங்களை வெளியேறுமாறும் அக்காணிகள் விமானப்படைத்தள விஸ்தரிப்புக்கு எடுக்கப்பட்டுள்ளதாகவும் அறிவித்ததாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டன. ஆனால் பின்பு படைஅதிகாரிகளுடன் தொடர்பு கொண்ட பொழுது அவ்வாறு தாம் சொல்லவில்லை எனக் கூறினார். இவ்வாறு இனிமேல் நடந்தால் உடன் பொலிஸாருக்கு முறைப்பாடு தெரிவிக்கும்படி மக்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

விடுதலைப்புலிகளும் எமது நடவடிக்கைகளில் தலையிடுவதில்லை. கட்டுப்பாட்டிற்குள் இல்லாத பகுதிகளிலும் கூட அவர்கள் எமக்கு இடையூறு விளைவித்ததாக முறைப்பாடுகள் வரவில்லை.

இங்கிருக்கும் தமிழ்க் குழுக்களைப் பொறுத்த வரையிலும் சிலர் தம்மை இனங் காட்டியுள்ளனர். சிலர் இனம் காட்டாமலேயே செயற்படுகின்றனர். முன்பெல்லாம் இவர்கள் தனியார் வீடுகளுக்குச் சென்று அடையாள அட்டை பார்ப்பது, வீடுகளைச் சோதனை செய்வது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள்.

அவர்களின் பாதுகாப்பைப் பொலிஸ் பொறுப்பேற்றுள்ளது.

அண்மையில் கூட அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றில் கடமையாற்றிய மனோராஜன் என்பவர் காணாமல் போய் பின்பு கப்பாச்சி காட்டுப் பகுதியில் சடலமாக மீட்கப்பட்டார். விசாரணை தொடர்கிறது.

இவ்வாறான சில குறிப்பிடத்தக்க நிகழ்வுகளைத் தவிர வவுனியா நகரம் மிகவும் அமைதியாகவே உள்ளது. பாதிக்கப்பட்ட மக்களின் புனர் வாழ்வுக்காக மீளக் குடியேற்றங்களும் நலன்புரி நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அரசாங்க அதிபர் அவர்களின் பேச்சில் தொனிக்கும் நம்பிக்கையும் உறுதியும் அவருக்கும் அவரது கடமைகளை ஆற்றுவதற்கும் யாராலும் எத்தகைய இடையூறுகளும் இல்லை என்றே எண்ண வைக்கின்றன. ஆம், உண்மையில் அரசாங்கத்தின் பிரதிநிதியாக வவுனியாவில் இயங்க வேண்டிய அரசாங்க அதிபரின் கடமைகள் அனைத்தையும் பிரிகேடியரே செய்துவிடும் போது இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது.......

வவுனியாவில் பாதுகாப்பு மற்றும் சிவில் நிர்வாகம் தொடர்பாக உண்மை அதிகாரம் படைத்த இராணுவ அதிகாரிகளிடம் விசாரித்தால் என்ன என்று தோன்றியது. பெயர் குறிப்பிட விரும்பாத இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்த கருத்துக்களின் சாரம்; வவுனியாவின் பெரும் பகுதியை கட்டுப்பாட்டுள் கொண்டு வருவதற்கு மூவகையான திட்டங்களை இலக்காகக் கொண்டிருந்தோம். அதில் ஒன்றுதான் மக்களுடைய பாதுகாப்பு இதில் சகலரது பாதுகாப்பும் அடங்கும் அதற்காகக் கைப்பற்றிய பிரதேசங்களின் எல்லைகளில் பதுங்கு குழி வரிகளை (bunker line) ஏற்படுத்தியுள்ளோம். இதன் மூலம் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் புலிகளை முற்றாகத் துடைத்தெறிவதோடு உள்ளே நுழைவதையும் தடுத்துள்ளோம்.

இரண்டாவது, சிவில் நிர்வாகத்தை மீளமைத்தல். இந்த நோக்கை எய்துவதற்கு முதலில் அரசாங்கக் கட்டிடத் திருத்த வேலைகளில் ஈடுபட்டோம். ஜனாதிபதி நடமாடும் சேவை இதனை மேலும் உற்சாகப்படுத்தியது. இதனூடாக மூன்று வகையான இலக்கினை நாம் அடையக் கூடியதாக இருந்தது. மீளக் குடியமர்த்தல், அபிவிருத்தி, பலமான சிவில் நிர்வாக உருவாக்கம் என்பவையே அவை. இந்த வகையில் 1000 வீடமைப்புத் திட்டம், பாவற்குளம் விவசாய அபிவிருத்தித் திட்டம், ஆடைத் தொழிற்சாலை முதலியவற்றை அபிவிருத்திக் கூறுகளாகக் கூற முடியும்.

மேலும் அபிவிருத்தி முயற்சிகளை மேற் கொள்ளப் பணம் பெரும் பிரச்சினையாக உள்ளது. காரணம் அரசாங்கத்தால் குறைந்த அளவில் ஒதுக்கப்படும் பணம் கூட உரிய நேரத்தில் வந்து சேர்வதில்லை. அதனால் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் மக்களின் தவறான நோக்குதலுக்கு உட்பட்ட நிகழ்வுகளும் உள்ளன.

மூன்றாவதாக, இனங்களுக்கிடையிலான ஒற்றுமையை ஏற்படுத்துவது. இதனை நிறைவேற்றுவதற்கு நாட்டின் நடைமுறையில் உள்ள சட்டங்களை அமுல்படுத்தினோம். இதனால் சிங்கள மக்களின் ஒரு பகுதியினருக்கு வேண்டப்படாதவர்களானோம். எனினும் எந்த இனத்திற்கும் பாதகமாக எமது செயற்பாடுகள் அமையக் கூடாது என்பதில் உறுதியாக உள்ளோம். அதுவே எமது வெற்றிக்குக் காரணம்.

* * *

வவுனியாவில் இராணுவ அதிகாரிகளைச் சந்திப்பது ஒன்றும் கஷ்டமாக இருக்கவில்லை என்பது ஒரு ஆச்சரியமான விடயம்தான். ஆனால் அங்குள்ள நிலைமைகளைப் பார்க்கும் போது ஒரு விடயம் தெளிவாகத் தெரிகின்றது. அதாவது, இராணுவம் மிகவும் திட்டமிட்ட வகையில் அதன் கடமைகளை தேர்ச்சி நயத்துடன் ஆற்றி வருகின்றது என்பதேயாகும். கிழக்கில் மட்டக்களப்பிலும் திருகோணமலையிலும் உள்ள இராணுவத்தினை விட வவுனியாவில் உள்ள இராணுவப் பிரிவுக்குச் சில விசேட கடமைகள் இருக்கின்றன. அதாவது வடக்குக்கும் தெற்குக்கும் இடையிலான தொடர்புக்கான மாற்றுப் புள்ளியாக உள்ள வவுனியாவில் தமிழ் மக்களின் மனதைத் தொடும் விதத்தில் நடந்து கொள்வது அதற்கு அவசியமாக இருக்


→ 11

கட்டுரை - கரன்

படங்கள் - சாணக்கியன்



▲ முதலியா குளத்தில் ஒரு வீடு



வீரபுரத்தில் ஒரு பாடசாலை ▼

நன்றி - நூலகத்திட்டம்



# மலையகத் தமிழ் மக்களது பிரச்சினைக்கான தீர்வுஎன்ன?

சிவம்

*(சென்ற இதழ் தொடர்ச்சி...)*

சுதந்திரத்தையொட்டிய காலப் பகுதியில் இலங்கையின் சிங்களப் பேரினவாத அரசியலுக்கு முக்கிய இலக்கானோர் இந்திய வம்சாவழியினரே. தமிழ்த் தேசியவாத அரசியல், நடைமுறையில், இந்திய வம்சாவழியினரை ஒதுக்கி வைத்தது. இதன் விளைவாக இந்திய வம்சாவழித் தமிழர் தம்மை ஒரு சமுதாயமாகக் கருதும் சூழ்நிலை மேலும் உறுதியாயிற்று. இதில் கவனிக்கத்தக்க ஒரு விஷயம் யாதெனில், வடக்கு கிழக்கிற் போலல்லாமல், ஒரு இஸ்லாமியரான அஸீஸின் தலைமையில் முக்கியமான ஒரு தொழிற் சங்கம் அமைவது மலையகத்திற் சாத்தியமாக இருந்தது. அதேவேளை, மலையகத் தொழிலாளர் இலங்கையின் மற்றைய தொழிலாளரை விடப் பின்தங்கிய நிலையில் வைக்கப்பட்டமையால் அவர்களது தொழிற்சங்க, அரசியற் தலைமைகளை வசதி படைத்த பெரிய கங்காணி வியாபாரிப் பரம்பரைக்காரர்கள் கைப்பற்றிக் கொள்ளவும் இயலுமாயிற்று என்பதும் கவனத்திற்குரியது.

இலங்கையின் சுதந்திரத்தின் பின் இந்திய வம்சாவழியினரில் இந்தியப் பிரசைகளாக இருந்தவர்கள் பலர் இந்தியா திரும்பிப் போக ஆரம்பித்தனர். வியாபாரிகளில் ஒரு பகுதியினர் இலங்கையின் பல்வேறு நகரங்களிலும் தொடர்ந்து வாழ்ந்தனர். உதிரிகளாகச் சிதறிய இந்திய வம்சாவழியினர், தமது பிரதேசத்தின் மக்களில் ஒரு பகுதியினராயினர். அதேவேளை கொழும்புச் செட்டி, பரவர் போன்ற சமுதாயப் பிரிவினர் தமது சுய அடையாளத்தைப் பேணினர். இன்று இவர்களிற் பெரும்பாலோர் சிங்களத்தை தமது முதலாவது அல்லது இரண்டாவது மொழியாக்கிக் கொண்டுள்ளனர்.

கடந்த சில நூற்றாண்டு கால இடைவெளியிற் தென்னிந்தியாவிலிருந்து வந்த பல்வேறு சமூகப் பிரிவினர் சிங்களத்தையே தமது வீட்டு மொழியாக்கியதற்குக் காரணங்கள் பல. வடக்கில் நிலவிய இறுக்கமான சாதிய சமுதாயமும் மேற்சாதியினரது.அகம்பாவமான மனோபாவமும் இந்த மக்களிற் கணிசமானோரைத் தமிழ்ச் சமுதாயத்தின் ஒரு பகுதினராகக் கொள்வதை ஊக்குவிக்கவில்லை என்பது ஒரு முக்கிய காரணமில்லாவிடினும் நாம் கணிப்பில் எடுக்க வேண்டிய காரணமாகும்.

## தேசிய இனமாக அடையாளம் காண விரும்புகிறார்களா?

மேற் குறிப்பிட்டவாறு சிங்களத்தைத் தமது மொழியாகச் சுவீகரித்துக் கொண்டவர்களது நிலைக்கும் இந்திய வம்சாவழித் தமிழராகத் தம்மைக் கருதுவோருக்குமிடையிலான முக்கிய வேறுபாடு தமது மொழி பற்றிய கண்ணோட்டம் எனலாம். அரசியற் சூழ்நிலைகளும் இவர்களிடையே ஒரு பொதுமையை ஏற்படுத்தியுள்ளன. அந்தளவில், வடக்குக் கிழக்கின் தமிழ்த் தேசிய இனத்தின் ஒரு பகுதியாகத் தம்மைக் கருத முடியாத நிலையில் உள்ள இந்திய வம்சாவழித் தமிழர் அனைவரும் தம்மை ஒரு தேசிய இனப்பிரிவாகவோ ஒரு தேசிய இனமாகவோ கருத இடமுண்டு. இவ்விடயத்திற், குறிப்பிட்ட ஒவ்வொரு சமுதாயப் பிரிவினரது மனநிலையும் சமுதாயப் பிரிவினரிடையிலான உறவும் முக்கியமானவை. இம்மக்கட் பிரிவினர் அனைவரும் தம்மை ஒரே தேசிய இனத்தவராகக் கருதவிரும்பினால் அதற்கு அவர்கள் தொடர்ச்சியான ஒரு பிரதேசத்தில் வாழாமை ஒரு தடையாக முடியாது.

கொழும்பிலோ கண்டியிலோ அல்லது தென்னிலங்கையில் வேறெங்காயினுமோ நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட வடக்குக் கிழக்கின் தமிழர் தம்மை வடக்குக் கிழக்கின் தமிழ் இனத்தவராகவே கருத இயலுமாயின், மலையக மக்களுடன் தமது பின்புலங் காரணமாக நெருங்கிய உறவுடைய மக்களை மலையக மக்களுடன் சேர்த்துக் கருதுவதற்கும் நியாயம் இருக்கிறது. இதற்கு ஆதாரமாக அமெரிக்காவின் கறுப்பு இனமக்களையோ, ஸ்பானிய இனத்தவர்களையோ கொள்ளமுடியும். பல்வேறு பின்னணிகளினின்றும் வந்த இம் மக்கள் பிரிவினர் இன ஒடுக்கலின் அடிப்படையிலேயே தம்மைத் தேசிய சிறுபான்மை இன்ங்களாக அடையாளங்காண்கின்றனர். எவ்வாறாயினும் குறிப்பிட்ட மக்கட் பிரிவுகள் தம்மை ஒரு தேசிய இனமாகவோ இனப்பிரிவாகவோ அடையாளங்காண விரும்புகிறார்களா என்பதே முக்கியமானது. இத்தகைய தெரிவுகள் அரசியல் நிலவரங்களாலும் சமுதாய நிலமைகளாலுமே நிர்ணயமாகின்றன.

வெவ்வேறு பிரதேசங்களில் சிதறிக்கிடப்பது ஒரு இனத்தைச் சேர்ந்தவர்களின் சுய அடையாளத்தின் மறுப்பாகி விடாது. சீனாவின் உள்நாட்டு யுத்தங்களினாலும் நெருக்கடிகளாலும் உலகின் பல பாகங்களிலும் சிதறிக் கிடந்த சீன மக்களுக்குச் சீனப் பிரசைகளாகும் உரிமையை மக்கள் சீனக் குடியரசு அளித்தது. இவ்வாய்ப்பு, சீன விடுதலையையடுத்து நீண்ட காலத்திற்குத் தொடர்ந்தது. இவ்வாறே, இன்று உலகமெல்லாம் சிதறிக்கிடக்கும் வடக்குக் கிழக்கின் தமிழருக்கும் கட்டாயத்தின் பேரில் இந்தியாவிற்கு அனுப்பப்பட்ட மலையகத் தமிழருக்கும் சிங்கள, முஸ்லீம் மக்களுக்கும் பறங்கியருக்கும் தமது தாய் நாட்டுக்குத் திரும்பும் உரிமை இருக்க வேண்டும். அவர்கள் தம்மை இலங்கையின் ஒரு தேசிய இனத்தைச் சேர்ந்தவர்களாகக் கருதும் வரை அந்த உரிமை அவர்கட்கு மறுக்கப்படக்கூடாது. இலங்கைக்கு மீளும் வாய்ப்பும் சாதகமான சூழ்நிலைகளும் இருந்தும் நாடு திரும்ப விரும்பாதவர்களது நிலை வேறு. அவர்கள் தமது புகலிடங்களைத் தமது நிரந்தர வசிப்பிடமாக்கிக் கொண்டவர்கள்; அவர்களது தெரிவு, தாம் வாழும் அயல் நாட்டின் ஒரு பகுதியினராகுவதாயின் அதை எவரும் மறுக்க இடமில்லை. மலையக மக்கள் எனப்படும் மக்கட் பிரிவினர் கோரும் தேசிய இன அந்தஸ்து சுயநிர்ணய உரிமையையும் உள்ளடக்குமாயின் அச் சுயநிர்ணயம் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படும் என்பதும் இன ஒடுக்கலுக்கெதிரான போராட்டத்தின் மீதும் இலங்கையின் தேசிய இனங்களுக்கிடையிலான ஐக்கியத்தின் மீதும் அதன் பாதிப்பு என்ன என்பதும் முக்கியமான கேள்விகள்.

## தெரிவிற்கான உரிமையும் தெரிவும் ஒன்றல்ல

ஒரு தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமை என்பது அந்த இனம் தன் இருப்பைத் தீர்மானிக்கும் உரிமையாகும். அதற்கு நடைமுறை சார்ந்த வரையறைகள் இல்லாத பட்சத்தில், அது பிரிந்து போகும் உரிமையாகவே பொருள்படும். பூகோள ரீதியாக ஒரு தொடர்ச்சியான பிரதேசம் உள்ள ஒரு தேசிய இனம் தன் சுயநிர்ணய உரிமையை அவ்வாறு நடைமுறைப்படுத்த இடமுண்டு.ஒன்றன் தெரிவுக்கான உரிமையும் அதன் தெரிவும் ஒன்றேயல்ல என்பதை மீண்டும் இங்கு வலியுறுத்த வேண்டும்.

மலையக மக்கள் ஒரு தனி நாடோ ஒரு சமஸ்டி அரசோ கேட்பது இன்று நடைமுறையிற் சாத்தியப்படாது. முஸ்லீம்கள் போன்று அவர்கள் தொடர்ச்சியான ஒரு நிலப்பரப்பில் வாழாமையால் அவர்களது சுயநிர்ணய உரிமையைப் பிரிந்து போகும் உரிமை என்றவாறு நடைமுறைப்படுத்த இயலாது. ஆயினும் அவர்களது நலன்களை உறுதிப்படுத்துமாறான சுயாட்சிப் பிரதேசங்களை நிறுவமுடியும். அதுமட்டுமன்றி, அவர்கள் சிறுபான்மையாகச் சிதறி வாழும் பகுதிகளிலும் அவர்களது காணி, தொழில்,மொழி,மதம், கலாசாரம் போன்ற உரிமைகட்கான உத்தரவாதங்களைத் தரவல்ல சுயாட்சி அமைப்புக்களை ஏற்படுத்த முடியும்.

இதுவரைகாலமும் நடந்து வந்துள்ள தேசிய இனப்பிரச்சினை தொடர்பான கலந்துரையாடல்களும் அது பற்றிய கருத்துரைகளும் ஆலோசனைகளும் வடக்கு கிழக்கின் தமிழரது தேசிய இன ஒடுக்கலை மையமாகக் கொண்டே அமைந்துள்ளன. முஸ்லீம்கள் தமது இருப்பு பற்றிய அச்சங்களை வெளிப்படுத்தியும் கூட அவர்களது சுயநிர்ணய உரிமை பற்றிய அக்கறையை பல தமிழர் விடுதலை இயக்கங்கள் கவனமெடுக்கத் தவறியமை நம் கவனத்திற்குரியது.


மலையகத் தமிழரது பிரச்சினையை தமிழ்ப் பேசும் இனத்தின் பிரச்சினை என்ற தலைப்பினுள் புறக்கணிப்புக்குள்ளாக்குவது, வடக்கு கிழக்கின் தமிழரது நலன்கட்கும் உகந்ததல்ல, இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையின் சுமுகமான தீர்வுக்கும் உதவுவதல்ல. அந்த வகையில் மலையகத் தமிழரது பிரச்சினை அந்த மக்களது தனித்துவமான அரசியற் சமுதாயப்பின்னணியின் அடிப்படையில் ஒரு தேசிய சிறுபான்மையினத்தின் பிரச்சினையாகவேனும் தீர்க்கப்படவேண்டும். மலையக மக்கள் தம்மை ஒரு தனியான தேசிய இனமாகக் கருதுவார்களாயின் அதற்கு அவர்கள் தொடர்ச்சியான பிரதேசங்களில் வாழாமையும் இலங்கையிற் பலபாகங்களிற் சிதறி வாழ்கின்றமையும் அவர்களது நியாயமான விருப்பிற்குத் தடையாக அமையக் கூடாது.

மலையகத் தமிழரும் முஸ்லீம்களும் வடக்குக் கிழக்கின் தமிழினத்துடன் சேர்த்துக் கருதப்பட வேண்டும் என்ற கருத்தை வெவ்வேறு நோக்கங்கட்காகப் பலரும் தெரியப்படுத்தலாம். அவ்வாறே, அவர்களை ஒன்றாகக் கருதுவதை வேறுபட்ட நோக்கங்கட்காக எவரும் எதிர்க்கலாம். தேசிய இன ஒடுக்கலுக்கு இம் மூன்று தமிழ் பேசும் இனத்தவரும் முகங்கொடுக்கும் விதங்கள் வேறுபடுகிற காரணத்தால், அந்த ஒடுக்கலுக்கு எதிரான போராட்டங்களும் பிரச்சினையின் தீர்வுகளும் தம் அணுகுமுறைகளிற் குறிப்பிடத்தக்களவு, வேறுபடக்கூடும். மூன்று இனத்தவரும் தமது பொதுமொழியடிப்படையில் ஐக்கியப்படுவது நீண்ட காலத்தில் சாத்தியமாகலாம். அவ்வாறு நடப்பது இலங்கையின் தேசிய இனங்களின் ஐக்கியத்திற்கு நல்லது. எவ்வாறாயினும், இவ்வாறான ஐக்கியத்தை எவரும் நிர்ப்பந்திக்க முடியாது. இன்றைய சூழலில் அத்தகைய நிர்ப்பந்தம் பாதகமான விளைவுகளையே தரும். ●

இதுவரைகாலமும் நடந்து வந்துள்ள தேசிய இனப்பிரச்சினை தொடர்பான கலந்துரையாடல்களும் அது பற்றிய கருத்துரைகளும் ஆலோசனைகளும் வடக்கு கிழக்கின் தமிழரது தேசிய இன ஒடுக்கலை மையமாகக் கொண்டே அமைந்துள்ளன. முஸ்லீம்கள் தமது இருப்பு பற்றிய அச்சங்களை வெளிப்படுத்தியும் கூட அவர்களது சுயநிர்ணய உரிமை பற்றிய அக்கறையை பல தமிழர் விடுதலை இயக்கங்கள் கவனமெடுக்கத் தவறியமை நம் கவனத்திற்குரியது.

மலையகத் தமிழரது பிரச்சினையை தமிழ்ப் பேசும்
இனத்தின் பிரச்சினை என்ற தலைப்பினுள் புறக்கணிப்
புக்குள்ளாக்குவது, வடக்கு கிழக்கின் தமிழரது நலன்
கட்கும் உகந்ததல்ல, இலங்கையின் தேசிய இனப்பிரச்
சினையின் சுமுகமான தீர்வுக்கும் உதவுவதல்ல. அந்த
வகையில், மலையகத் தமிழரது பிரச்சினை அந்த மக்க
ளது தனித்துவமான அரசியற் சமுதாயப்பின்னணியின்
அடிப்படையில் ஒரு தேசிய சிறுபான்மையினத்தின்
பிரச்சினையாகவேனும் தீர்க்கப்படவேண்டும். மலை
யக மக்கள் தம்மை ஒரு தனியான தேசிய இனமாகக்
கருதுவார்களாயின் அதற்கு அவர்கள் தொடர்ச்சியான
பிரதேசங்களில் வாழாமையும் இலங்கையிற் பலபாகங்
களிற் சிதறி வாழ்கின்றமையும் அவர்களது நியாயமான
விருப்பிற்குத் தடையாக அமையக் கூடாது.

மலையகத் தமிழரும் முஸ்லீம்களும் வடக்குக் கிழக்கின் தமிழினத்துடன் சேர்த்துக் கருதப்பட வேண்டும் என்ற கருத்தை வெவ்வேறு நோக்கங்கட்காகப் பலரும் தெரியப்படுத்தலாம். அவ்வாறே, அவர்களை ஒன்றாகக் கருதுவதை வேறுபட்ட நோக்கங்கட்காக எவரும் எதிர்க்கலாம். தேசிய இன ஒடுக்கலுக்கு இம் மூன்று தமிழ் பேசும் இனத்தவரும் முகங்கொடுக்கும் விதங்கள் வேறுபடுகிற காரணத்தால், அந்த ஒடுக்கலுக்கு எதிரான போராட்டங்களும் பிரச்சினையின் தீர்வுகளும் தம் அணுகுமுறைகளிற் குறிப்பிடத்தக்களவு, வேறுபடக்கூடும். மூன்று இனத்தவரும் தமது பொதுமொழியடிப்படையில் ஐக்கியப்படுவது நீண்ட காலத்தில் சாத்தியமாகலாம். அவ்வாறு நடப்பது இலங்கையின் தேசிய இனங்களின் ஐக்கியத்திற்கு நல்லது. எவ்வாறாயினும், இவ்வாறான ஐக்கியத்தை எவரும் நிர்ப்பந்திக்க முடியாது. இன்றைய சூழலில் அத்தகைய நிர்ப்பந்தம் பாதகமான விளைவுகளையே தரும்.



நன்றி - நூலகத்திட்டம்



## 4

அரசியல் வேலைகள் இறுக்கமாக சுபாவையும் சந்திக்க முடிகிறதில்லைப் பிறகு. மனந்தாங்கல் பட்டான். ''நீ என்னுடையவள் என்றாப் பிறகு அரசியல் வேலை செய்யேக்கை ஒரு உற்சாக மாகவும் சந்தோஷமாகவும் இருக்குது'' என்றான். ''அப்படியா?'' என்றாள். அவள் அதற்குச் சந்தோஷப்பட்டதாகத் தெரியவில்லை.

இரவுகளில் தோழர்களுடன் கிராமங்களில் தங்கும் போதும் அவள் நினைவுகளில் ஐக்கியமாகி உற்சாகமானான். பாலாய் நிலவு காய்ந்தது. மெதுவாய் பனி இறுங்கியது. கடல்''ஷோ' 'வென்று இரைச்சல் படாமல் அமைதியாக இருந்தது. அந்தக் கடற்கரைக் கிராமத்தில் இவன் தோழர்களுடன் உற்சாகமாக வகுப்புக்கள் எடுத்தான். மீன் கறியுடன் சாப்பிட்டுவிட்டுப் படுக்கப் போகும் போது, 'சுபாவுடன் ஒரு முறை இந்தக் கிராமத்திற்கு வரவேணும்' என்று யோசித்தான். ''சுபா என்னோடை சேர்ந்து அரசியல் வேலை செய்தால் இன்னும் நல்லது'' என்றும் யோசித்தான்.

அப்புறமாகச் சில நாட்களுக்குப் பிறகு சுபாவைச் சந்தித்த போது இதுபற்றிக் கதைத்தான். சுபா உற்சாகமாக இல்லை. ஏற்கனவே தன்னைச் சந்திக்கவில்லை என்று கோபமாக இருந்தாள். ''நான் உன்னை வற்புறுத்தேல்லை. எனக்கு இது சந்தோஷமாக இருக்கும்'' என்றான். ''யோசிக்கிறன்''என்று முணுமுணுத்தாள். ''இண்டைக்காவது கொஞ்ச நேரம் என்னோடை இருக்க மாட்டீங்களா?'' என்று கெஞ்சினாள். ''இருக்கிறன்''என்றான்.

''ஒரு விஷயம் தெரியுமா? என்னைத் தான் ஞாபகம் இல்லை. இண்டைக்கு உங்கன்ரை பிறந்த நாள். அதாவது ஞாபகம் இருக்கா?'' கேட்டாள். ''ஓ..அப்படியா?'' என்று ஆச்சரியப்பட்டான். கையை எடுத்து முத்தமிட்டாள்.
''வேறை உங்களுக்கு என்ன வேணும்?...
''நீ வேணும்..'' என்று காதலுடன் அவன் பார்த்தான். 'நான் எப்பவும் உங்களுக்குத் தான். வேறை என்ன வேணும்?...''
''நீ முழுமையாக என்னுடையவள் என்று புரிய வேணும்''என்றான்.
''அதுக்கு என்ன செய்யவேணும்?''
''நான் விரும்புகிறதை நீயும் விரும்ப வேணும்?''
''அரசியலை சொல்றீங்களா?''
பேசாதிருந்தான்.
எட்டிக் கையைப் பிடித்துத் தன் கைக்குள் பொத்திக் கொண்டாள்.''எனக்கென்னவோ நீங்கள் எனக்கு மாத்திரம் தான் சொந்தமாக இருக்க வேணும் போல....நீங்களும் நானும் கலியாணம் முடிச்சு சந்தோஷமாக இருக்க வேணும்... இப்பவே உங்களிட்டை ஓடி வரட்டோ எண்டு நான் அடிக்கடி யோசிக்கிறன். உங்களைக் காணாமல் இருக்க முடியேல்லை. ஒவ்வொரு நாளும் உங்களோடை கதைக்க வேணும் எண்டு... என்னைப் புரிஞ்சு கொள்ளுங்கோ. அன்டைக்கொருநாள் உங்கன்ரை பெயரிலை ஆருக்கோ வீர அஞ்சலி எண்ட போஸ்ரரைக் கண்ட போது எவ்வளவு ஏங்கினன் தெரியுமா? ரத்தம் உறைஞ்சு போச்சு. ஒவ்வொரு நாளும் நான் பயப்பிடுறன். எங்கை நீங்கள் ஆமியிட்டை அகப்பட்டியளோ எண்டு ஏங்கிப் போறன். உங்களைக் கண்டால் தான் எனக்கு நிம்மதி. இண்டைக்கு உங்கன்ரை போர்த்டே. உங்களை எப்படியும் காண வேணுமெண்டு எவ்வளவு ஆசைப்பட்டன். என்னை விளங்குங்கோ.. ப்ளீஸ்.. நீங்கள் இல்லாமல் என்னாலை இருக்க முடியேல்லை.. இஞ்சை இருக்க எனக்குப் பயமாக இருக்குது. உங்கன்ரை பிரெண்ட்ஸ் வந்து இழுத்துக் கொண்டு போயிடுவினம். வாங்கோ உங்கன்ரை ரூமிற்குப் போவம். வாங்களேன்..''

ரூமிற்குப் போனார்கள். ''இண்டைக்கு முழுக்க உங்களோடை நான் இருக்கப் போறன்...''
''இரவைக்குமோ?''
''ஆசையைப் பாரன். பொழுது பட முன்னம் போக வேணும்'' இறுக்கி அணைத்து முத்தமிட்டாள். இவன் இன்னும் இறுக்கி அணைத்தான். உணர்ச்சி வசப்பட்டார்கள்.

இவன் குழம்பிப் போயிருந்தான். என்ன இது? இவளை நான் புரியவில்லையா? அல்லது என்னை இவள் புரியவில்லையா? இவள் மனம் திறந்து தன்னை அறிவித்து விட்டாள். குடும்பம். குழந்தை. குட்டி.. நான் இவளுக்கு மட்டும் சொந்தமாக இருக்க வேணும்..
இவனுக்கு அரசியல் முக்கியமாக இருக்கிறது. மக்களை அதிகம் நேசிக்கிறான். முரண்படுகிறது.
இவன் உற்சாகம் குன்றிப் போனான்.
அவள் சிட்டுக் குருவியைப் போல உற்சாகமாக இருந்தாள். காதைக் கடித்தாள். மூக்கைத் திருகினாள். நெஞ்சில் மயிர்களைத் தடவி, சுகமாகத் தலை வைத்தாள். கூடு கட்டினாள் அடைக்கலமானாள். இவன் அவள் மயிரை நீவினான். மிருதுவாகத் தடவினான். ஸ்பரிசத்தில் ஆழ்ந்து போனாள். நெஞ்சில் முத்தமிட்டு மயிரிற்குள் முகத்தைப் புதைத்தாள்.
இவன் யோசித்துக் கொண்டிருந்தான்.
பிறகு சுபா கொஞ்ச நாளைக்கு அவனைக் காண முடியாமற் போய் விட்டது.

அதிகம் வருத்தப்பட்டாள். ரூமில் சலித்துப் போய் இருந்தாள். மாலையில் தனிமையின் கொடுமையை உணர்ந்தாள். இரவில் நித்திரையின்றி அவஸ்தைப்பட்டு வருந்தினாள். வருந்தி என்ன பயன்? அதிகம் ஆத்திரப்பட்டாள்.

பிறகு உற்சாகமாக இருந்தாள். அவனும உறசாகமானான். அவன் நெஞ்சில் தலை வைத்துப் படுத்தபடி கேட்டாள். ''நீங்கள் ஒழுங்காக லெக்சரிற்கு வரமாட்டியளா?''

நேரம் கிடைக்குதில்லை...'' என்றான்.
''என்னைச் சந்திக்கத்தான் நேரமில்லை. லெக்சருக்கு வரவும் நேரமில்லையோ? இதை முடிச்சு சேட்டிவிக்கற் எடுத்தால் நல்லதல்லே?'' என்றாள்.
''என்க்கு லெக்சர விட நீதான் முக்கியம்'' என்று கட்டிப் பிடித்தான்.




அவளைக் கண்ட போது, அவன் உற்சாகத்துடன் ''இது நாங்கள் அடிக்கிற பேப்பர்'' என்று ஒரு பேப்பரைக் கொடுத்தான். அவள் அதை வாங்கி ''கண்டறியாத பேப்பர்..'' என்று எறிந்தாள்.

இவன் சடக்கென முறிந்து போனான்.
சிட்டுக் குருவியா, அணிற் குஞ்சா? ஒரு பழத்தை முழுமையாகக் கோதி விட்டது. ''சொறி'' என்று சொல்லிக் குனிந்து எடுத்தாள். ''சொறி.. சொறி.. ப்ளீஸ் மன்னிச்சுக் கொள்ளுங்கோ...''
பேசாதிருந்தான்.
''என்ன கதைக்க மாட்டீங்களா? உங்களைப் புண்படுத்திட்டன். நான் அவசரப்பட்டுட்டன். ப்ளீஸ் மன்னிக்க மாட்டீங்களா?''
மௌனித்தான்.

''என்ரை ராசாவுக்குக் கோபம் வந்திட்டுதோ? என்ன நீங்கள்?... எவ்வளவு கெஞ்சிக் கேட்கிறன். கதைக்கவே மாட்டீங்களா?''
ஒரு முறை நிமிர்ந்து பார்த்தான்.
கண் கலங்கியது. அழத் தொடங்கினாள். அவள் ஒரு 'போதும் அதனை ஆயுதமாகப் பாவித்ததில்லை.
''நீ செய்தது சரியென்டு நினைக்கிறீயா?'' என்றான். அவள் அழுதாள்.
''எனக்கும் உனக்கும் ஒத்து வராது போலத் தான்..'' அவள் நிமிர்ந்து பார்த்தாள். ''நானும் நீயும் சந்தித்தது ஒரு விபத்துப் போல... உன்ரை பாதை வேறை.. என்ரை பாதை வேறை..'' அவள் இன்னும் அழத் தொடங்கினாள். 'அதிகமாகக் கதைத்து விட்டேனோ' அவன் கவலைப் பட்டான்.
''வா. ரூமிற்குப் போய் இருந்து கதைப்பம்..'' என்றான். அவள் தொடர்ந்தாள். முகத்தை நிமிர்த்தி இரண்டு கண்களிலும் முத்தமிட்டான். ''அழவேண்டாம்'' என்றான். நெஞ்சில் சாய்ந்தாள். இவன் தலையைத் தடவியபடி ''அழாதை.. ஏன் என்னைப் புரிஞ்சு கொள்ளுகிறாய் இல்லை..'' என்றான். அவள் விக்கி விக்கி அழுதாள். விசும்பல்களுக்கிடையில் ''அம்மா...'' என்றாள். ''நான் அம்மாட்டை போப்போறன்..'' என்று இன்னும் அழுதாள். அவளைச் சாந்தப்படுத்தினான். கட்டிப் பிடித்து இறுக்கி முத்தமிட்டு ''எனக்கு நீதான் வேணும்...'' என்றான். ''என்னை நல்லா வருத்துறீங்கள்..'' என்றாள். ''வருத்த மாட்டேன்...'' என்று தடவினான்.

''என்னில் விட உங்களுக்கு அரசியல் தான் முக்கியம்'' என்றாள்.
கையைத் தளர்த்திக் கொண்டான். அவள் கட்டிக் கொண்டாள்.
''என்ன, என்னைப் புரிகிறியள் இல்லை. உங்களுக்காக நான் எவ்வளவு ஏங்கிறன்... நான் உங்களை முழுசாகக் காதலிக்கிறதை நீங்கள் நம்பேல்லையா?'' என்று கேட்டாள்.
அவள் அவளாக இருக்க விரும்புகிறாள். நான் நானாக இருக்க விரும்புகிறேன் '' என்று யோசித்தான். ஒருவராவது விட்டுக் கொடுக்கலாம்; விட்டுக் கொடுக்க வேணும்.

யார் விட்டுக் கொடுப்பது? நானா? எதை விட்டுக் கொடுப்பது? அரசியலையா? அது உயர்ந்த இலக்கு. அவள் ஏன் கடைசி வரை துணை வரமாட்டேன் என்கிறாள்.சீரியஸ்சாக அவளுக்குக் கொஞ்சம் எழுத வேணும்.
அவன் அவளுக்கு முத்தமிட்டான். இறுதி முத்தம் அது என்பதை அவன் அறிந்திருக்கவில்லை. அவள் கன்னத்தைக் கடித்து முத்தமிட்டாள். தான் கொடுத்தது இறுதி முத்தம் என்று அவளுக்கும் தெரிந்திருக்கவில்லை.பாவம் பேதை அவள்

''நான் உன்னை நல்லாய் விரும்பிறன். நீ என்னை விரும்பிறதும் எனக்குத் தெரியும். ஆனால் இருவரும் ஒருவரை ஒருவர் புரியவில்லை. எனது இலக்கு வேறு. உனது பாதை வேறு. அதிகம் எழுத ஒன்றுமில்லை. எனக்காக காத்திரு என்று வற்புறுத்தவில்லை. காத்திருந்தால் சந்தோஷப்படுவேன். எவ்வளவு காலமானாலும் உனக்காக நான் காத்திருப்பேன். எனது அரசியல் போக்கு உனக்குத் தெரியும். எப்பவும் இராணுவம் என்னைப் பிடிக்கலாம். உனது வாழ்க்கையைப் பற்றி நீ யோசி. நான் சுதந்திரமாக அரசியலில் ஈடுபடுவதை விரும்புகிறேன். இது உனக்கு புரியும் என்றே நினைக்கிறேன். எனது கதவுகள் உனக்காகத் திறந்தபடி இருக்கும். நீ எப்பொழுதாயினும் உள்ளே வரலாம். நீ வெளியில் போகும் போது அதிகம் கவலைப்படுகிறேன். என் சின்னப் பெண்ணே, உன்னை முத்தமிடுகிறேன்'' இரவு இதனை எழுதி முடித்தான். 'இனி அவளுடன் உறவே இல்லையோ?' என்ற ஒரு கணம் திகைப்புடன் யோசித்தான். அவனுக்கு அழுகை வந்தது.

இரண்டு மூன்று நாட்களுக்குள் அவளைக் கண்டு கடிதம் கொடுத்தபோது ஆச்சரியப்பட்டாள். ''கனநாளைக்குப் பிறகு... மழைவரப் போகுதுபோல...'' ''வாசிச்சுப்பார்...'' அவள் முகத்தைப் பார்ப்பதைத் தவிர்த்தான். கொஞ்ச திகிலுடன் நின்றாள் அவள்.

''அவசரமாகப் போகவேணும். பிறகு உன்னைச் சந்திக்கிறன்.'' என்று சைக்கிள் மிதித்தான். அவள் திகைத்துப் போய்த்தான் நின்றாள்.

பிறகு அவன் அவளைக் காண முடியாமல் போனது துரதிஸ்டம் தான்.

இராணுவம் உக்கிரமாக அவனைத் தேடியது. ஒளித்து விட்டான்.கம்பஸ் பக்கம் போவதை நிறுத்திக் கொண்டான். சுபாவைச் சந்திக்க இயலவில்லைப் பிறகு.

கடைசிக் காலங்களைக் கசப்புடன் புரிந்தான். அது அப்படித்தான் ஆகும் என்று யோசித்தான். அடிக்கடி சுபாவை யோசித்தான். அரசியல் வேலைகள் அதிகம் குறுக்கிட்டது. நூறு மைல்களுக்கும் அப்பால் அவன் அரசியல் வேலை செய்ய அனுப்பப்பட்டான்.

சுபாவைச் சந்திக்க ஒரு வழிதானும் தெரியவில்லை. சுபாவின் கம்பஸ் விலாசத்திற்கு ஒரு கடிதம் அனுப்பியிருந்தான். ''எப்படி இருக்கிறாய், என் குட்டி..'' என்று எழுதினான். ஆறு மாதங்களுக்கு மேலான பிரிவை, அது தரும் துயரை வரிவரியாக அனுபவித்து எழுதினான். பாதுகாப்புக் கருதித் தன் முகவரியைக் குறிக்கவில்லை.

சுபாவுக்கு கம்பஸ் முடிந்து விட்டது. இனி வேலை கிடைக்கலாம். 'தனக்கு திருமணம் பேசப்படுகிறது' என்பதை யாரிடமோ சொல்லிவிட்டாள் அவள் அன்னத்தையும், புறாவையும், மேகத்தையும் தூதாக நம்பவில்லை. நம்பியிருந்தால் சிலவேளை அவனுக்குச் அச்செய்தி வேளைக்குப் போய்ச்சேர்ந்திருக்கலாம். தூதன் இவனைச் சந்திக்கவே ஐந்தாறு மாதங்களுக்கும் மேலாகி விட்டது.

இன்னும் மெலிந்து போனான். இன்னும் கறுத்துப் போனான். அதிகம் அரசியல் வேலைக்குள்ளும் சுபா நெஞ்சின் ஓரத்திலிருந்து கண் சிமிட்டினாள்

செய்தி கிடைத்தபோது ஓடி வரத்தான் யோசித்தான்.
மாற்று இயக்க நபர்கள் இவனின் இயக்கத் தோழர்களைத் துரத்தித் துரத்திச் சுட்டார்கள்.இவன் தோழர்கள் வீதிகளில் குப்புறக் கிடந்தார்கள். அறிமுகமான பிரதேசங்களில் மக்களின் ஆதரவுடன் இவனும் ஒளித்தான். அந்த அனுபவம் வேறு.

நாலைந்து மாதங்களுக்குப் பிறகு இவன் பிடிபட்டான். மூன்று மாதங்களுக்கு மேலாக அடைத்து வைத்தார்கள். ''இனி அரசியலில ஈடுபடுவியோ?'' என்று கேட்டார்கள். பேசாதிருந்தான். ''ஈடுபட்டால் கண்ட இடத்திலை சூடு '' என்றார்கள். திறந்து விட்டார்கள்.

வீடு வந்தான்.வறுமைப்பட்டுபோன தன் குடும்பத்தைப் பார்த்தான். யாவரும் குறிப்பிடும்படியாக மெலிந்திருந்தார்கள். ஏதேனும் உழைக்க வேணும் என்று யோசித்தான்.

''சுபா ரீச்சராக இருக்கிறாள். கலியாணமும் முடிச்சிட்டாள். ஆரோ மைச்சான் பெடியனாம்...'' தற்செயலாகச் சந்தித்த மோகன் சொன்னான். இவன்''அப்படியா''? என்று தன் நெற்றி வியர்வை துடைத்துக் கேட்டு வைத்தான்.

தான் வைத்திருந்த கதவை இனிமேல் என்றென்றைக்குமாகப் பூட்டிக் கொண்டான்.

இரவு சாமத்தில் முழித்தான். லைபிறரியில் மலர்ச்சியுடன் சின்னத் துண்டு தந்த சுபாவை யோசித்துப் பார்த்தான். கிணற்றுக் கட்டில் வந்திருந்தான்.சந்திரன் மெலிந்து போய் சிறிது வெளிச்சத்தை மங்கலாகக் கொடுத்தது.

இவன் ஓசைப்படாது வெம்பினான சுபாவும், அரசியலும் தன்னை விட்டுப் போனதையிட்டு துயர்ப்பட்டான்.

நன்றி - நூலகத்திட்டம்



# பாடசாலை அனுமதியில் இனம், மதம், அந்தஸ்த்தின் குறுக்கீடு:

## சில கேள்விகள்

கொழும்பிலுள்ள இடம்பெயர்ந்த பெண்பிள்ளைகளுக்குக் கல்வியளிக்கும் திட்டமொன்றிற்கு நான் பொறுப்பாக இருந்தேன். எமது காரியாலயத்திலேயே இதனை ஆரம்பித்தோம். பிள்ளைகளுடைய எண்ணிக்கை அதிகரிக்க, அதிகரிக்க எமது சிறிய காரியாலயத்தில் இடப்பற்றாக்குறை ஏற்பட்டது. எமக்கிருந்த ஒரே மாற்றுவழி எமக்கு அயலிலுள்ள கல்லூரி ஒன்றின் உதவியை நாடுவதாகும்.

பல்கலைக்கழகத்தில் எனது சமகாலப்பகுதியில் கல்விகற்ற எனக்குத் தெரிந்த அந்தப் பாடசாலை அதிபரை அணுகினேன். அப்பாடசாலையின் அதிபர் வெளிநாடு சென்று விட்டதால் இவரே பதில் அதிபராக இருந்தார். அவரைச் சந்தித்து எமது திட்டம், நடவடிக்கைகள் பற்றியும், இறுதியாக சமூகத்தின் பின்னிய செயல் விளைவில் பிள்ளைகளின் முன்னேற்றம் பற்றியும் விளக்கப்படுத்தினேன். அர்த்தமற்ற வன்முறைக்குப் பலியாகும் வசதியற்ற பிள்ளைகள் பற்றி விரிவாகப் பேசினேன். பேச்சின் இறுதியில் எனது கேள்வியைக் கேட்டேன்.

அவரது பதில் கடுமையானதாகவும் அனுதாபமற்றதாகவும் காணப்பட்டது. அவரது சொற்கள் மிகவும் கடினமானவையாக இருந்தன. அவரது மறுப்பு இறுக்கமானதாக இருந்தது.

பாடசாலை நடைபெறாத வேளைகளில் இடம்பெயர்ந்த தமிழ்ப் பிள்ளைகளுக்குக் கற்பிக்க ஒரு வகுப்பறையைத் தரமுடியுமா? என்ற எனது கேள்வியே அந்த அதிபரின் இந்த இறுகிய பதிலுக்குக் காரணமாயிற்று.

அவர் கடுமையான சொற்களில் ''எம்மிடம் வகுப்பறைகள் ஏதும் கிடையாது. நாம் கல்வியமைச்சிடம் இருந்து அனுமதி பெற வேண்டும்'' எனக் கூறவாரம்பித்தார். நான் உடனடியாகக் குறுக்கீடு செய்து ''அது இலேசானது; என்னால் அதைச் செய்ய முடியும்'' என்றேன்.

அதற்கு அவர் ''உங்களுக்குத் தெரியுமா? அகதி முகாம்களிலிருந்து அப்பிள்ளைகளை எனது (அழுத்தம் அவரதும் எனதும்) பாடசாலைக்குக் கூட்டி வந்தால் அவர்கள் கண்நோய் போன்ற எல்லாத் தொற்று நோய்களையும் பரப்புவார்கள். அது எனது பாடசாலையில் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும்'' என்றார். நான் அதிர்ச்சியடைந்தேன். அவரது அனுதாபமற்ற கடுமையான சொற்கள் என்னைப் பேச்சிழக்க வைத்தன. கோபம், வெறுப்பு,உதவியேதுமற்ற சமாளிக்க முடியாதளவு உணர்வுகளுடன் நான் பாடசாலையை விட்டகன்றேன்.

அந்த அதிபர் ஒரு தமிழ் இந்து. பெண். பாடசாலை ஒரு தமிழ் இந்து நிறுவனமாகும்.

இது இன்னொரு பிரச்சினை:

இரட்டிப்பான சுமைகளைத் தாங்க முடியாததால், நான், என்னுடன் வீட்டுப் பொறுப்புக்களைப் பங்கெடுக்கக் கூடிய வயதான பெண் ஒருவரைத் தேடியபடி இருந்தேன். பதினொரு வயதுப் பெண் பிள்ளையொருவர்தான் கிடைக்கப்பெற்றார்! விசாரித்ததில் வறுமை காரணமாக அவரது பெற்றோர்கள் அப்பிள்ளையைப் பாடசாலையிலிருந்து நிறுத்தி வேலை செய்வதற்காக வேலைக்காரியாக அனுப்பியுள்ளார்கள் எனத் தெரிய வந்தது. அவளைத் திரும்பவும் படிப்பைத் தொடர அவளது பெற்றோரிடம் அனுப்பும் முயற்சிகள்; பயனற்றதாயின. பெற்றோருக்கு வீட்டிலுள்ளவர்களுக்கு உணவும், உடையும் கொடுப்போரின் எண்ணிக்கையைக் குறைப்பதே நோக்கமாகத் தெரிந்தது. இருந்த போதும் நான் அவளை எனது வீட்டில் வைத்திருக்கவும், பாடசாலைக்கு அனுப்பவும் தீர்மானித்தேன். திரும்பவும் அதிபரைச் சந்திக்க வேண்டியிருந்தது. தனது பெற்றோர், சகோதர,சகோதரிகளின் தேவைக்காக உழைப்பதற்காகத் தனது பாடசாலைப் படிப்பை நிறுத்திய ஆனால் படிக்க விரும்பிய அப்பிள்ளைக்குக் கல்வி வாய்ப்பை வழங்குவது சட்டப்படியான தேவை என நான் நினைத்தேன்.

இலவச கல்விக் கொள்கை பற்றியும், எழுத, வாசிக்கத் தெரிந்தவர்களின் உயர்வீதம் பற்றியும், பதினான்கு வயது வரையான பிள்ளைகளுக்குக் கட்டாயக் கல்வி வழங்கப்படவேண்டுமென்ற உரிமைக் கட்டளை கொண்டுள்ளதாகத் தற்பெருமை பேசிக்கொள்ளும் நமது நாட்டில், எனது கோரிக்கை சட்டப்படியான கோரிக்கை ஒன்று என நான் கருதினேன்.

தொடக்கத்திலேயே, விண்ணப்பத்தாரர் யாரெனவும், என்ன சூழ்நிலைக்குக் கீழ் நான் அவளுக்குப் பாடசாலை அனுமதி கோரி வந்துள்ளேன் என்பது பற்றி நான் அந்த அதிபரிடம் விபரித்தேன். அவரிற்கு அனுமதி வழங்குவதற்கு ஒன்றைவிடக் கூடிய காரணங்கள் இருந்தன. ''பாடசாலையில் போதியளவு ஆசிரியர்கள் இல்லை. வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகை அளவுக்கதிகமானது. எம்மிடம் போதிய வகுப்பறை இட வசதிகள் இல்லை'' எனப் பதிலளித்தார் அவர்.

அப்படியாயினும், முடிவில் முயற்சிப்பதாக கூறினார். நான் விண்ணப்பப் படிவத்தையும், அது தொடர்பான ஆவணங்களான பாடசாலை விடுகைச் சான்றிதழ், பிறப்புச் சாட்சிப் பத்திரம் போன்றவற்றை அனுப்பிய போது அவை, அவள் அவ் வகுப்பிற்கு வயதில் கூடியவள் என்று கூறப்பட்டு உடனடியாகவே திருப்பியனுப்பப்பட்டன. அவள் ஒரு வருடப் பாடசாலைக் கல்வியைத் தவற விட்டதாக நான் எடுத்துக் கூறிய பின்பே இது நடந்தது.

நான் வருத்தமும்,கோபமும், விரக்தியுமடைந்தேன். ஆனாலும் உதவியேதுமற்றதாக உணரவில்லை. நான் கொழும்பு 6இலிருந்து கொழும்பு 3வரையான பல பாடசாலைகளுக்கும் இந்தப் பிள்ளைக்கான அனுமதி கோரிச் சென்றேன். அவளது உரிமை அதுவெனவும், அதனால் நான் அதற்காகப் பேச வேண்டுமெனவும் நினைத்தேன். நான் அவ்வாறு செய்கையில் என்னுள் பின்வரும் கேள்வியைக் கேட்டுக் கொண்டேன்.

நான் அதிபரிடம் எனது மகளுக்கோ அல்லது உறவினருக்கோ அனுமதி வேண்டுமெனக் கேட்டேனா? அப்படிக் கேட்டிருந்தேனானால் எவ்வாறெனினும் இடம் கிடைத்திருக்கலாம்.

இதே மாதிரியான நிலைமையில் மடமொன்றில் மீண்டும் எனக்கு மோத வேண்டியிருந்தது. ஆனால் இம்முறை எதிர்ப்பட்ட பாதிப்பு வேறாக இருந்தது. வணக்கத்துக்குரிய அருட் சகோதரி மிகவும் அனுதாபத்தோடு முயன்று அவளை அனுமதிக்க வேண்டிய தரத்தில் இடம் கண்டு பிடித்தார். எனினும் வகுப்பு ஏற்கனவே நிறைந்து இருந்தது. அத்துடன் அவர், அப் பெண் பிள்ளை ஒரு கத்தோலிக்கரோ அல்லது கிறிஸ்தவரோ அல்ல இந்து எனத் தெரிந்தவுடன் உடனடியாகவும் சினத்துடனும், கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களை அவர்கள் பாடசாலையில் அனுமதிப்பதில்லையென்ற கசப்பான உண்மையை வெளியிட்டார்.

''இந்துப் பிள்ளைகளுக்கு எனப் பல பாடசாலைகள் உள்ளன. ஆனால் ஒரு சில கிறிஸ்தவ, கத்தோலிக்கப் பாடசாலைகளே உள்ளன. எனவே நீங்கள் இந்துப் பிள்ளையொன்றிற்கு இந்துப் பாடசாலையிலேயே அனுமதி பெற வேண்டும்''

கிறிஸ்தவ அல்லது கத்தோலிக்கப் பிள்ளைகளை இந்துப் பாடசாலைகளில் நிராகரிப்பதாக என்னால் நிச்சயப்படுத்த முடியாதுள்ளது. பிள்ளையின் வறுமை குறித்தும் கல்வி குறித்தும் அனுதாபப்பட்டார் இந்த அருட் சகோதரி. ஆனால் அவருடைய அந்தப் பரிவையும், அனுதாபத்தையும் பெற அந்தப் பிள்ளை ஒரு கத்தோலிக்கப் பிள்ளையாக இருக்க வேண்டும். நான் ஒரு கத்தோலிக்கச் சிறுமிக்கே அனுமதி கோரியதாக அவர் முதலில் நினைத்தார் போலும்.

நான் பாடசாலை விட்டு குழம்பிய நிலையில் வெளியேறிய சமயம் இன்னும் சில மேலதிகக் கேள்விகள் என்னுள் எழுந்தன.

இலங்கையில் ஒரு கல்வி நிலையத்தின் தலைவர் சமயம், இனம், வகுப்பு அல்லது சாதியை அடிப்படையாகக் கொண்டு அனுமதி மறுக்கலாமா? கல்வி அமைச்சின் சட்ட இயலிற்குக் கீழ் கன்னியர் மடங்கள் கட்டுப்படவில்லையா? தனியார் பாடசாலைகள் தொடர்பான அரசாங்கத்தின் கொள்கை என்ன?

இறுதிக் கேள்வியானது அப் பிள்ளையை, அவரது (அருட் சகோதரி) உண்மையான சமயத்திற்கு மதம் மாற்ற நான் உடன்பட்டிருந்தால் அருட் சகோதரி அனுமதி கொடுத்திருப்பாரா?

**செல்வி திருச்சந்திரன்**

**தமிழில் - சி.வினோத்**

**நன்றி:பிரவாத, ஏப்ரல் 93**

---

*சுதந்திர இலக்கிய விழாக் குழுவினர் நடாத்திய இளம் எழுத்தாளர்களுக்கான போட்டியில் முதற்பரிசு பெற்ற கவிதை.*

### வயிறு கிழிந்த வேப்பை மரம்

*மண்ணின் உள்ளங் கையில் இருந்த*
*என்னைப் பறித்துக் கீழே போட்டவனே!*
*பச்சை இலையிலிருந்து இரத்தம் ஒழுகுது*
*நான்*
*கந்துகளால் அழுகின்றேன்*

*உனது வியர்வையை நிழலால் துடைத்தவன்*
*ஊரானைப் பற்றி நீ*
*துப்பிய புறங்களை வேர்களில் ஒளித்தேன்*
*வாயில் சாராய நாற்றத்தை*
*பெண்டாட்டியின் மூக்குக்கு காட்டிக் கொடுக்கவில்லை*
*உன் கழிசறைத் தனத்தை*
*சாட்சி சொல்லாமல் தடுத்து வைத்த*
*குறை பீடித் துண்டுகள்*
*என் காலடியில் இன்னும்*

*கோடரியால் முழங்காலைக் கொத்திவிட்டாய்*
*எனது இடுப்பை வாளின் பற்கள் கடித்து விட்டன*
*வயிறு கிழிந்து கிடக்கிறேன்*
*சவம் போல*

*எனது குப்பைத் தலையில்*
*குருவிகளின் காதல் கல்யாணம் இனியில்லை*
*அமிலக் காற்றை பொத்திப் பிடிக்கிற*
*கைகளை முறித்து விட்டாய் நீ*

*என்னைக் கிழித்து ஜன்னல் ஆக்கு*
*கட்டில் நிலை கதவு என்றும்*
*குந்தியிருக்கும் எனது ஆவி*

*நிலைக்கு உள்ளால் வா நடந்து*
*முட்டி உன் தலையை உடைக்கின்றேன்*
*கதவைச் சாத்து! வந்து அதில்*
*பாக்கை வெட்டுவது போல் விரல்களை நறுக்குகிறேன்*

*வேர்களில் இன்னும் எனது சுவாசம்*
*காபன் வாயுவை குடல்களுக்குள் செலுத்துவேன்*
*சூரியனைப் பூமிக்கு இழுத்து வந்து*
*உன்னைக் கொளுத்திச் சிரிப்பேன்*

*1993/02/27*

*எம்.எல்.எம் அன்ஸார்*




சுதந்திர இலக்கிய விழா

*சுதந்திர இலக்கிய விழாக் குழுவினர் நடாத்திய இளம் எழுத்தாளர்களுக்கான போட்டியில் மூன்றாவது பரிசு பெற்ற கவிதை:*

### முனைவு

*கடல் அலைகளுக்குள்*
*ஓரே சண்டை*
*ஒன்றை ஒன்று*
*வெல்லுவதற்கான முனைவு*

*நானும் எனது நண்பர்களும் கடற்கரை ஓரத்தில்*
*கதை பரிமாற புரண்டு புரண்டு கிடக்கிறோம்*

*கிராமத்தை விட்டு*
*நேற்று கடலுக்குப் போனவன்*
*இன்று வருகிறான்*

*எங்கள் முன்னைய நிகழ்வுகளையும் அண்மைக்கால*
*இரவுகளில் தோன்றிமறைந்த கனவுகளையும்*
*சுமந்து வந்திருக்கிறோம்*

*அவன் வீசிப் பிடித்த வலையில்*
*மூன்று சூரைகள்*
*மரண மூச்சு விடுகின்றன*

*நாங்கள் எங்கள் பழைய காதலிகளைக் கழுவிக்*
*கொண்டிருக்கிறோம். நண்பர்களிலொருவன்*
*சொன்னான்: ''அவளுக்குப் புரையேறும்'' என்று.*

*அவன் கரையேறி விட்டான்*
*துடுப்பும் வலையும்*
*தோணியிலே காய்கின்றன*

*எங்களிலொருவனின் திருமணத்துக்கானவள்*
*நிச்சயிக்கப்பட்டு விட்டாள். இனி; அவன் பொழுது*
*கழிய நாங்கள் இல்லாவிட்டால் பரவாயில்லை*

*அவன் தோளில் துண்டு*
*அதன் மேல் ஒரு சோடிச் சூரை*
*வலது கையில் தனித்த சூரை*
*சிறிய புன்முறுவலோடு*
*வீடு செல்கிறான்*

*கவலை மறந்து கிடந்த எங்களை பரவலாக*
*விழுந்த மழைத்துளி வீட்டுக்கனுப்புகிறது.*

*எஸ்.எச்.எஸ். கதீர்*

நன்றி - நூலகத்திட்டம்



# ''எம்முடைய செல்வாக்கைகுறைக்கும் நடவடிக்கை''

## 'துரைக்குட்டி எமது உறுப்பினரே அல்ல'

### -கருணாகரம் எம்.பி விளக்கம்

தங்களது 31வது இதழிலே (1-15 ஒக்டோபர்,1993) மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டாளத்தின் ஆட்சி என்ற தலையங்கத்தைத் தாங்கி வந்த கட்டுரையைப் பற்றி சில வார்த்தைகள் எழுத வேண்டிய நிலையிலும் ''ரெலோ''ஐச் சாடி வந்தவைகளை மறுக்க வேண்டிய நிலையிலும் இருந்து இத் திருத்தத்தை எழுதுகின்றேன்.

கட்டுரையின் தொடக்கம் நன்றாக அமைந்து இருக்கின்றது. ராணி முத்து புத்தகத்தில் வரும் கதையின் தொடக்கம் போல் அமைந்து இருக்கிறது.

மட்டக்களப்பு நகருக்குள் நுழையும் போது சோதனைச் சாவடிகள் இருக்கின்றதுதான். இதை யாரும் மறுக்க முடியாது. போர் நடக்கும் காலங்களில் எங்கு தான் சோதனைச் சாவடிகளைக் காண முடியாது. கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களில் சிலரும், கத்தோலிக்க குருமார்களில் சிலரும் நகரத்தினுள் புலிகளை வைத்திருக்கும் போது சோதனைச் சாவடிகள் கூடுமே தவிர குறையப் போவது இல்லை. அத்துடன் சுற்றிவளைப்புகளும் அடிக்கடி நடக்கத்தான் செய்யும். இவைகளைக் குறைக்க வேண்டும் என்றால் பயங்கரவாதப் புலிகளுக்கு ஒத்துழைப்பு நல்குபவர்கள் அதனை நிறுத்த வேண்டும்.

காட்டுக் கந்தோர் எனக் குறிப்பிட்டு மிகவும் மோசமாக எழுதியிருந்தீர்கள் ஒரு மாதத்தில் அண்ணளவாக இருபது(20) நாட்கள் மட்டக்களப்பு மக்களுடன் நிற்கும் எனக்கு இப்படியான முறைப்பாடுகள் எதுவுமே வருவதில்லை.

பயங்கரவாதத்தினால் உழைப்பாளியை இழந்த பாதிக்கப்பட்ட குடும்பங்களில் ஒரு அங்கத்தவருக்கு ஆசிரிய நியமனம் வழங்கும் திட்டம் ஒன்று அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டது (யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு கணவனை இழந்தவர்கட்கு மட்டுமல்ல) இதை பரிந்துரை செய்யும் பொறுப்பு காட்டு இலாகாவிற்கு கொடுக்கப்படவில்லை. பாதிக்கப்பட்டவர்களின் பகுதி பொலிஸ் நிலையங்களுக்கே கொடுபட்டது.

இதில் சில பொலிஸ் நிலையங்களில் புலியினால் பாதிக்கப்பட்ட சில விண்ணப்பதாரிகளுக்கு சிபாரிசு கிடைக்கவில்லை என்பது உண்மைதான். அவர்கள் அனைவரையும் நான் உடனடியாகத் தந்தியடித்து வரவழைத்து இங்கு இருந்த சிரேஸ்ட பொலிஸ் அதிபரான திரு. நிகால் கருணாரட்ணவுடன் கதைத்து 31 பேர்களுக்கு சிபாரிசு எடுத்துக் கொடுத்துள்ளேன்.

பெண்கள் மீதான பாலியல் வன்முறைகளுடனும், இளைஞர்கள் மீதான அடாவடித்தனங்களுடனும் சேர்த்து பரவலாக இருவரின் பெயர்கள் அடிபடுவதாகவும் அதில் ஒருவர் ''ரெலோ'' உறுப்பினர் எனவும் அவரின் பெயர் துரைக்குட்டி எனவும் குறிப்பிட்டு இருந்தீர்கள்.

எமது இயக்கத்தில் துரைக்குட்டி என்பவர் எக்காலத்திலும் இருந்தவரும் இல்லை. தற்போது இருப்பவரும் இல்லை. துரைக்குட்டி என்பவருக்கும் எமக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை என்பது அப்பகுதி மக்களுக்கே நன்கு தெரியும்.

> சரிநிகர் 31இல் வெளிவந்த மத்திய பக்கக் கட்டுரை தொடர்பான மறுப்பு ஒன்றை ரெலோ எம்.பி கருணாகரம் அவர்கள் அறிவித்துள்ளார். அவரது மறுப்புக் கடிதத்தில் இக் கட்டுரை தமது கட்சியின் செல்வாக்கைக் குறைக்கும் நோக்கிலானது என்றும், துரைக்குட்டி என்பவர் தமது உறுப்பினரே அல்ல என்றும் அவர் மறுத்துள்ளார்.
>
> அவரது மறுப்பு கீழே அப்படியே பிரசுரமாகிறது.

மற்றும், முன்னால் விடுதலை இயக்கங்கள் என்ற சிறுதலைப்பில் முற்றும் உண்மைக்குப் புறம்பான விடயங்களை எழுதியிருந்தீர்கள்.

ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், ஈரோஸ் ஆகிய அமைப்புகள் நகரத்தினுள் அலுவலகங்களை திறந்து வைத்துக் கொண்டு தூங்கி வழிகின்றன என எழுதியிருந்தீர்கள். தாங்கள் ஈ.பி.டி.பி இன் பெயரை மறந்து விட்டீர்களோ அல்லது விட்டு விட்டீர்களோ தெரியாது.

ரெலோ மட்டக்களப்பு மாவட்டத்தில் ஸ்திரமாகவும் அதிக செல்வாக்குடனும் இருக்கின்றது. ரெலோ இராணுவத்தினருடன் சேர்ந்து புலி ஒழிப்பில் ஈடுபடுகின்றது என்பதை விட, புலிகளிடம் இருந்தும், இராணுவத்தினரிடம் இருந்தும் அப்பாவி மக்களை காப்பாற்றுகின்றது என்பது தான் உண்மை. தாங்கள் ஒரு தினம் எமது அலுவலகத்தில் வந்து இருந்து அவதானித்தால் எமது உண்மை நிலை விளங்கும். ஜூலை மாதம் 1990ம் ஆண்டின் பின் 34 இளைஞர்களைப் பறிகொடுத்து நாங்கள் எவ்வளவு தியாகம் செய்திருக்கின்றோம் என்பதும் விளங்கும். நாங்கள் எந்தவொரு இராணுவ ''சென்றி பொயின்ட்'' இலும் இருப்பதில்லை. சுயமாகவே எமது அலுவலகங்கள் வாழைச்சேனை, செங்கலடி, மட்டக்களப்பு நகரம் (இரு அலுவலகங்கள்) ஆரையம்பதி போன்ற இடங்களிலேயே இயங்குகின்றன.

(உதாரணமாக - வாழைச்சேனை அலுவலகத்தினுள் புலிகள் வந்து சுட்டதில் எமது பிரதேச பொறுப்பாளரையும் இன்னுமொருவரையும் இழந்தோம்) வேறு எந்த முகாமிலும் எமது உறுப்பினர்கள் இல்லை. அப்படி இருப்பவர்கள் எமது இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் இல்லை. அவர்கள் மாற்று இயக்கங்களைச் சேர்ந்தவர்களும், தனிப்பட்ட நபர்களுமே என்பதை அறியப்படுத்துகின்றேன். நாங்கள் கப்பம் வாங்குவதாக எழுதியிருந்தீர்கள். நீங்கள் அப்படி யாரையாவது எங்கள் முன் கொண்டு வந்து நிறுத்தினால் உங்களிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்கத் தயாராக இருக்கின்றேன். மாறாக கோவில்களுக்கும், தனிப்பட்ட கஷ்டப்பட்ட மக்களுக்கும் எம்மால் இயலுமான உதவிகளைச் செய்து கொண்டு இருக்கிறோம்

''ரெலோ'' உறுப்பினர் ஒருவர் கொம்மாந்துறை இராணுவ முகாமில் இருந்து 200 யாருக்கப்பால் சுடப்பட்டார் எனவும், அதற்குத் தகவல் கொடுத்தவர் அடித்துக் கொல்லப்பட்டார் எனவும் எழுதியிருந்தீர்கள். 1990ம் ஆண்டு ஜூலை மாதத்திற்குப் பின்பு எந்தவொரு ''ரெலோ'' உறுப்பினரும் அப்படி கொல்லப்படவில்லை என்பதை மிகவும் ஆணித்தரமாக அறியத் தருகின்றேன்.

ஒட்டு மொத்தமாக மட்டக்களப்பில் எமக்கு இருக்கும் செல்வாக்கைக் குறைப்பதற்காகவே இவைகள் எழுதப்பட்டிருக்கின்றது என்பதையும், அனைத்தையும் மட்டக்களப்பு மக்கள் அறிவார்கள் என்பதையும் தங்களுக்கும் இத்தால் சரிநிகர் வாசகர்களுக்கும் அறியத் தருகின்றேன்.

(சிபார்சு செய்த 31 பேரது பெயர்ப் பட்டியலையும் இத்துடன் அவர் இணைத்து அனுப்பியுள்ளார்)



## முறிந்த பனை!

செப்ரம்பர் 21: ராஜனி திரணகம கொல்லப்பட்டு இன்றோடு நான்கு வருடங்கள். அப்போது நான் யாழ்ப்பாணத்தில் இருந்தேன்.

இந்திய அமைதிப்படை 'அமைதிப் பணி' செய்து கொண்டிருந்தது.
ஈ.பி.ஆர்.எல்.எப்பினரும், ஈ.என்.டி.எல்.எப்பினரும் மாகாண அரசேறி 'செங்கோல்' ஏந்திக் கொண்டிருந்தனர்.
ஈ.பி.ஆர்.எல்.எப்பினர் ஆரம்ப காலங்களில் பேசிய செங்கோல் ஆட்சியாக அது இருக்கவில்லை.

இந்திய ஆக்கிரமிப்பு ஒப்பந்தத்தையும், அதனுடான அரைகுறைத் தீர்வையும் நிராகரித்தவர்களை வேட்டு வைக்கிற செங்கோல் அவர்கள் கைகளில்.

பாலகர்களை யுத்தத்திற்குப் பலி கொடுக்கிறார்கள் புலிகள் என்று இப்போது ஓலம் வைக்கிற இவர்கள் அப்போது தெருத்தெருவாக நாய் பிடிக்கிற மாதிரி பிடித்துக் கொண்டிருந்தார்கள் பாலகர்களை. தொண்டர் படைக்காக.

தெருவில் இறங்கினால் தொண்டர் படைக்காகக் கொண்டு போகப்படுவாய் என்பது நியதியாகி இருந்தது.

இந்தியப் படை இதன் சூத்திரதாரி.

பல்கலைக் கழக மாணவர், பாடசாலை மாணவர் என்கிற வேறுபாடின்றி எல்லோரும் கைது செய்யப்பட்டனர்.

பல்கலைக் கழக மாணவர் படையினரால் கைது செய்யப்படுவதை வன்மையாகக் கண்டித்தார் ராஜனி. யாழ்ப்பாணத்திற்குள் இனி ஆமி வராது என்கிற நம்பிக்கையில் அன்று 'வீர சுதந்திரம்' பற்றி முழங்கிய பலர் அப்போது நமக்கேன் வம்பு என்று அமைதிப் படையுடன் சேர்ந்து அமைதி காத்தது ஞாபகத்தில் இருக்கிறது.

கந்தர்மடத்தில் இந்தியப் படை சுட்டதில் மாணவர் கொல்லப்பட்ட செய்தியை இனந்தெரியாதோரால் கொல்லப்பட்டார் என்று பிரசுரிக்கிற துணிவு கூட அற்ற பத்திரிகைகளும், பத்திரிகையாளர்களும் இருந்த நேரத்தில் தான் ராஜனி இந்தியப் படையின் நடவடிக்கைகளை வெளிப்படையாகக் கண்டித்தார்.

சமூகத்தின் அழிவு குறித்தும் அவற்றை நிறுத்த ஆவன செய்ய வேண்டும் என்பதிலும் அக்கறையாயிருந்தார்.

அவருடைய அபிப்பிராயங்கள் எல்லாம் சரியானவை என்பதோ, அவற்றை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதோ அல்ல இங்குள்ள பிரச்சினை. அவருக்கென்று சில அபிப்பிராயங்கள் இருந்தன. அதற்காக அவர் நேர்மையாக உழைத்தார்.

தங்களுடைய இருப்பைத் தக்க வைத்துக் கொண்டு விடுதலை பற்றிப் பேசுபவராக அவர் இருக்கவில்லை. அவர் எழுதிய 'முறிந்த பனை' புலிகள் மீதும் கேள்விகளை எழுப்பிற்று.
புலிகளுக்குத் தெரிந்ததெல்லாம் மாறான அபிப்பிராயங்களைக் குண்டுகள் மூலம் நேராக்கி விடலாம் என்பது மட்டுமே.


ஐந்து குண்டுகள்.

முறிந்தது பனை!

இ.சந்திரன்.

# யாழ்ப்பாணச் சமூகத்தை விளங்கிக் கொள்ளல் - ஒரு விமர்சனக் குறிப்பு

## அதன் உருவாக்கம்,இயல்பு, அசைவியக்கம் பற்றிய ஒரு பிராரம்ப உசாவல்.




இச் சிறு பிரசுரத்தை அதன் அளவினதும் தலைப்பினதும் அடிப்படையில் ஒரு முழுமையான ஆக்கத்தை விமர்சிப்பது போல விமர்சிக்க முடியாது. இது 2.6.92 இல் நடந்த பேராசிரியர் சோ.செல்வநாயகம் நினைவுப் பேருரையின் நூல்வடிவம் மட்டுமே என்பதனால் இதில் ஒரு நூலுக்குரிய முழுமையை எதிர்பார்க்க இடமில்லை. எனினும் இப்பிரசுரம் யாழ்ப்பாண சமுதாயத்தை அறிவதற்குத் ''தேசவழமைச் சட்டம்'' ஒரு முக்கிய அடிப்படை எனக்கொண்டு அதை ஒரு ஆவணமாகவும் வரலாற்றுச் சான்றாகவும் பயன்படுத்த முனைவது ஒரு பயனுள்ள செயல். யாழ்ப்பாணச் சமுதாயத்தின் இயல்புகளை அடையாளங் காணும் முனைப்பிற் சாதிய அடிப்படையிலான சமுதாய அமைப்பு சிறிது விவரிக்கப்படுகிறது. யாழ்ப்பாண சமுதாய அமைப்பின் பண்பாடும் கருத்து நிலையும் பற்றிய பகுதியும் யாழ்ப்பாணச் சமுதாயத்தின் சமகால அசைவியக்கங்கள் பற்றிய பகுதியும் ஆழத்திலும் பரப்பிலும் போதாதனவாயுள்ளன. சாதிய எதிர்ப்பியக்கம் பற்றிய தொழில்முறை ஆய்வு மேற்க் கொள்ளப்படாமை பற்றிய அவரது குறிப்பு கவனத்திற்குரியது.

இப்பிரசுரத்தில், சிவத்தம்பியின் எழுத்து, வழமையிலும் சற்றுத் தெளிவாக இருக்குமாற்போற் தெரிவதற்கு இப்பிரசுரம் ஒரு உரையின் நூல் வடிவம் என்பது காரணமாயிருக்கலாம். ஆயினும் அவரது சொற்தெரிவுகளும் பிரயோகமும் ஆங்கில மொழி ஆதிக்கத்திற்க்குட்பட்ட ஒரு எழுத்து நடையையே நினைவூட்டுகின்றன். இதைவிட முக்கியமாக ஈழத்தின் தமிழ் மக்களின் முக்கிய சமூக அமைவுகளாக யாழ்ப்பாண, மட்டக்களப்புச் சமூகங்களிரண்டையுமே கொள்கிறார். வன்னிப்பகுதி குறிப்பிடப்படவில்லை என்பதோடு மலையகத் தமிழர் பற்றியும் தன் தலைப்பை விளக்கும் போக்கிலேனும், எதுவுமே கூறப்படவில்லை.

யாழ்ப்பாணச் சமுதாயத்தின் பெண்ணடிமைத்தனமும் அவரது கவனத்தை ஈர்க்கத் தவறி விட்டது. யாழ்ப்பாணப் பொருளாதாரம் கொலனித்துவத்தின் கீழ், முக்கியமாக பிரித்தானியர் ஆட்சியின் கீழ், அடைந்த மாற்றங்களும் அக்காலத்துப் புலப்பெயர்வுகள் அச்சமுதாயத்தில் ஏற்படுத்திய பொருளாதாரத் தாக்கங்களும் அவற்றின் சமுதாய வெளிப்பாடுகளும் ஏனோ குறிப்பிடப்படவில்லை. இவை யாழ்ப்பாணச் சமுதாயத்தின் இயல்பையும் அசைவியக்கத்தையும் நிர்ணயிப்பதில் ஆற்றிய பங்கை ஆசிரியர் மறந்து விட்டாரோ தெரியவில்லை. பிராரம்ப உசாவுதலேயாயினும் உரையின் போது தவற விட்டவைபற்றி நூல்வடிவின் முன்னுரையிலேனும் குறிப்பிட்டிருக்க முடியும் என்பது என் மதிப்பீடு. இப்பிரசுரம் சாதியத்தைப் பற்றியே முக்கிய கவனமுடையதெனின் அதையேனுந் தெளிவாக்கியிருக்கலாம். அந்தளவில், நூற் தலைப்புடன் ஒப்பிடுகையில் நூலின் உள்ளடக்கத்தின் போதா்மை மிக அதிகமாகவே தெரிகிறது.

சி.சிவசேகரம்.

நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சரிநிகர்



# எங்கள் பிள்ளைகளை எங்களிடம் திருப்பித் தாருங்கள்!

## காணாமல் போன இளைஞர்களின் பெற்றோர் சத்தியாக்கிரகம்

பட்டது. இந்தக் கமிஷனுக்கு 1991 ஜனவரியின் பின் காணாமல் போனவர்கள் பற்றிய விபரங்களை மட்டுமே சேகரிக்கும் படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் 88,89,90ம் ஆண்டுகளில் ஏற்பட்ட பெரிய இழப்புகளை மூடிமறைக்க முயல்கின்றார்கள். இதற்காக கண்ணீர் வடித்தது போதும். பாதயாத்திரை சென்றதும் போதும் பன்சலைகளிலும் தேவாலயங்களிலும், கோவில்களிலும் வணங்கியதும் போதும். அரசியல் தலைவர்களிடம் முறையிட்டதும் போதும்''.

''இனி வீதிகளில் இறங்கி எமது பிள்ளைகளுக்காக போராடுவோம் '' என்று கூறினார்.

எமது பிரச்சினைகளை காது கொடுத்துக் கூடக் கேட்கவில்லை. ''அரசாங்கத்தின் கணிப்பின் படி 20,000பேர் மட்டுமே காணாமல் போனதாக அது கூறுகின்றது. ஆனால் உண்மை இதற்கு மாறாக உள்ளது. சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கையின் படி 60,000க்கு அதிகமானோர் காணா



**மோகன பாரதி**

- எங்கள் பிள்ளைகளை, எங்களிடம் திருப்பித் தா!
- தடுத்து வைக்கப்பட்டுள்ள சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்!
- காணாமல் போனவர்கள் பற்றிய உண்மையை வெளியிடு!
- காணாமல் போனவர்களுக்கான பொறுப்பை ஆட்சியாளரே ஏற்றுக்கொள்!
- காணாமல் போனவரில் தங்கியிருந்த குடும்ப அங்கத்தவர்களுக்கான நட்டஈட்டை வழங்கு!

-காணாமல் போனவர்களின் பெற்றோர் சங்கத் தலைவர் விஜயதாச பத்திரனவின் கோஷங்களுடன் கடந்த 5ம் திகதி நுகேகொட திறந்த வெளி அரங்கில் காலை 10மணியளவில் சத்தியாக்கிரகப் போராட்டம் ஆரம்பமாயிற்று. சிறீலங்காவின் தூர இடங்களிலிருந்து 200க்கு மேற்பட்ட பெற்றோர்களும் 200க்கு மேற்பட்ட பல்கலைக் கழக மாணவர்களும் கலந்து கொண்ட இச் சத்தியாக்கிரகப் போராட்டத்தை மாணவர்-மக்கள் ஒத்துழைப்பு இயக்கம் ஒழுங்கு செய்திருந்தது.

'சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்' என்ற சிங்கள மொழியிலான பனர் ஒன்று மேடையில் அழகாகத் தொங்க விடப்பட்டிருந்தது.

அரச படைகளினதும் பொலிஸாரினதும் நடவடிக்கைகளால், அரசியல் காரணங்களுக்காக 'காணாமல் போன' தமது பிள்ளைகளை விடுவிக்கக் கோரும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட இச் சத்தியாக்கிரகம் சுழற்சி முறையில் நடத்தப்பட்டது.

சத்தியாக்கிரக ஆரம்பத்தில் தலைவரால் எழுப்பப்பட்ட கோஷங்களை முஷ்டியை உயர்த்தியபடி அனைவரும் உரத்து எழுப்பினர்.

ஒரு மணி நேரத்துக்கு ஒரு முறை மாறிமாறிப் பல பெற்றோர்கள் பங்குபற்றிய இச் சத்தியாக்கிரகப் போராட்டத்தின் போது தமது பிள்ளைகளை இழந்த பெற்றோர்கள் தமக்கு அரசால், இராணுவத்தால், பொலிஸால் இழைக்கப்பட்ட கொடுமைகளை கண்ணீர் மல்க எடுத்துரைத்தனர். இந்தப் பேச்சுக்களின் போது 'திறந்த வெளியில் இருந்த 500க்கும் மேற்பட்ட தாய் தந்தையர், சகோதரிகள் விக்கி விக்கி அழுவதைக் காணக் கூடியதாக இருந்தது.

இப் பேச்சுக்களை கூட்டத்தினர் கேட்க முடியாதபடி ஒலிபெருக்கி பொலிஸால் தடைசெய்யப்பட்டிருந்த போதும் சிறிய ஒலிபெருக்கிகளைப் பாவித்து தமது உரைகளை அவர்கள் ஆற்றினர்.

சத்தியாக்கிரகத்தின் போது நடந்த பத்திரிகையாளர் மகாநாட்டில் மாணவர்-மக்கள் ஒத்துழைப்பு இயக்கப் பிரதிநிதி ஒருவர் கூறுகையில் '1948இல் கிடைத்ததாகக் கூறப்படும் சுதந்திரத்தின் பின்னர் அரசுக்கெதிராகப் போராடுபவர்களை படுகொலை செய்வது சாதாரண நடைமுறையாகியது'.

''1971, 1983, 1989ம் ஆண்டுகளில் இராணுவத்தாலும் இனந் தெரியாத ஆயுதபாணிகளாலும் படுகொலை செய்வது, கைது செய்வது, கடத்துவது, துன்புறுத்துவது, எரிப்பது என்பன சாதாரணமாகியது''.

''நாட்டின் அரசியல் சாசனத்தில் சரத்து 19க்கு இணங்க பேச்சுரிமை, எழுத்துரிமை, ஒன்றுகூடுதல் என்பன அங்கீகரிக்கப்பட்டுள்ளன. ஆனால் எல்லாம் எழுத்துக்களில் மட்டுமே உள்ளன. அது மட்டுமல்ல சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட அரசியல் கைதிகளுக்கான சலுகைகள் எதுவும் செய்யப்படவில்லை. அது மட்டுமன்றி குற்றச்சாட்டுகளின்றி அல்லது குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாமல் நீண்டகாலமாக தடுத்து வைக்கப் பட்டுள்ளனர்.

''காணாமல் போனவர்கள் தொடர்பாக எடுத்த கணிப்பெடுப்பின் மூலம் நாட்டில் 250 பேருக்கு ஒருவர் வீதம் காணாமல் போயுள்ளனர். இவர்களின் உண்மையான நிலைமையையும் இதுவரை அறிய முடியாதுள்ளது''



சத்தியாக்கிரகம் இருக்கும் பெற்றோர்

''தடுப்புக்காவலில் உள்ளோரை புனரமைப்பு என்று மறுவாழ்வுத் திட்டம் அமைப்பதும் விடுதலை செய்வதும் பின் கைது செய்வதும் வழமையான நடவடிக்கைகளாக உள்ளன. இதனால் இவர்களது குடும்பங்களே அழிந்து போயுள்ளன''

''ஜனாதிபதி பிரேமதாசாவால் காணாமல் போனவர்கள் தொடர்பான கமிஷன் ஒன்று அமைக்கப்

.''காணாமல் போனோரின் பெற்றோர் சங்கத் தலைவர் விஜயதாச பத்திரனவிடம் இது தொடர்பாக உரையாடிய போது ''எனது மகன் ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில் சாதாரண தொழிலாளியாக வேலை செய்தவர். பொது மக்கள் நலன்புரிச் சங்கத்தின் செயலாளராகவும் இருந்தார். இதனால் தொழிலாளர்களின் உரிமைகள், பிரச்சினைகள் தொடர்பாகவும் ஈடுபாடு செலுத்தினார்.

''இவர் 1989 டிசம்பர் 10ம் திகதி ஆயுதம் தாங்கிய குழுவினரால் கொண்டு செல்லப்பட்டார்.' இன்றைய' அரசாங்கத்தின் சபாநாயகராக இருக்கும் எம்.எச். முஹமட் எமக்குத் தெரிந்தவர். அவரிடம் கூறினோம். அவர் கூட இது தொடர்பாக ஒன்றும் செய்யவில்லை. இதே போல்தான் மற்ற எதிர்க் கட்சித் தலைவர்களும்

மல் போயுள்ளனர்'' என்று கூறினார்.

சரிநிகர்: ''இப்பொழுது நடைபெறும் யுத்தம் தொடர்பாக என்ன நினைக்கிறீர்கள்?''

பத்திரன: ''எமது பிள்ளைகளை எப்படி இல்லாமல் செய்தார்களோ அதே போல் வடக்கிலுள்ள பெற்றோர்களின் பிள்ளைகளையும் இல்லாமல் செய்வதற்கே இந்த யுத்தம். மொத்தத்தில் அரசுக்கெதிரான நிலைப்பாடுடைய இளைஞர்களை கொல்லுவதற்கே இந்த யுத்தம் நடைபெறுகிறது''.

சரிநிகர்: ''இந்த யுத்தத்தை எப்படி நிறுத்தலாம்?''

பத்திரன: ''தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொண்டு அவர்களை ஒரு இனமாக அங்கீகரிக்க வேண்டும். இப்படியான அரசியல் தீர்வை முன்வைக்காத வரை யுத்தம் நடைபெறுவதைத் தவிர்க்க முடியாது.

இந்த அரசாங்கம் சிங்கள மக்களிடம் சிங்கள பௌத்தம் என்ற குறுகிய இனவாதக் கருத்தை துட்டகைமுனு காலத்தை உதாரணம் காட்டிப் பரப்புகின்றது.

## யுத்தத்திற்கு....

கின்றது. புலிகளை இராணுவ ரீதியில் வெற்றி கொள்ள வடக்கு மக்களை ஆட்கொள்ளுவது அவசியம் என்பதை அது தெளிவாகப் புரிந்து வைத்துள்ளது. இதற்கேற்ற விதத்தில் அது தன்னை விடுவிக்கப்பட்ட பிரதேசத்து மக்களின் காவலனாகக் காட்டிக் கொள்வதில் மிகத் தேர்ச்சியுடன் செயற்பட்டு வருகிறது. வவுனியாவுக்கு வடக்கே உள்ள மக்கள் வவுனியாவுக்கு வந்ததும் சுதந்திரக் காற்றை சுவாசிப்பதாக உணர வேண்டும் என்பதில் அது மிகவும் கவனமாக உள்ளது. கிழக்கில் இத்தகைய தேவைகள் இருப்பதாக அரசோ இராணுவமோ நினைக்கவில்லை. வவுனியா இராணுவம் இத்தகையதொரு திட்டத்துடன் இருப்பதால் பத்திரிகையாளர்கள் என்று கூறி நாம் சந்திப்பது ஒன்றும் கடினமானதாக இருக்கவில்லை.

சந்தித்த இராணுவ அதிகாரிகளும் மிகக் கவனமாகவும், நிதானமாகவும் பேசிக் கொண்டனர். பிரச்சினையை யுத்தத்தின் மூலம் மட்டுமே தீர்த்து விடலாம் என்று அபிப்பிராயப்படுவதாக அவர்களது பேச்சுத் தொனி அமைந்திருக்கவில்லை. சில அரசியல் விட்டுக் கொடுப்புகளும் அவசியம் என்ற கருத்துப்படவும் பேசினார்கள்.

இனப் பிரச்சினை தொடர்பான கேள்வியொன்றுக்கு பதிலளித்த ஒரு அதிகாரி இவ்வாறு குறிப்பிட்டார்; ''பிரச்சினைகளுக்குப் பல முகங்கள் உண்டு. அவற்றில் ஒன்று இது'' எனக் குறிப்பிட்டார்.

பிரச்சினைகளுக்குப் பல முகங்களாம்,
சரி,
யுத்தத்திற்கு எத்தனை முகங்கள்?

## எங்களுடைய...

நேரடியாகவே சந்தித்த போது, 1984ம் ஆண்டில் வேப்பங்குளத்தில் இருந்து இங்கு வந்து குடியேறிய சுப்ரமணியம் என்பவர் கருத்துத் தெரிவிக்கையில் ''எனக்கு ஒன்றரை வயதுக் குழந்தை உட்பட ஆறு பிள்ளைகள் இருக்கிறார்கள். நாம் குடிபெயர்ந்து வந்த போது கால் ஏக்கர் காணியை அரசாங்கம் கொடுத்தது.

இதில் சிறுபகுதியில் பயிர் செய்வதன் மூலமும் கூலி வேலை செய்வதன் மூலமுமே வாழ்க்கை நடாத்துகிறோம். நாம் இங்கிருந்து வெளியேறினால் மீண்டும் எமக்கு காணியோ வீடோ கிடைக்கும் என்பதற்கு எந்தவித உத்தரவாதமும் கிடையாது'' எனத் தெரிவித்தார்.

ராமய்யா என்பவர் கூறுகையில் '' எனக்கு நான்கு பிள்ளைகள் உள்ளனர். இவர்களில் 3 பிள்ளைகள் படிக்கிறார்கள். நாம் இருக்கும் கால் ஏக்கர் காணி காசு கொடுத்து வாங்கியது. பத்தாயிரம் ரூபா முதல் போட்டு பயிர் செய்கிறோம். அதன் பயனைக் கூட அனுபவிக்க வில்லை. இந்நிலையில் எம்மை வெளியேறும்படி கூறினால் என்ன செய்வது. இறுதிவரை எம் காணியை விட்டு வெளியேற மாட்டோம். 1977ம் ஆண்டில் இருந்தே காடுகளைக் காணிகளாக்கி பல்வேறு இழப்புகள், துன்பங்களுக்கு மத்தியில் இங்கு வாழ்கிறோம். இது எங்களுடைய மண். இங்கிருந்து எங்களை யாராலும் வெளியேற்ற முடியாது'' எனத் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் வீடமைப்புத் திட்டத் திறப்பு விழாவின் போது அயலில் இந்தக் குடிசை வீடுகள் இருப்பது அசிங்கமானது என்று அரசு கருதுவதும், இவர்கள் தமிழர்கள் தானே இங்கிருந்து வெளியேற்றினால் வீடமைப்புத்திட்டத்தின் கீழ் வீடு கொடுக்க வேண்டிய அவசியமும் ஏற்படாது என்று அரசு கருதுவதும் தான் இந்த திடீர் வெளியேற்ற உத்தரவுக்கான காரணம் என்று அபிப்பிராயப்பட்டார் இக் கிராமத்தில் நீண்டகாலமாகக் குடியிருக்கும் இன்னொரு கிராமவாசி.

## பிள்ளையாருக்கு..

போடப்பட்ட இரண்டு குண்டுகள் உள்ளிருந்த 27 பேரில் 20 பேரைப் பலியெடுத்தது. பிறிதொரு குண்டு மக்களின் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மீது போடப்பட்டதாயினும் அது இலக்குத் தவறிப் பாதையில் வீழ்ந்தமையால் அங்கிருந்த உணவுப் பொருட்கள் பாதுகாக்கப்பட்டன.

சாவகச்சேரியின் பின்புறமாக உள்ள கச்சாய்க் கரையோரப் பகுதி வாழ் மக்கள் அகோரமான குண்டுத் தாக்குதல்கள் காரணமாக இடம்பெயர்ந்துள்ளனர். அருகில் உள்ள திறந்த வெளிகளுக்கும், தென்னந் தோப்புக்களுக்கும் சென்ற இவர்கள் மீது எரிகுண்டுகளை விமானத்திலிருந்து வீசியுள்ளனர்.

மட்டுவில் துர்க்கை அம்மன் கோவிலும் அதனை அண்டிய பகுதிகளும் குண்டுகளால் சேதமாக்கப்பட்டன. அத்துடன் கிளாலிப் பிள்ளையாரையும் இராணுவத்தினர் விட்டு வைக்கவில்லை. கோயிலுடன் சேர்த்து பிள்ளையார் விக்கிரகமும் எரிக்கப்பட்டுள்ளது.

குறுகிய நேரமே தரித்து நின்ற இராணுவத்தினர், கொண்டு செல்லக்கூடிய படகுகள் தவிர்ந்த ஏனையவற்றை எரித்து விட்டுச் சென்றுள்ளனர். இப்படகுகள் யாவும் பொது மக்களுடையது என்பது குறிப்பிடத்தக்கது.

சரிநிகர் மாதமிருமுறை இதழ் இல.18/2 அலோசாலை கொழும்பு 03, இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் சார்பில் வெளியிடுபவர் ச. பாலகிருஷ்ணன்.



அச்சுப்பதிவு: 334,காலி வீதி இரத்மலானை நவகம அச்சகம். 1993.09.01